# தென்னாசியக் கவிதைகள்



மொழிபெயர்ப்பு

சோ. பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாசியக் கவிதைகள்

13 JUN 2019
LIBRARY
699717
24/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியரின் பிற ஆக்கங்கள்

- வடக்கிருத்தல்
- ஆபிரிக்கக் கவிதை
- தென்னிலங்கைக் கவிதை
- நினைவுச் சுவடுகள்
- சுவட்டெச்சம்
- பர்மிய பிக்கு சொன்ன கதைகள்
- Shanmugalingam: Plays
  Tamil Short stories from Sri Lanka
- Sri Lankan Tamil Poetry

13 JUN 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாசியக் கவிதைகள்

மொழிபெயர்ப்பு

கவிஞர் சோ.பத்மநாதன்

University of Peradeniya
13 JUN 2019
LIBRARY

எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிட்டட்

699717
24/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

First Print - 2017
Second Print - 2018
Thennasiak Kavithaikal

© S. Pathmanathan

ISBN 978-955-30-8568-9

Page setting
S. Godage & Brothers (Pvt) Ltd.

Typing by
R. Thadchayini

Cover Design by
Ravi Babu (Nelloor)

Published by
S. Godage & Brothers (Pvt) Ltd.
661/665/675, P. de S. Kularatne Mawatha, Colombo 10, Sri Lanka.

Printed by
Chathura Printers
69, Kumaradasa Place, Wellampitiya, Sri Lanka.

R-3372/3394/600

முதற் பதிப்பு 2017
இரண்டாம் பதிப்பு - 2018
தென்னாசியக் கவிதைகள்
ISBN 978-955-30-8568-9

© சோ. பத்மநாதன்

பக்க வடிவமைப்பு
எஸ்.கொடகே சகோதரர்கள் (பிரைவேட்) லிமிட்டட்

அட்டைப் படம்:
ரவி பாபு (நெல்லூர்)

கணினி அச்சுக்கோப்பு
ஆர். தாட்சாயினி

வெளியீடு
எஸ். கொடகே (சகோதரர்கள்) பிரைவேட் லிமிட்டட்
675, பீ. டீ. எஸ் குலரத்ன மாவத்தை, கொழும்பு- 10.

அச்சுப் பதிவு
சதுர அச்சகம்
69, குமாரதாஸ பிளேஸ், வெல்லம்பிட்டிய.
R-3372/3394/600

13 JUN 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dedicated to
'Padma Shri' **Ajeet Cour**
as a token of appreciation
of her contribution to
Literature of the SAARC region

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Foreword by Dr. Sitakant Mahapatra

I met the editor of this Anthology in the SAARC Literature Festival. He had indicated his desire to publish a small anthology of poetry by the participating poets in the festival. I am glad 'Sopa' as he is fondly called, is now bringing out this anthology.

It is a small anthology of around 86 poems. The participating poets had recited their poems in the afternoon sessions during the festival. Representation of the poets at the anthology is fairly diverse. Since the participants are some of the major figures in their respective languages, and this anthology is the product of efficient editing, I am sure it will reach out not only the future participants of SAARC festival but also will reach out to a larger readership in their countries. That is one of the most useful purposes of bringing together creative writers in a festival. Needless to say, the poems have diverse themes, several styles, and various levels of articulating emotions. This anthology will no doubt be released at the SAARC conference in Delhi next year.

Sri Lanka is a country where literature, particularly poetry is extremely popular. This anthology will give them an opportunity to read some of the finest poets of India, Pakistan, Bangladesh, Nepal and other countries in Tamil translation. It would have been even more useful if the English versions of the poems also accompanied side by side the Tamil.

The translator deserves thanks from all poetry lovers.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Translator's note

Plurality and diversity contribute to the richness of SAARC poetry. It embodies 'the aspirations and struggles, the dreams and anxieties, the values and accretions, the sensitiveness and nightmares of the people and societies which inhabit the region'[1]

The poetry of this region is an amalgum of history, myth and socio – political upheavals. 'poetry, is one of the finest flowers of civilization and, in spite of all the assaults and hurts, it blooms eternal'[2]

The SAARC region witnessed the conflict between East and West, Tradition and Modernism, Colonialism and Liberation. In the turmoil 'Poetry itself became a battleground'. 'The emerging Poetics of liberation was also a poetics of resistance'[3]

SAARC poetry gave expression to the anguish and yearnings of the people of the region. It has been able to cut across geographical boundaries and political differences. It has come to stay as 'a continuum of humaneness, of shared values and anxieties, mutually relevant insights and revelations[4]

Poets have refused to succumb to racial fanaticism and religious fundamentalism. They have always stood by the

---

1 Aject Cour and Ashok Vajpeyi, Mapping the Poetry of SAARC in *Beyond Borders*: An Anthology of SAARC Poetry (2005), FOS-WAL, Delhi.p.13

2 Ibid p.14

3 Ibid p.15

4 Ibid p.17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

weaker and marginalized sections of Society like dalits, women and children. Poetry has been the voice of the oppressed.

Yet Poetry has not lost its touch with Beauty. The vast output of Love poetry in all language is proof enough.

Nor have our poets given up Religion and Spirituality. The Sufis and the Siddhas have used poetry effectively to reach out to the masses.

So, we of South Asia have a rich tradition of poetry coming down to us from Vedic times. We celebrate the diversity of landscape, languages and culture.

The foundation of SAARC writers and Literature has been doing a great service to the cause of South Asian Literature since its inception. It has been holding Literature Festivals annually and publishing anthologies regularly. It wasn't that plain sailing. There were challenges which only the indomitable will and courage of our mother figure Ajeet Cour and the support of her daughter Arpana could meet.

It was my good fortune to be inducted into FOSWAL in 2013 Since then I have been attending SAARC Literature Festival and I was able to meet and interact with South Asian poets.

Goethe Institut invited me in 2016 to participate in its Poets Translating Poets project in Frankfurt, Karlsruhe, Mumbai and Chennai. It gave me the opportunity to interact with fellow poets, from South Asia. It was in Mumbai I met Sumantha, Yashodara, Neerav, Hareesh and Sukumaran. I have made use of their poems. I thank them and the G.I.

I have already translated African poetry and Sinhala poetry into Tamil. But over the last few years my mind was preoccupied with translating SAARC poets. This anthology is a fruit of that fervor. It is a labour of love. I don't claim this



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

to be representative. Whatever material I had access to I avidly read. And I have tried my hand at whichever poem I thought could survive translation. I owe this duty to my Tamil readers. This work might have its shortcomings but it could be a starting point for future translators of South Asian Poetry.

I dedicate this volume to Ajeet Cour as a token of appreciation of her contribution to the Cause.

I am thankful to Ajeetji for having laid at my disposal a good number of FOSWAL publications from which I could cull the poems.

Dr. Sitakant Mahapatra is the greatest among the living poets of South Asia. His Foreword is both a blessing and an honour. I thank him.

The cover painting is by Ravi Babu of Nellore, India, an artist whom I have not met at all. I saw the painting in Dr. Perugu Ramakrishna's possession. It was he who got the artisit's permission to use it. I am grateful to both of them.

I thank Godage Bros for having undertaken the publication of this collection. Deshamanya Godage is doing his best to foster amity and understanding between the two communities of Sri Lanka through Literature. Our nation is indebted to him.

It is difficult to work with me because I am not organized. Ms R. Thadchayini not only did the typesetting but also managed to trace some poems that have fallen by the wayside because of my carelessness.

I am very much obliged to her.

"Eraham"
Potpathy Rd,
Kokuvil, Sri lanka.

S.Pathmanathan (Sopa)
e-mail: spathma149@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி பெயர்ப்பாளன் குறிப்பு

சார்க் பிராந்தியம் பன்மைத்துவத்துக்குப் பேர் பெற்றது. வரலாறு, தொன்மம், சமயம், கலை, அரசியல் ஆகிய துறைகளின் கூட்டு அது. நாகரிகத்தின் விகசிப்புக்களில் ஒன்றாகிய கவிதை இங்கு மலர்ந்து ஓங்கி வளர்ந்துள்ளது. நாடக அரங்கிலும், இசையிலும், நடனத்திலும், நாட்டாரியலிலும், வழிபாட்டு முறைகளிலும் - முக்கியமாக அன்றாட வாழ்வில் - கவிதை நீக்கமற வியாபித்துள்ளது.

ஒஷ்விற்ஸுக்குப் பிறகு கவிதை சாத்தியமில்லை என தியோடோர் அடோர்னோ சொன்னார். ஆனால் ஒஷ்விற்ஸுக்கும் ஹிரோஷிமாவுக்குப் பின்னும் கூட கவிதை தாக்குப் பிடித்து வாழ்கிறது. "மோசமான காலங்களிலும் கூட மோசமான காலங்கள் பற்றிய கவிதை இருக்கும்" என்ற ப்றெ.்ச்ற் இன் கூற்று அர்த்தமுள்ளது, ஆழமானது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி விடுதலைப் போராட்டங்களையும், சமத்துவத்துக்கும் நீதிக்குமான இயக்கங்களையும் கண்டது. மேற்கத்திய கொலனித்துவ சக்திகளும் நவீனத்துவமும் தென்னாசிய நாடுகளின் சமய நம்பிக்கைகளையும், பண்பாட்டுக் கூறுகளையும், மொழிகளையும், கலைகளையும், தாக்கின. கிழக்குக்கும் மேற்குக்கும், பாரம்பரியத்துக்கும் நவீனத்துவத்துக்கும், ஆத்மிகத்துக்கும் லௌகிகத்துக்கும் இடையிலான இம்மோதலுக்குக் கவிதை களமாய் அமைந்தது. தாகூரும், பாரதியும், இக்பாலும், வள்ளத்தோலும் அக்களத்தில் முன்னோடிப் போராளிகளாய் விளங்கினர்.

எங்களுடைய காலத்தில் ஷம்ஸுர் ர.்மானும் சீதாகந்த் மஹாபத்ராவும் மகாகவிகளாக ஆராதிக்கப்படுகின்றனர். அநாமிகா, சம்யுக்த தாஸ் குப்தா, சல்மா முதலியோர் பெண்களுக்கு நீதிகோரி படைத்துள்ள கவிதைகள் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

சார்க் கவிதைகள் இந்தப் பிராந்திய மக்களின் அபிலாஷைகளையும், ஏக்கங்களையும், நிராசைகளையும் தோல்விகளையும் வெளியிடும் அதேவேளையில், நாடு, இனம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதம் என்ற எல்லைகளைத் தாண்டி, மானுட நேயத்தையும் மனித விழுமியங்களையும் உயர்த்திப் பிடிப்பதில் முன்னின்று வந்துள்ளன.

சமூகத்தின் நலிந்த, ஒடுக்கப்பட்ட பிரிவினராகிய தலித்துக்கள், பெண்கள், சிறுவர் முதலியோர் மீது எமது கவிஞர்கள் பரிவுகாட்டியே வந்துள்ளனர். மத அடிப்படைவாதத்தையோ இனவெறியையோ அவர்கள் தூண்டி விட்டதாக அல்லது அச்சக்திகளோடு இணங்கிப் போனதாக வரலாறில்லை.

இப்படிச் சொல்வதால் தென்னாசியக் கவிதை பிரச்சினைகள் மீதுதான் மையங்கொண்டுள்ளது என்று பொருளல்ல. அழகோடு அதற்குள்ள தொடர்பு விடுபட்டுப் போகவில்லை. நம் கவிதைகளில் கணிசமானவை இன்னும் காதற் கவிதைகளாகவே உள்ளன. அதுபோலவே பக்தியும் ஆன்மிகமும் தென்னாசியக் கவிதையின் இழைகளாக ஓடிக்கொண்டிருக்கின்றன. சூ∴பிகளும் சித்தர்களும் மிக எளிமையான கவிதைகள் மூலம் பாமரமக்களையும் சென்றடைந்துள்ளனர்.

ஆக, தென்னாசியக் கவிஞர்களாகிய நாம் வேதகாலத்திலிருந்து வரும் ஒரு நீண்ட கவிதைப் பாரம்பரியத்தின் வாரிசுகள். தரைத்தோற்றத்தால், மொழியால், பண்பாட்டால் எமக்குள் முகம்காட்டும் பன்மையை நாம் கொண்டாடுகிறோம்.

FOSWAL எனப்படும் சார்க் நாடுகளின் எழுத்தாளர் அமைப்பு அதன் ஆரம்ப காலத்திலிருந்து இலக்கியத்துக்கு அரும்பணியாற்றி வருகின்றது. வருடாந்தம் இலக்கிய விழாக்களை நடத்துவதோடு அரிய நூற்றொகுதிகளையும் கிரமமாக வெளியிட்டு வருகிறது. இவ்வியக்கத்தைக் கட்டிக்காத்து வருபவர் முதுபெரும் பஞ்சாபி எழுத்தாளர் அஜீத் கௌர். சிறுகதைத் தொகுதிகள் பன்னிரண்டும் நாவல்கள் ஐந்தும் வேறு பல நூல்களும் எழுதியவர். பல நாடுகளுக்கு இந்திய இலக்கியத் தூதராகச் சென்றவர். அவர் மகள் அர்ப்பணா உலப் புகழ் பெற்ற ஓவியர். இவ்விரு பெண்களும் தம் பொருளையும் பொழுதையும் தென்னாசிய இலக்கியத்துக்குச் செலவிடுகின்றனர்.

அஜீத்ஜி தந்துதவிய FOSWAL வெளியீடுகளூடு யாத்திரை செய்து நான் தேர்ந்த கவிதைகளே இத்தொகுதியில் பெரும்பான்மை. இலக்கிய விழாக்களில் நான் சந்தித்த சில கவிஞர்களிடம் நேரடியாகவே சில அரிய கவிதைகளைப் பெறமுடிந்தது. அப்படிக் கிடைத்தவை தாம் ஜயந்த மகாபத்ர, மற்றும் சாதிக், நகிப் மனலாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேஷப் சிக்தெல், தயா திசாநாயக்கா, பத்மஜா ஐயங்கார், ஹரசித் பாலா, வர்ஷா தாஸ், தாரிக் சுஜாத் ஆகியோருடைய கவிதைகள்.

2016இல் ஜேர்மானிய கேர்ட் நிறுவகம் (Goethe Institut) ‘கவிஞர்களை மொழிபெயர்க்கும் கவிஞர்கள்’ (PTP) என்ற செயற்றிட்டத்தை முன்னெடுத்தது. தென்னாசியாவைச் சேர்ந்த 51 கவிஞர்களுள் ஒருவனாகப் பங்குபற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்பொழுது சந்தித்த சுமந்த மூகோபாத்யாய, யசோதரா ராய் சௌத்ரி, நீரவ் பட்டேல், ஹரீஷ் மீனாஷ்று, ஆரியவன்ஸ றணவீர, சுகுமாரன் முதலியோரும் தங்கள் கவிதைகளை உதவினர்.

இவ்வாறு சேகரித்த கவிதைகளைப் படித்துத் தேர்ந்து மொழிபெயர்த்தவை கொண்டதே இத்தொகுதி. வாசகனுடைய ரசனைக்கேற்றனவாய் மொழிபெயர்ப்புக்கு நின்றுபிடிக்கக் கூடியவற்றை தேர்ந்து மொழிபெயர்த்துள்ளேன்.

தமிழ்க் கவிதைகளின்றி ‘தென்னாசியக் கவிதைகள்’ என்ற தொகுதி முற்றுப்பெறாது. ஆதலின் 75 மொழிபெயர்ப்புக் கவிதைகளோடு, தமிழில் எழுதப்பட்ட 09 கவிதைகளையும் சேர்த்துள்ளேன்.

இதைவிட, தரமான மொழிபெயர்ப்புக்கள் வரலாம். தென்னாசியக் கவிதைகளைத் தமிழாக்கம் செய்யும் முயற்சியில் இஃதோர் ஆரம்பப் புள்ளியே. மற்றைய மொழிபெயர்ப்பாளர்களுக்கு இம்முயற்சி தூண்டுதலாய் அமையுமாயின் என் நோக்கம் நிறைவேறியதாய்க் கருதுவேன்.

பல கவிதைத் தொகுதிகளை தந்துதவிய அன்னை அஜீத் கௌருக்கும், நூலின் அட்டைக்குத் தன் ஓவியத்தைப் பயன்படுத்த அனுமதி தந்த நெல்லூர் ரவி பாபுவுக்கும் என் மனமார்ந்த நன்றி.

வாழும் கவிஞர்களுக்குள் முதன்மை வகிப்பவரும் உலக மகாகவிகளுள் ஒருவராக மதிக்கப்படுபவருமான கலாநிதி சீதாகந்த் மஹாபத்ர அவர்களை சார்க் இலக்கிய விழாக்களிலும் ஜெய்ப்பூரில் நடைபெற்ற சூஃபி விழாவிலும் சந்தித்து உரையாடக் கிடைத்ததைப் பெரும்பேறாகக் கருதுகிறேன். அப்பெரியார் இத்தொகுதிக்கு வழங்கிய அறிமுகக் குறிப்பை ஓர் ஆசீர்வாதமாகக் கருதுகிறேன்.

இத்தொகுதியை வெளியிட முன்வந்த கொடகே வெளியீட்டு நிறுவனத்துக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வாசிப்புப் பரப்புக்குள் அகப்பட்ட பிறமொழிக் கவிதைகளுள் பிடித்தவற்றை அவ்வப்போது மொழிபெயர்ப்பது என் வழக்கம். சிறு சஞ்சிகைகள் ஆக்கங்கள் கோரும்போது அவற்றை அனுப்புவேன். வெளிவந்தவற்றை ஒழுங்காகக் கோவைப்படுத்தி வைப்பதில்லை. இவ்வாறு கைநழுவிப்போன சில கவிதைகளைத் தேடியெடுத்து உதவியதோடு, கணினி அச்சுக்கோப்பையும் செய்த செல்வி இ.தாட்ஷாயினிக்கு என் கடப்பாடு பெரிது.

*"ஏரகம்",*
*பொற்பதி வீதி,*
*கொக்குவில்,*
*இலங்கை.*

*கவிஞர் சோ. பத்மநாதன் (சோ.ப)*
*மின்னஞ்சல்* - spathma149@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Acknowledgements

The translator - editor has chosen poems from the following FOSWAL publications.

Beyond Borders - An Anthology of SAARC Poetry (2002& 2005) - ed. Ajeet Cour & Ashok Vajpeyi

Our Voice – An Anthology of SAARC Poetry( 2004) ed. Ajeet Cour & Nirupama Dutt

Sweet and Sour dreams (ed. Ajeet Cour ) 2010

Shamsur Rahman : A witness of His Times (2002&2004) ed. Ajeet Cour and Pankaj Bhan

Padma Meghna Jamuna (ed.Kaiser Haq) 2009

beyond borders, the saarc Journal Vol 2 No 3, Vol 5 No 1

Kunapipi, Journal of Post-Colonial Writing , Vol xix No 3 ed Shirley Chew (1997)

Amaravati Poetic Prism 2016 – International Multilingual Poetry - An Anthology (CCVA)

Winged Reason by K.V. Dominic, AUTHORS PRESS, Delhi (2010)

Thirteen Poems of Bimal Guha, Shambesh, Dhaka, 2011

A tree with a thousand wings by Harish Meenashru, Lajja communications, Vallabh Vidyanagar (2008)

severed tongue speaks out by Neerav Patel, Ahmedabad (2013)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The editor – translator gratefully acknowledges the co –operation of the following individual poets who handed him / mailed him their poems: Jayanta Mahapatra, Harashit Bala, Mahboob Saadiq, Nagib Manalai, Keshab Sigdel, Anupam Roshi, Tarik Sujat, Sumanta Mukhopadhyay, Yashodhara Ray Chaudhuri and Daya Dissanayake.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The poets translated

| | |
|---|---|
| 1. Abeysinghe W.A | A daughter without a name |
| 2. Abhi N.Subedi | Mason and the street |
| 3. Adyasha Das | The colour of Love |
| 4. Ajantha | Sleep |
| 5. Ajanthakumar.T | Forsaken by the gods |
| 6. Attiya Dawood | To my Daughter |
| | Boundaries of Love |
| 7. Anaar | The first taste |
| 8. Anamika | The husband's woman |
| | The door |
| 9. Anoop Kumar | That is why the Earth.. |
| 10. Anupam Joshi | Last war |
| 11. Ariyawansa Ranaweera | The circus clown |
| 12. Banira Giri | Woman |
| 13. Balamani Amma.N | The story of the Axe |
| 14. Bimal Guha | A place of pilgrimage for Poets |
| 15. Daya Dissanayake | Valmiki |
| | Research |
| | Novelist |
| | felix culpa |
| 16. Dilara Hashem | Love |
| 17. Dominic K.V | Massacre of cats |
| 18. Gopichand.P | Cactus |
| 19. Harashit Bala | For a ray of light |
| 20. Harish Meenashru | Love hymns |
| 21. Jayanta Mahapatra | A story |
| 22. Jeyaseelan.T | Residue of dreams |
| 23. Jharna Rahman | Fragrance of kisses |
| 24. Karunakaran | Stars and Star hotels |
| 25. Keshab Sigdel | The colour of the sun |
| 26. Krishna Bose | Hymn to Goddess |
| | Donation |
| 27. Kshma Kaul | The Exile |
| 28. Kumara Hettiarachchi | The Story of the Banyan tree |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 29. | Mahboob Sadiq | Return to me |
| | | Hope against hope |
| 30. | Mahagam Sekare | The Aukana Statue |
| 31. | Mohammad Nurul Huda | Stalemate or Not |
| | | What I see |
| 32. | Monika Ruwanpathirana | Time |
| 33. | Muraleetharan R.S | Haiku |
| 34. | Nagasusheela | Don't forget |
| 35. | Nagib Manalai | History |
| | | Life |
| 36. | Neerav Patel | Me and my old woman |
| 37. | Padmaja Iyengar | Finite and the Infinite |
| 38. | Parakrama Kodituwakku | An unfinished lesson |
| 39. | Pathmanathan S. (Sopa) | Feminism – my own version |
| 40. | Perveen Shakir | Where do I figure in your life, my Love? |
| 41. | Preeta Chandran | Like the Kite |
| 42. | Prerna Singla | The shore and the mocking bird |
| 43. | Saad Ashraf | The wounded heart |
| 44. | Sarmad Sehbai | Genesis |
| 45. | Sanjukta Dasgupta | My fifty years old woman |
| 46. | Sankara Kurup | Master Carpenter |
| 47. | Sarath Amunugama | Isidasi |
| 48. | Sumanta Mukhopadhyay | Religion |
| 49. | Surjit Patar | My mother and my poem |
| 50. | Satchithanandan | Prostitute to her daughter |
| | | Misplaced objects, |
| | | The mad |
| | | Kiss |
| | | Standing man |
| 51. | Savithri Rajeevan | The idol |
| 52. | Savita Singh | Whose woman am I? |
| 53. | Shakeela Wajadi | Wounded bird |
| 54. | Shamsur Rahman | Words of a certain coachman's son |
| | | Mother |
| | | No, I shall not go |
| | | Sorrow |
| | | From the prison camp |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 55. Sitakant Mahapatra | Dhangda's love song |
| | Grandmother |
| | Death of Krishna |
| 56. Solaikiki | The lock |
| 57. Sukumaran | Command, you sovereign |
| 58. Tariq Sujath | I have embraced death before my birth |
| 59. Taslima Nasrin | Thereafter |
| 60. Thuvarakan | Kisses saved up by Amma |
| 61. Uday Prakash | Tibet |
| 62. Varsha Das | What is the temptation? |
| | Provided I keep walking |
| 63. VivimarieV. Medawattegedera | Old house |
| 64. Yashodhara Ray Chaudhuri | Viral video |
| 65. Zulfikar Ghose | Crows |


University of Peradeniya
13 JUN 2019
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

| | |
|---|---|
| Foreword by Dr. Sitakant Mahapatra | vii |
| Translator's note | ix |
| மொழி பெயர்ப்பாளன் குறிப்பு | xiii |
| Acknowledgements | xvii |
| The poets translated | xix |
| பெயரில்லாத மகள் | 1 |
| கொத்தனாரும் வீதியும் | 3 |
| காதலின் நிறம் | 5 |
| உறக்கம் | 7 |
| காத்திருந்தவளைக் கைவிட்ட கடவுளர் | 10 |
| என் மகளுக்கு | 12 |
| காதலின் எல்லைகள் | 13 |
| முதற் சுவை | 15 |
| கணவனுக்கினிய பெண் | 17 |
| கதவு | 20 |
| இது பூமியாய் இருக்கின்ற படியால் | 21 |
| இறுதிப் போர் | 24 |
| சேர்க்கஸ் கோமாளி | 26 |
| பெண் | 28 |
| கோடரியின் கதை | 30 |
| கவிஞர்களின் யாத்திரைக்குகந்த இடம் | 43 |
| வான்மீகி | 45 |
| ஆராய்ச்சி | 46 |
| நாவலாசிரியன் | 46 |
| ஃபீலிக்ஸ் கல்பா | 47 |
| காதல் | 48 |
| பூனைப் படுகொலை | 50 |
| கள்ளிச்செடி | 53 |
| ஓர் ஒளிக்கீற்றுக்காக | 55 |
| காதற் கீதம் - 11 | 58 |
| காதற் கீதம் - 14 | 58 |
| காதற் கீதம் - 24 | 58 |
| ஒரு கதை | 60 |
| கனவுகளின் மிச்சம் | 65 |
| முத்தங்களின் வாசம் | 67 |
| நட்சத்திரங்களும் நட்சத்திர விடுதிகளும் | 68 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சூரியனின் நிறம் | 69 |
| தேவி புகழ்ப்பா | 71 |
| அன்பளிப்பு | 73 |
| நாடு இழந்தோர் | 75 |
| ஆலமரத்தின் கதை | 77 |
| திரும்பி வா | 79 |
| தளரா நம்பிக்கை | 81 |
| ஓளக்கன சிலை | 83 |
| ஸ்தம்பிதம் அல்லது... | 85 |
| நான் காண்பது | 87 |
| காலம் | 88 |
| ஹைக்கூ | 90 |
| மறவாதே | 91 |
| வரலாறு | 93 |
| வாழ்க்கை | 94 |
| நானும் என் கிழவியும் | 95 |
| முடிவும் முடிவிலியும் | 98 |
| முற்றுப் பெறாத பாடம் | 100 |
| என்னளவில் பெண்ணியம் | 102 |
| உன் வாழ்க்கையில் நான் எவ்விடத்தில் வருகிறேன், அன்பே? | 106 |
| பட்டத்தைப்போல | 108 |
| கரையும் நையாண்டிப் பறவையும் | 109 |
| புண்பட்ட இதயம் | 111 |
| உற்பத்தியாகமம் | 112 |
| என் ஐம்பது வயதுப் பெண் | 113 |
| பெருந்தச்சன் | 115 |
| இஸிதஸி | 123 |
| சமயம் | 125 |
| அம்மாவும் என் கவிதையும் | 126 |
| விலைமாது தன் மகளுக்குச் சொன்னது | 127 |
| இடம்மாறி வைக்கப்பட்ட பொருள்கள் | 129 |
| பைத்தியங்கள் | 131 |
| நிற்கும் மனிதன் | 133 |
| முத்தம் | 135 |
| சிலை | 137 |
| யாருடைய பெண் நான்? | 139 |
| காயப்பட்ட பறவை | 142 |
| குதிரை வண்டிக்காரன் ஒருவனின் மகன் சொன்னது | 144 |
| தாய் | 147 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் போகமாட்டேன் 150
துக்கம் 153
சிறை முகாமிலிருந்து 157
தங்டாவின் காதற்கீதம் 160
பாட்டி 162
கிருஷ்ணனின் மரணம் 164
பூட்டு 166
பெருந்தகையே, உமது ஆக்ஞை! 168
பிறக்கு முன்பே மரணத்தைத் தழுவிவிட்டேன் 170
அதன் பின்பு 172
அம்மாவிடம் சேகரமாகிய முத்தங்கள் 174
திபெத் 176
என்ன சபலம்? 178
நான் நடந்து கொண்டிருக்கும்வரை 180
பழைய வீடு 182
நோய் பரப்பும் வீடியோ 184
காகங்கள் 186

கவிஞர்கள் பட்டியல் 188

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயரில்லாத மகள்

தந்தையில்லாத உனக்கு
ஒரு பெயர் தேவையில்லை
சின்னப் பெண்ணே
ஆளரவமற்ற தெருவில்
தொட்டிலில் அல்ல
குப்பைத் தொட்டியில்
உன்னை விட்டுப் போகவேண்டும்
நான்
இளமை நிரம்பிய இவ்வுடல்
வயதால் வாடி உதிருமுன்
நான் போயாக வேண்டும்
ஏனெனில்
தெருமுனையில்
எனக்காக
அவர்கள் காத்திருக்கிறார்கள்
உலகம் முழுவதும் உனக்குத் தாயாக
பால் சிந்தும் முலைகளை நீ உறிஞ்சும்
அந்த நாள் வரும்
உலகம் முழுவதும் உனக்குத் தந்தையாக
வலிய கரங்கள் உன்னைக் காக்கும்
அந்த நாள் வரும்
பெயரிடப்படாத என் பெண்ணே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாள் வரும்போது
வயதால் கண்கள் மங்கி
முதுகு வளைந்து
நான் உன்னிடம் வருவேன்
அந்த நாள் புலரும் வரை
தெருமூலைகளில் காத்திருப்பவர்களிடம்
நான் போகவேண்டும்
காமம்மிக்க அவர்கள் விடாயைத் தீர்க்க!

Sinhala original and English version :

W.A. Abeysinghe (Sri Lanka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்தனாரும் வீதியும்

தாமெல் வீதிக்கு மேலே
எழும்பும் கட்டிடத்தின்
நெற்றி முட்டான விளிம்பில்
குந்தியிருந்து வேலை செய்கிறான் அவன்
சுற்றுலாப் பயணிகளின் கண்களில்
காத்மண்டுவின் கிறங்க வைக்கும் காலம் மின்னுகிறது
கண்கள் உருள்கின்றன, தரிக்கின்றன
அண்ணாந்து வானை அளக்கின்றன
அவன் அவற்றை நிரப்புகிறான்
அவன் வான் வெளியின் நாயகன்
அவன் கட்டும் மாய நட்சத்திரங்களில்
ஒளி வீசப்போகின்ற
எதிர்காலத்துக்கும் இடையே
அவன் ஒரு தொடுப்பு

அச்சத்தோடு
அண்ணாந்து அவனைப் பார்க்கிறேன்
கொங்கிறீற் விளிம்பை கால் விரல்களால்
இறுகப் பிடித்தபடி
பாதிப்பிருஷ்டம் தெரிய
அவன் நிற்கிறான்
அவனுடைய நிச்சயமற்ற அடுத்த அடிபோல
அவனுக்கும் எனக்கும் இடையே
வானம் நடுங்குகிறது

இவ்வாறு நிச்சயமின்றித்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுலாத் தலமாகிய தாமெலில்
நேபாளத்தின், கிறுக்குப் பிடித்த கனவைக் கட்டி
எழுப்புகிறான்
திகிலோடு நான் கற்பனை செய்கிறேன்
காற்றுவெளியில் அவன்கால் சறுக்கினால்?
கூட்டம் ஒருகணம் பரபரப்படையும்
ஆனால்
ஒரு விண்கல் போல
பபிலோனின் தொங்குதோட்டத்தை
ஷாஜஹானின் கனவு தாஜ் ஐ
மிலானோவின் அற்புதத்தை
டுலமோ சிங்தர்பாரை
வேஸைய் அரண்மனையை
இன்னும் பலவற்றை
அற்ப ஊதியத்துக்குக் கட்டிய முன்னோடிகள் போல
இவனும் மறைந்துவிடுவான்!
இக்கட்டிடத்தின் கீழ்
ஒரு கோப்பிக்கடையில் நிற்கையில்
நகரும் தெருவுக்கும் உன் கண்களுக்கும் இடையே
வில்லாய் வளையும் கனவுகளின் விளிம்பில்
பாதுகாப்பின்றி நிற்கும் உணர்வு ஏற்படுகிறது

Nepali original : Abhi N.Subedi (Nepal)
English Translation : Ann Hunksins

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலின் நிறம்

உன்னைப் போல் யார் என்னைக் கவனித்துக் கொள்வர்?
என் மனதில் உருவாகும் இசைக்கோவையை யார் கேட்பர்?
அவசியமோ இல்லையோ
மெல்லிய வலிகளோடு கூடிய
வலிக்கும் ஆசைகள்... தேவைகள்
உன்மாயத் தீண்டுதல்
எவ்வளவு எளிதாக
என் சாதாரண வாழ்வை
கிறுகிறுக்கும் உயரத்துக்குத் தூக்குகிறது?

சிலவேளைகளில் நீ என்னை வாரி
முகிற் தேரில் ஏற்றி
தொலைவிலுள்ள நட்சத்திர மண்டலத்துக்குக்
கொண்டு செல்கிறாய்

கூதிர்கால இரவுகளில்
ஆசைக் கம்பளியால் என்னைப் போர்த்துகிறாய்
வெறுமையான என் பூங்காவில்
கவலையற்ற டெய்ஸி மலர்கள் போல் சிரிக்கிறாய்
மறந்துபோன என் ஞாபகக் கையொழுங்கைகளில்
குறும்பு செய்யும் இளங்காற்று!

உன் அச்சில் மீள வார்க்கப்பட்டு
மறுபிறப்பெடுக்கவுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரவமெழுகு நான்!
எனக்கென்று நீ வகுத்த உத்தரிப்பில் எரிந்து
புதிய ஒரு கீற்றாக நான் ஒளிவீசுவேன்
என்னில் குறுக்கு மறுக்கிடும் திசையில்லா வீதிகள்
உன் விட்டுக் கொடுப்பில்லாத திமிரால் சீராக்கப்படுகின்றன
என் ஆற்றங்கரைகளை மோதும் வெள்ளப் பெருக்குகள்
உன் கருணையால் பாலம் கட்டுகின்றன
கனவாகிய, வறண்ட இப்போதையில் ஒளியேற்றுகின்றன
என் கண்களுக்கு ஒரே நிற மை தீட்டுகின்றன
அது காதலின் நிறம்

English original : Adyasha Das (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறக்கம்

அக்கம் பக்கம் யாருமில்லை
மாணவன் புத்தகத்தை மூடிவிட்டான்
தெருப்பாடகன் தன் பாட்டை நிறுத்திவிட்டான்
எல்லோரும் வீடு திரும்பி விட்டனர்

மரண வியாபாரிகள் தம் ஆயுதங்களை
ஒரு புறம் வைத்துவிட்டனர்
பிசாசுகள் பாதாள உலகின் கதவுகளை அடைத்துவிட்டன
ஆட்சியாளர்கள் குருதி படிந்த கைகளைக் கழுவிவிட்டனர்
எங்கும் அமைதி

அவர்கள் கண்ணாடிக்குள் நோக்குகின்றனர்
பிளவுக்குள் இருப்பது என்னவென்று உணர்கின்றனர்
மரணம் கொட்டாவி விடுமுன் அவர்கள் தம் கதவுகளைச்
சாத்துகின்றனர்

தம் குழந்தைகளின் முன்றிலில் எறிக்கும் நிலவில்
தொழிலாளர் தம் கண்ணீரை உலரவிடுகின்றனர்
கைதிகள் சிறைக்கம்பிகளுக் கிடையிலுள்ள வெளிகளில்
சிறகடிக்கின்றனர்
பிச்சைக்காரர்கள் சுவரொட்டியால் உடம்பைப்
போர்த்தபடி நடைபாதையில் உறங்குகின்றனர்
அக்கம் பக்கம் யாருமில்லை.
விலைமகளிர் தம் நச்சு ஆடைகளை வீசிவிட்டு

University ... 13 JUN 2019 LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரால் நனைந்த தம் மார்புகளை
சுவர்களில் தொங்கவிட்டுள்ளனர்
தத்தம் வாழ்வின் எச்சங்களை நிலப் பேழைக்குள் ஒளித்து
வைத்துவிட்டு
எல்லோரும் உறங்குகின்றனர்.

எதற்கும் துணிந்தவர்கள், அரசியல்வாதிகள்,
ஆட்சியாளர்கள்
பொதுமக்கள், அப்பாவிகள் - எல்லோரும் உறங்குகின்றனர்
எல்லோரும் இருளில் புகலிடம் தேடியுள்ளனர்.

இப்பொழுது கொடிகள் பறப்பதில்லை
மணிக்கூடுகள் ஒலிப்பதில்லை
சட்டங்கள் தொழிற்படுவதில்லை
எல்லோரும் இருளின் மடியில்.
எல்லா வேற்றுமைகளும் அழிக்கப்பட்டுவிட்டன
கொல்பவனுக்கும் கொல்லப்பட்டவனுக்கும்
அழகுக்கும் குரூரத்துக்கும்
எல்லா வேற்றுமைகளும் அழிக்கப்பட்டுவிட்டன.

மனிதர்களிடையே முள்வேலிகள் இல்லை
இப்பொழுது யாரும் சாவுக்குப் பயப்படுவதில்லை
எல்லோரும் உறக்கத்தின் பிடியில்

கால சர்ப்பம்
தன்தோலைக் கழற்றியெறிகின்ற கணமிது
கால எல்லைகளுக்கப்பால்
கட்புலனாகா உலகங்கள் பிறக்கின்ற கணமிது
இவ்விரவில்
எல்லோரும் உறக்கத்தின் மடியிலிருப்பதால்
யார் பின்னாலும் சிந்தனை நரிகள் தொடர்வதில்லை
வாழ்க்கைப்புலி யாரையும் பயப்படுத்துவதில்லை
பீரங்கியின் உறுமல் நாளைதானே கேட்கப்போகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடூரமான போர்ப்பறை இப்பொழுது கேட்காது
மனிதனால் இருளில் குத்துச் சண்டையிட முடியாது

தபாற்காரனைப் பற்றிய அச்சம்
காலையில் தான்
கொலையாளிகள் அனுப்பிய கடிதம்
காலைதான் வந்துசேரும்
தன்னைக் கைவிட்ட பிள்ளைகள் பற்றி
எந்தத் தாயும் கலவரமடையவில்லை
நண்பனுடைய துரோகம் கூட
இப்பொழுது தெரியப்போவதில்லை

நம்பிக்கைகள், ஏமாற்றங்கள், பெருமூச்சுக்கள்
குரோதம், பொறாமை, திமிர் -
எதுவும் வலியை உண்டாக்காது
ஒற்றை இதயத்தின் துடிப்பைத் தவிர
எங்கும் அமைதி

Telugu original : Ajantha (India)
English Translation: D. Kesava Rao

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருந்தவளைக் கைவிட்ட கடவுளர்

காணாமல் போனான் அவன்
காத்திருந்தாள் அவள்
அழும் பிள்ளைக்கு
அப்பாவைக் காட்டுவேன்
பார்த்திரு என்றாள்

உயிரின் சொட்டு
அவனுக்காய்
வி
ழா
து
காத்திருந்தது

மார்பைப்
பால் வாசனையின்றியும்
உறிஞ்சும் தன் குழந்தையாய்
அவன் நினைவுறிஞ்சித் தவித்திருந்தாள்

காற்றிடம்
வார்த்தைகளைக் கொடுத்திருந்தாள்
தென்றலாகித்
தன்னை வருடும்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளின் அர்த்தங்களை
எல்லாக் கடவுளரும் கைவிட்டனர்

அவர்கள் கொடுத்த மரணச்சான்றிதழ்
அவள் இதயத்தோடு சேர்ந்து
காற்றுக்குப் படபடத்தது

கண்கள் நீரினைப் பொழிய
வழி தெரியாது நின்றன

அழும் குழந்தைக்கு
மார்புக் கச்சையை அவிழ்க்கத் தெரிந்திருந்தது
அவளுக்கும்
சாவின் கதவுகளைத் திறக்கத்
தெரிந்திருந்தது
இருவருக்கும் அடைக்கலம்
கொடுக்கக் கிணற்றுக்குத்
தெரிந்திருந்தது

Tamil original: T.Ajanthakumar (Sri Lanka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் மகளுக்கு

"கரி" என்ற பட்டம் சூட்டி
உனக்கு அவர்கள் மரண தண்டனை விதித்தாலும்
சாவை ஏற்றுக்கொள் ஆனால் காதலுக்காக வாழ்
மரியாதைக்குரிய காட்சிப் பொருளாய் வாழாதே
காதலுக்காக நீ வாழ வேண்டும்
வேட்கைத் தாகம் எடுத்த பாலைவனத்தில்
கள்ளிச் செடிபோல் இராதே
ஆனால் காதலுக்காக வாழ்!
ஒருவருடைய அன்பு நினைவுகள்
மெல்ல மெல்ல உன் மனதில் வந்தால்
புன்னகை செய், காதலுக்காக வாழ்!
அவர்களால் என்ன செய்ய முடியும்?
உன்னைக் கல்லெறிந்து கொல்வார்கள்
ஆனால் ஒற்றைக் கணத்தில்
வாழ்வின் முழுமையை நீ அடையலாம்
நீ காதலுக்காக வாழவேண்டும்
அது பாவம் என்பார்கள்
அதனால் என்ன? தாங்கிக் கொள்!
ஆனால் காதலுக்காக வாழ்!

Hindi original: Attiya Dawood (Pakistan)
English translation: Fehmida Riyaz and Asif Aslam Farrukhi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலின் எல்லைகள்

நீ என்னைக் காதலிக்கிறாய், ஐயமில்லை
உணவும் உடையும்
தலைக்கு மேல் ஒரு கூரையும் தர
வாக்குறுதியளித்துள்ளாய்
பதிலுக்கு என் வாழ்க்கையை ஈடுவைத்துள்ளேன்
வீடு என்ற சொர்க்கத்துக்குள்
எனக்குப் பூரண சுதந்திரம் தந்துள்ளாய்
ஆனால்
சிந்தனை மரத்தில்
அறிவுக்கனி
காய்த்திருக்கும் திசையில் போக
எனக்குத் தடைவிதித்துவிட்டாய்
ஒவ்வொரு நாளும் எழுந்துவரும் சூரியன்
என்னை முன்னேறத் தூண்டுகிறது
இன்று கனியைத் தின்றுவிட்டேன்
என்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை
உன் சொர்க்கத்தினுள் மூச்சுத் திணறுவதாக உணர்கிறேன்
உணவும், உடையும், வீடும்
உன்னால் மட்டுமே தொடமுடிந்த
எனக்கு எட்டாத
வானத்து நட்சத்திரங்கள் அல்ல
என்ற ஞானத்தை
சிந்தனைக்கனி எனக்குத் தந்துள்ளது
பாரம்பரியங்கள், சட்டங்கள், நம்பிக்கைகளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதுபடுத்தி
என் சிந்தனைக் கைகளைக் கட்டிப்போடாதே
இந்த மலைகளை என்னால் கடக்கமுடியும்
நீ என்னைக் காதலிக்கிறாய், ஐயமில்லை
ஆனால் அந்தக் காதலை ஓர் அடிமை விலங்காக்காதே
ஆம், சிந்தனை விருட்சத்தின் அறிவுக் கனியை நீயும் உண்
எங்கள் காதல் மலர்கள் போல மணம் வீசட்டும்

Hindi original : Attiya Dawood (India)
English translation: Fehmida Riyaz and Asif Aslam Farrukhi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதற் சுவை

சாத்தானின் வற்புறுத்தலினால்
நீ தவமிருந்து காத்த
செந்நிறக் கிண்ணத்தில் தருகிறாய் நெருப்பை
நெருப்பின் சுவை
ஒரு பாவத்தைப் போன்று ருசிக்கின்றது

மாயலோகத்தின் வெள்ளிமலை
உச்சிகளைக் காண்பித்தாய்
என் வரிக்குதிரைகள்
அங்குதான் இளைப்பாறுகின்றன

மலை உச்சிகளுக்கப்பால்
"அவதாரில்" பறந்த ராட்சத ராஜாளிகள்
நானும் நீயும்

உரம் பாய்ந்த மூங்கில்கள் உரசி
நெருப்புப் பொறிகள் காற்றில் தெறிக்கின்றன

உண்டு திளைத்த கனியின் மீதங்கள்
சுடரெரியும் விண்ணுலகம்

நெருப்புக் கனிகளைக் காய்த்துள்ள
மரத்தின் மேலே
பிரகாசமான நீரோடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடி நீரில் ஆதாம், ஏவாளின் உடல்கள்
முதல் சுவையுடன்
முதல் மொழியுடன் அமிழ்கின்றன

உனது நாக்கு
தீச்சுவாலையாகப் பற்றியெரிகின்றது
எல்லாமும் எரிந்தடங்குகின்றேன்
சாத்தானின் கோட்டைச் சுவரில்
நெருப்பின் வெப்பம்
கனியின் வாசனை

மீண்டும்....

Tamil original : Anaar (Sri Lanka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவனுக்கினிய பெண்

பிரித்தானிய சாம்ராஜ்யத்திற்போல்
இந்த வீட்டில்
சூரியன் அஸ்தமிப்பதில்லை
அது பற்றி எரிகிறது
தீய்க்கின்றது
எஜமான் இல்லாதபோதும்
அவர் விட்டுச்சென்ற
நகங்களின் இலச்சினையில்
துவாயில், ஊன்றுகோலில்
முத்திரை பொறித்த தாள்களில்
சப்பாத்தில், செருப்பில்
போதை ஏறிய விக்கலில், ஏப்பத்தில், குறட்டையில்
முகக்கோணலில்
வெருட்டில், திட்டுதலில்
அவர் இன்னும் இருக்கிறார்

மூர்க்கமான கர்ச்சனையுடன் அவர் வீட்டில் நுழைந்தார்
முதற்சுற்றில் அவள் செத்தவள் போல் கிடந்தாள்
செத்துப்போன ஒருவன் மீது கரடி பாயாது என்று
ரஷ்ய நாட்டார் கதையில் கிடந்த மனிதனைப் போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை யாரோ அவளுக்குச் சொன்னார்கள்
“கோழைகள் ஆயிரம் முறை சாவார்கள்
வீரர்கள் ஒருமுறைதான் இறப்பர்”
ஒரு பிழையும் செய்யாத நீ
ஏன் செத்தவள் போல் நடிக்க வேண்டும்?

அதன்பின் ஒவ்வொரு நாளும் ‘சாக’ அவள்
வெட்கப்பட்டாள்
ஒவ்வொருநாளும் சிறிதுநேரம் தயங்கி நின்றாள்
பிறகு முடிவெடுத்தாள்
செத்தவள் போல் மீண்டும் நடிக்க என

நான் ஒரு பறவையாக வேண்டுமெனில்
ஏன் தீக்கோழியாக வேண்டும்?
யாராவது என்னை முகர்ந்து நாக்கைப் பிடிக்க
வேண்டுமெனில்
ஏன் நான் பாம்பாக வேண்டும?

பிறகு யாரோ காந்தியை வாசிக்கும்படி சொன்னார்கள்
அடித்து நொறுக்கப்பட்டபோது சாகும்வரை
உண்ணாவிரதமிருந்தாள்
ஆனால் ஐந்தாம் நாள் மாலை
யாராவது தன்னைக் கவனிப்பார்கள் என்று
எதிர்பார்த்து ஏமாந்தாள்

ஒரு நாள், சுற்றும் தலையைக் கைகளில் ஏந்தியபடி
தட்டுத்தடுமாறி அடுக்களையுள் போனாள்
ஊசிப்போன ஒரு சப்பாத்தியை மெல்ல இழுத்தாள்
தன் கண்ணீரின் உப்பால் அதை ஈரப்படுத்தினாள்
எனவே நண்பர்களே
கலியுகத்தில் கற்புள்ள பெண்களின் வாழ்க்கை
இப்படித்தான் இருந்தது
கதை தொடர்கிறது
கடைசிப் பகுதியை ‘சதி’யே சொல்கிறாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை
கோபப்பட என்னால் முடியவில்லை
கல்பதிக்கப்படாத மண் வீதியில்
கடும்மழை பெய்தபின்
மண் எப்படிக் குழையுமோ
அப்படி இளகிவிடுகிறது
அவருக்கு வேலை அதிகம்
அவருக்கு உடல்நலமும் இல்லை
கூச்சலிட, ஏச
ஏன் என்னை அடித்துத் துவைக்க
உடலில் வலுவில்லை

ஈற்றில் நானும் வசக்கப்பட்டுவிட்டேன்
இப்பொழுது அவருக்குச் சுகமில்லை
ஒரு நோயாளியுடன் சண்டைபிடிப்பானேன்?
மன்னிக்கும் பண்பை வளர்த்துக்கொண்டேன்
இப்பொழுது, அவருடைய குறட்டை ஒலியும்
இனிதாய் உள்ளது
உற்றுக்கேட்கிறேன்
கனவு காண்கையில் கூப்பிடுகிறாரா என்று
அவரால் சொல்ல இயலாதிருக்கலாம்
ஏதோ ஒரு ரகசியம்
அவர் தொண்டைக் குழிக்குள் தட்டுப்படக்கூடும்
நான் கேட்க ஆசைப்பட்ட ஏதோ ஒன்று
என் வாழ்வின் திசையை மாற்றக்கூடிய ஒன்று
பிறகு
இந்தப் பாலைவனத்தில் அடைமழை பொழியும்

Bengali original : Anamika (India)
English translation: Arlene Zide

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதவு

நான் கதவாய் இருந்தேன்
அவர்கள் என்னை
எவ்வளவு கடுமையாய் அடித்தார்களோ
அவ்வளவு அகல நான் திறந்தேன்
அவர்கள் உள்ளே வந்து பார்த்தார்கள்
ஒரு பாரிய பிரபஞ்சச் சுழற்சி
அரைப்பது நிற்க நூற்பது தொடங்கும்
நூற்றல் நிற்க, தையல் தொடங்கும்
ஓதோ ஒன்று நாள் முழுவதும், ஓய்வின்றி!

முடிவில் என் துடைப்பம் எல்லாவற்றையும் கூட்டுகிறது
வானத்து நட்சத்திரங்களை,
மலைகளை, மரங்களை, கற்களை
சிருஷ்டியின் துண்டுகள், சிம்புகளை
கூட்டிக் கூடையில் அள்ளி
ஆழத்தில் எங்கோ
மனதின் மூலையில் சேமித்து வைக்கிறது

Hindi original : Anamika (India)
English translation: Ritu Menon

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது பூமியாய் இருக்கின்ற படியால்

லடாக்கிலிருந்து மலபார் வரை
மொகாசுங் தொடக்கம் காத்தியவார் வரை
எந்தக் குறிச்சியிலிருந்தும்
எந்தக் கிராமத்திலிருந்தும்
எந்த யன்னலில் இருந்தும்
எந்தக் கதவிலிருந்தும்
எந்த வாசற் படியிலிருந்தும்
எந்தக் கிராமத்து வீட்டிலிருந்தும்
முக்காடுகளின் நிழலைத் தாண்டி எட்டிப்பார்க்கும்
இம்முகங்கள் யாருடையவை?
சொல்லுங்கள் இம்முகங்கள் யாருடையவை?
ஆம், இந்தப் பெரிய நாட்டின் எண்ணிறந்த கிராமங்களின்
ஏழைப் பெண்களுடைய முகங்கள் இவை
சட்டிகள் கழுவிக்கொண்டு
முற்றங்களைப் பெருக்கிக்கொண்டு
மண்தரையைச் சாணத்தால் மெழுகிக்கொண்டு
விடியற்காலை மாடுகளுக்குத் தீன் போட்டுக்கொண்டு
நீண்ட, இருண்ட, தொலைதூரத்திலிருந்து
தண்ணீர் எடுத்துக்கொண்டு
காடுகளிலிருந்து
மாட்டுத்தீனும் விறகும் சுமந்து கொண்டு
சதா அரைத்துக் கொண்டிருக்கும் ஆலைகளில்
தாமே மாவாய் அரைபட்டுக்கொண்டு
குழந்தைகளின் சாணைச் சீலைகளைக் கழுவிக்கொண்டு

University of Peradeniya
13 JUN 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமியாரின் ஏச்சுக்கிலக்காகி
குந்தியிருக்கும் மாமனாரின் சுங்கானைப்
பற்றவைத்துக்கொண்டு
அரிசி கொழித்துக்கொண்டு
பருப்பை வறுத்துக்கொண்டு
எரிய மறுத்து மூச்சடைக்கும்
கரும்புகை கக்கும்
அடுப்பில் இருந்து வரும்
சப்பாத்திகளின் வாசனையை
அறுவடை செய்து கொண்டிருக்கும்
ஏழைப்பெண்களின் முகங்கள்
இந்தப் பெரிய நாட்டின் கிராமத்து
ஏழைப்பெண்களின் முகங்கள்
இந்த முகங்களின் கொலாஜை உற்றுப்பாருங்கள்!
கண்ணுக்குத் தெரியாத கீறல்களைக் காண்பீர்கள்
அவர்கள் பாதங்களில் கொப்புளங்களைக் காண்பீர்கள்
கண்ணுக்குத் தெரியாத பூட்டுக்களால்
அவர்கள் உதடுகள் முத்திரையிடப்பட்டிருக்கும்
இவர்கள் தாம் தங்கள் உழைப்புக்கான
ஊதியம் மறுக்கப்படும்
இந்தப் பெரிய நாட்டின் கிராமத்து ஏழைப்பெண்கள்
உற்பத்திப் படிமுறையிலிருந்து அந்நியப்பட்டவர்கள்
இவர்கள்
'வேலை' என்ற வரைவிலக்கணத்திலிருந்து ஒதுக்கப்பட்டது
இவர்கள் பணி
'மனிதர்' என்ற கண்ணியம் மறுக்கப்பட்டவர்கள் இவர்கள்
என்ன செய்கிறார்கள் இவர்கள்?
பாட்டுப்பாடுகிறார்களா?
என்ன பாட்டு?
தேய்ந்து கொண்டிருக்கும் ஒரு முழு நாட்டின்
அழிந்து போகும் கூட்டிசை பாடுகிறார்கள்!
அழுக்குப் பாத்திரங்களில் இருக்கும்
எச்சில் உணவின் கரைசலைப் பருகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசிவிழாவைக் கொண்டாடுகிறார்கள்!
ஆழ்நீரில் இடுப்புவரை தோய்ந்தபடி
முதுகெலும்பு வில்லாய் வளைய
உங்கள் வயல்களில் நாற்று நடுகிறார்கள்
மண்டல் மேள ஒலிக்கு
ஒருவர் இடையை மற்றவர் பற்றியபடி
'கர்ம நாச்சா' லயம் படைக்கிறார்கள்
கிராமத்து கிணறு குளத்தங்கரைகளில்
ஏதோ அற்ப பகிடிக்கு ஒருவர் மேல் ஒருவர் விழுந்து
காரணமின்றிச் சிரிக்கிறார்கள்
அவர்களால் இன்னும் சிரிக்க முடிகிறதே
அதனால் தான் பூமி இன்னும் இருக்கிறது
அதனால் தான் தூக்கணாங் குருவிகளின் பாட்டுக்கள்
தப்பி இருக்கின்றன
அதனால் தான் இன்னும் றொட்டி சுவையாய் இருக்கிறது!

Hindi original : Anoop Kumar (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் போர்

ஆற்றல் மிக்க காலத்தை
கைப்பிடியில் வைத்திருக்க உங்களால் முடியாதபடியால்
இந்நூற்றாண்டின் இறுதிப் போரை
காலத்திரையில் பதிவு செய்ய விரும்புகிறேன்
என்றோ ஒருநாள்
இருளைப் பின்னே தள்ளியபடி
உங்கள் பிடியிலிருந்து விடுபட்டு
ஒருபுதிய சூரியன் வெளிவருகையில்
காலம் புன்னகைக்கும்

இரத்தத்தால் தாகம் தீராவிட்டால்
வெறும் காற்றால் பசியடங்காவிட்டால்
கனவுகளோடு மட்டும் ஒருவரால் தாக்குப் பிடிக்க முடியுமா?
வாதைகளில் மூழ்கியுள்ள மனிதர்களால்
புன்னகைக்க முடியுமா?
குழப்பகரமான உலகின்
சமூக யதார்த்தத்தில் அகப்பட்டு
சுதந்திரத்தின் கொடுமையை நான் அனுபவிக்கிறேன்
ஒருகால் ஆதரவுக்குழுவினரின் உந்துதலால்
நீ வெற்றியின் அலைகளைக் காண்கிறாய் போலும்
ஆனால், உண்மையில்,
ஐயுறும் மனதில் கருக்கொண்ட குரோதத்தோடு
பங்குபோட்ட கனவுகளும் தகர்ந்துபோயின

வானில் நட்சத்திரங்கள் உள்ளன
சந்திரனும் சூரியனும் உள
புரட்சிகளைத் தூண்டிய பெரிய இலட்சியங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோதும்
வரலாறு வெறிச்சோடிக் கிடப்பது போல
எங்கள் வாழ்வில் நீதியைக் கொணரும் என நம்பிய
அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் வெற்றுக் கோதுகளானமை
காண்கிறேன்
இனியும் வண்ணக் கனவுகள் பற்றி வாக்குறுதி தராதீர்கள்
நாங்கள் தொலைத்த கனவுப் பட்டாம்பூச்சிகள்
வசப்படாத தொடுவானத்தை நோக்கிப் பறந்துவிட்டன
கால ஈமத்திலிருந்து உடலை இழுத்து வந்து
என் ஆற்றலை வெளிப்படுத்தமுடியாது
தம் கனவுகளின் சாவுகுறித்து துக்கம் அனுஷ்டிக்கும்
போர் வீரர்கள் விழித்தெழுந்து களமுனைக்குச்
செல்லமாட்டார்கள்
எண்ணிறந்த அம்மனித மரணங்கள்
காலத்தின் மடிப்பில் புதையுண்டு போகட்டும்
ஓர் அமைதியான தொடக்கத்தின் அடையாளமாக
ஒரு 'போதிசித்த'* மரக்கன்றை நடுங்கள்
காலத்தைப் பலியிட்டு
அதைப் புனிதராக்க உங்களால் முடியாது
என்றோ ஒருநாள் இருளைப் பின் தள்ளியபடி
உங்கள் பிடியிலிருந்து விடுபட்டு
ஒருபுதிய சூரியன் வெளிவருகையில்
காலம் புன்னகைக்கும்!

* போதிசித்த–ziziphus budhensis. இம்மரத்தின் விதைகள் கொண்டு செய்யப்படும் செபமாலை, பௌத்தர்களால் தியானத்தின் போது பயன்படுத்தப்படுவது.

Nepali original : Anupam Roshi (Nepal)

English tranaslation : Keshab Sigdel

699717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்க்கஸ் கோமாளி

திகிலூட்டுகிற பயங்கர விலங்குகள்
தங்கள் வன்செயல்களை முடித்து விட்டுப் போக
நீங்கள் அசௌகரியமாகப் பதறும் போது
உங்களைஆசுவாப்படுத்த
நான் அரங்கில் நுழைகிறேன்
குள்ளமான தறுக்கணித்த உடல்
தட்டுத்தடுமாறும் நடை
நான் மையத்துக்கு வருமுன்பே
கைதட்டுகிறீர்கள், எட்டிப் பார்க்கிறீர்கள்
நீங்கள் சிரிக்கத் தொடங்குகிறீர்கள்

நான் வருகிறேன், வழுக்கி விழுகிறேன்
திரும்ப எழுகிறேன்
கயிற்றைப் பற்றி ஏறுகிறேன்
கரணம் அடிக்க முயன்று
தடுக்கி மல்லாக்க விழுகிறேன்
என்னால் முடியாத
பல சாகஸங்களைச் செய்ய முயன்று
உங்களைப் பார்த்து
எனக்கேயுரிய அசட்டுச் சிரிப்பை உதிர்க்கிறேன்
அந்தக் கணத்தில்
ஆர்ப்பரிக்கும் கடல்போல
உங்கள் வெடிச்சிரிப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் மகிழ்ச்சியில் திளைக்க
அரங்கில் பெரிய சாகஸங்களுக்கு வழிவிட்டு
நான் புறப்படும்நேரம் வருகிறது
உங்கள் எதிரொலிக்கும் சிரிப்பு
சேற்று நீராக என்னைத் துரத்த
விரைந்து ஒரு மூலைக்குப் போய்
நான் அழுகிறேன்

Sinhala original : Ariyawansa Ranaweera (Sri Lanka)

English translation: A. T. Dharmapriya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

நிர்வாணமாய்
இடையூறின்றி
அச்சமின்றி
வெட்கமின்றி
சந்தியில்
தன் ஆதிவடிவில்
அப்பெண் நின்றாள்

குருட்டு ஆண்கள் கூட்டமொன்று
பெண்ணின் இயல்பை அறிய
ஆவலுறுகின்றது
அலைபாயும் அவள் கூந்தலைத் தடவிய ஒருவன்
முணுமுணுக்கிறான்
ஆ, பெண் ஓர் அருவி
சிவன் தலையிலிருந்து பாயும் 'கங்கை'
இன்னொருவன் அவள் கைகளையும்
விரல்களையும் வருடிக்கொண்டு சொல்கிறான்
'பெண் சரஸ்வதியின் கையிலுள்ள தாமரை!'
மற்றொருவன் அவள் உறுதியான
தொடையைப் பற்றிக் கொண்டு
கூவுகிறான்
'மணப்பந்தலில் நாட்டிய
இளம் வாழைக்குட்டி'
இனிய
சிருஷ்டி கீதத்தைப்பாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் உதடுகளைத் தொடும்
ஒருவன் சொல்கிறான்
'ஆ பெண் கோவைக்கனி'
மற்றொருவன்
தாய்மையின் வரமாகிய
அவள் முலைகளை வருடியபடி
மெல்லச் சொல்கிறான்
'பெண் கைலைமலை,
லஷ்மியின் கொடை!'
மற்றொருவன்
படைப்பின் மறைவிடத்தைக்
கண்டு துள்ளிக் கூவுகிறான்
'இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள்
'பெண் இழிந்த குழியன்றி வேறில்லை!'
குருடர்களுடைய தரிசனங்களைக் கேட்டு
அவள் கண்ணீர் அருவியாய்க் கொட்டுகிறது
அவள் கண்ணீரைத் துடைத்த படி ஒருவன் சொல்கிறான்
'மூடர்களே இழிந்த குழியல்ல
அவள் வைகல் ஏரி, ஊரல் ஏரி,
கோனசன் குண்டா
மானஸரோவர்!'

Nepali original : Banira Giri

English version : Anne Hanskins

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடரியின் கதை

## மொழிபெயர்ப்பாளர் குறிப்பு

இது ஜமதக்னி முனிவரின் மகன் பரசுராமன் கதை. அவனுக்குப் படைக்கலப் பயிற்சியளித்த சிவபெருமான் ஒரு கோடரியையும் கொடுத்தார். ஒரு நாள் தன் மனைவி ரேணுகா, மனசளவில், தன் கற்பு நெறி வழுவினாள் எனக் கருதிய ஜமதக்னி அவளைக் கொல்லும்படி மகனுக்குக் கட்டளையிட்டார். தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என நம்பிய பரசுராமன் தன் தாயைக் கோடரியால் கொன்றான். பின், நிம்மதி இழந்தவனாய் நாடெல்லாம் அலைந்து திரிந்தான். ஈற்றில் தன் தந்தையின் ஆச்சிரமத்துக்கு மீண்டபோது க்ஷத்திரியர்கள் ஆச்சிரமத்தைத் தாக்கி, புனிதப் பசுவைக் கொண்டு போய்விட்டார்கள் என அறிந்தான். பழிவாங்க முனைந்த பரசுராமன் க்ஷத்திரியர் தலைநகரைச் சூறையாடி மன்னன் கார்த்தவீரியார்ச்சுனனைக் கொன்றான். தொடர்ந்தும் அலைந்து திரிந்தான். திரும்பி வந்தபோது, கார்த்தவீரியனின் வாரிசுகள் தன் தந்தையைக் கொன்றுவிட்டதை அறிந்தான். கடுங்கோபம் கொண்ட பரசுராமன் க்ஷத்திரியர் குலத்தை நிர்மூலமாக்கினான்.

தன் பாவங்களுக்காக வருந்திய பரசுராமன் தன் வன்முறையின் அடையாளமாகிய கோடரியை மேலைக்கடலுள் வீசிவிட்டு கரையில் தியானத்தில் அமர்ந்தான். வருடங்கள் கழிந்தன. கடலிலிருந்து கேரளம் என்ற நிலம் எழுந்தது. அதைத் தன் எண்ணப்படி உருவாக்கினான் பரசுராமன். பல நூற்றாண்டுகள் கழிய மகேந்திரமலையில் அமர்ந்து தான் படைத்த மண்ணைப் பார்த்தபடி, கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் அசைபோடும் பரசுராமனைக் காட்டுகிறார் கவிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

அமைதியான,
மௌனமான மகேந்திர மலையின் உச்சியில்
தனியே இருந்தபடி வெகுதூரம் நோக்குகிறேன்
என் பாதங்களூடாக
காற்றும் ஒளியும் ஒலியும்
மண்ணுள் ஊடுருவுகின்றன
நிலையான இவ்விருக்கையின் கீழே
கடலலைகள் கடைந்து தள்ளும் நுரைமடிப்புக்கள்

2

நீல வானின் கீழ்
விருந்துக்கு விரித்த வாழை இலைபோல
அதோ கிடக்கிறது நான் படைத்த நிலம்
என் ஆற்றலின்
என் திடசித்தத்தின்
என் செயற்றிறனின்
என் அறிவின் அடையாளம்
ஒரு முனிகுமாரனது கனவு
அறுவடை செய்த நெல்லின் மணமும்
பூக்களின் வாசனையும்
காற்றில் மிதந்து வருகின்றன
இயற்கை விழாவெடுக்கிறாள்
பிள்ளைகள் விளையாட்டு வில்களின்
நாண்களை ஒலிக்கிறார்கள்
பெண்கள் நடனமாடுகின்றனர்
என் நிலம் விழாக்கோலம் பூண்டுளது
என் மக்கள் மகிழ்ச்சியில் திளைக்கிறார்கள்
ஆனால் என்னை மறந்துவிட்டார்கள்
என் கோடரியையும் கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

காலம் புலர்கையில்
வானிலும் மண்ணிலும் கடலிலும்
பூதங்கள் தன்னிச்சையாக அலைந்த வேளை
பாவஞ்செய்யாத மனிதர்களுக்கு அஞ்சலி செய்ய
தேவர்கள் வனங்களில் இறங்கினர்
சமித்து எரியும் வாசனை
அமைதி வியாபிக்கும் சூழல்
அங்கே வளர்ந்தேன் நான்
ஜமதக்னி முனிவரின் மகன்
என்தாயின் ஷத்திரியப் பண்பாடு
என்னுள் சுவறியிருந்தாலும்
அந்தணாளராகிய
என் தந்தையை ஆராதித்தேன்
ஆச்சிரமத்து மரங்களின் கீழ்
தியானத்தில் ஆழ்ந்திருக்கையில்
எனக்கு மண்ணுலகே குளிர்நிழலாயிற்று

4

இளவேனிற் காலம்
வனங்களில் குயிலின் கானம்
ஆற்றங்கரையெல்லாம் கொட்டிக்கிடந்தன மலர்கள்
நீரில் சுழியோடி நீந்தும் கந்தர்வர்களின்
காதற்களியை
என் அன்னை கண்டு பெருமூச்செறிந்தாள்
அவளுக்கு மறுக்கப்பட்ட இன்பங்கள் அவை
குமுறும் மனத்தினளாய் குடில் திரும்பினாள்
எல்லாம் அறிந்த
ஆசார அனுஷ்டானங்கள் வழுவாத என் தந்தை
தன் இளம் மனைவியின்
உடலில் உண்டான சிலிர்ப்பை
முகத்தின் ஒளியைக் கவனித்தார்
எமக்குக் கட்டளையிட்டார்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனசால் செய்யும் பாவமே கொடியது
நம் இனத்தின் நற்பெயரைக் காக்க
களங்கமுற்ற இப்பெண்ணைக் கொல்லுங்கள்!"
தாயன்னைச் சுமந்த என் தம்பியர்
பின்வாங்கினர்
தந்தையின் காதல் மைந்தனாகிய நான்
முன்வந்தேன்
சிவபெருமான் கொடையாகிய என் கோடரி
உயர எழுந்தது
என் அன்னையின் தலை மண்ணில் உருண்டது
எங்கள் காலடியில் அது கிடந்தது
சாதுவானது அம்முகம்
பணிவுக்கு அடையாளம் அவள் உடல்
உலக இன்பங்களுக்காக ஏங்கிய சூடான அக்குருதி!
பலியிடப்பட்ட மிருகம் போல்
அகலத்திறந்த அக்கண்களில்
வேதனையும் வியப்பும்!
துக்கம் தாளாது என் தம்பியர் புலம்பினர்
தந்தையின் முகம் கூட ஒரு கணம் வெளிறியது
ஆனால் நான் சலனமின்றி நின்றேன்
தர்ம விசாரத்தில் மூழ்கி
என் கண்கள் கோடரியின் முனையைப் பார்த்தபடி!
வேதனையில் புழுங்கித்தவித்து
கனன்றெரியும் என் ஆத்மாவின் சூளையினுள்
நுழைந்த தந்தை கேட்டார்:
"உனக்கு என்ன வரம் வேண்டும், மகனே?"
"சீலம் மிக்க ஞானியே,
பாவியாக அன்றி
பண்டுபோல் கற்புடையவளாக
என் அன்னை தங்கள் உளத்தில் இருப்பாளாக!"
"அங்ஙனமே ஆகுக!"
அருளினார் முனிவர்.
மனித ஆத்மாவின் பரிசுத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அறிந்தது
எனினும் அதன்பின்
அக்குளிர் நிழற்கீழ் நான் அமர்ந்ததில்லை
நிலம் உருகி நிழலானதும் இல்லை

5

நெஞ்சில் ஆழப்பாய்ந்த பாவ ஈட்டியோடும்
தோளில் பெருஞ்சுமையாய்க் கனத்த
கோடரியொடும்
ஆயிரம் கோயில்களாலும் புனித நதிகளாலும்
மகிமைப்படுத்தப்பட்ட பாரதம் முழுவதும் அலைந்தேன்
உடம்பையும் ஆத்மாவையும் விறைக்கச்செய்யும்
குன்றுகள் மீது
சிங்கங்களின் கர்ச்சனைகள் எதிரொலிக்கும்
காடுகளிடை
அலைபொங்கி மோதும் கடற்கரைகளில்
உலாவினேன்
இடையிடையே சமநிலை பேணுகின்ற
தியானத்தில் மூழ்குகின்ற
தோத்திரங்கள் பாடுகின்ற
அல்லது மௌனத்தில் ஆழ்ந்திருக்கும்
என் உறவினர்களைக் காண்பேன்
தவத்தால் வற்றிய உடலுடன்
தெரியாததைத் தேடியவர்களாய்
“இது வல்ல, இது வல்ல” என்று தடுமாற
தம் வழியில் குறுக்கிட்ட அனைத்தையும்
நொறுக்கி அழித்து
தாம் ஆசைப்பட்டவற்றைச் சூறையாடி அநுபவிக்கும்
ஒலியெழுப்பும் படைக்கலங்களும்
மின்னும் அங்கிகளும் தரித்த தளபதிகள்
(வீரியம் மிக்க அவ்வினத்தின்
உள்ளார்ந்த பலவீனமே
என் அன்னையைக் கொன்ற ஆயுதமாயிற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே ஒரு குரல் என்னைக் கேட்டது
"இன்ப வேட்கையால் அலையும் இவர்களை
தாயைக் கொல்லிக் கோடரி ஒன்றும் செய்யாதா?"

6
கனன்று அடங்கித் தணலாகி
சாம்பலாகிய தீக்கங்குகள்
என் மனதில்!
விண்ணோக்கி எழுந்த
ஆசிரமத்தின் அகல் விளக்குகள்
என்னை அழைத்தன.

7
ஆசிரமம் சூறையாடப்பட்டது
போர் வீரர்கள்
தந்தை வளர்த்த பசுவைக் கவர்ந்து சென்றனர்
குளிர் தருக்களை வெட்டிச் சாய்த்தனர்
பாதங்களைப் பின்வைத்த நான்
ஒரு சொல்லும் பேசவில்லை
தீவினையை வெட்டிச் சாய்க்காவிட்டால்
சிவன் தந்த கோடரியால் பயன் என்ன?
கோபாவேசத்தில் மஹிஷ்மதி நகர் விரைந்தேன்
க்ஷத்திரியர் கூட்டத்தோடு தனியனாய் மோதினேன்
என்னுள் உறங்கிக் கிடந்த பாரம்பரியம் -
அசைக்க முடியாத தவவலி - சிலிர்த்தெழுந்தது
சிறுபிள்ளையின் கையிலிருக்கும் கொள்ளிபோல
எதிரியை அது அழித்தது
கார்த்தவீரியன் படையோடு வீழ்ந்தான்
ஒரு பேரரசு புழுதியில் கிடந்தது.

8
இரத்தம் தோய்ந்த கோடரியை உயர்த்திப் பிடித்தபடி
துளசி மணம் வீசும் ஆசிரமத்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் நுழைந்தபோது
என் தந்தை ஊடாக
என்றுமுள தர்மம் பற்றிய செய்தி
என்காதில் வீழ்ந்தது
"அறியாப் பிள்ளாய்
கொடிய பாவச்சுமை உன் தலையில்!
ஓர் அற்ப குற்றத்துக்காக
உன் முன்னோர் திரட்டி வைத்திருந்த
ஆத்ம பலத்தை விரயஞ் செய்து விட்டாய்!
எம் தந்தையர் ஈட்டிய ஆத்மீகச் செல்வம்
உலக நன்மைக்கே யன்றி
வெற்றுப் பெருமைக்கல்ல
பலஹீனமான க்ஷத்திரிய குலத்துக்கு
போரூக்கம் பொருத்தமாயிருக்கும்
ஆனால் தவவலி படைத்த பெரியோரிடம் அது இருந்தால்
மூவுலகும் அழிந்துவிடும்!
ஆகவே போ
உன்மேல் படிந்துள்ள இரத்தக்கறையை
பூமிக்கு சாந்திதரும்
புண்ணிய நதிகளில் கழுவு"

9

கார்த்தவீரியார்ச்சுனனின் புகழ்பரந்த வீதிகளில்
நான் அலைந்தேன்
"ஆணவம் பிடித்தவனாய் இருந்தாலும்
எல்லார்மீதும் இரக்கம் உடையவன் அவன்
வீரசாகஸம் விரும்புபவன்
ஆயினும் தர்மத்தின் வழிநடப்பவன்
இன்பநாட்டமுடையவன்
ஆனால் இடுக்கண் வருங்கால் வீரத்தைக் காட்டுபவன்
எல்லோராலும் நேசிக்கப்பட்டவன்"
இவ்வாறு மக்கள் அவனைப் புகழக்கேட்டேன்
இதுவும் என் காதில் வீழ்ந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாட்டை அழிக்க
ஆத்ம பலத்தைப் பயன்படுத்திய பிருகுகுமாரன்
ரிஷிகள் குலத்துக்குத் துயரை உண்டாக்கினான்
வெற்றிதந்த போதை என்னுள் வற்றத் தொடங்கியது
வீழ்ந்து விட்ட எதிரியில் தெய்விகத்தைக் கண்டேன்
தீவினையை அழிக்கவே சிவன் கோடரி தந்தான்
ஆனால் எது நல்வினை, எது தீவினை என
அறிவார் யார்?
நாள்கள் கழிந்தன
கோடரியையும் என் தோளில் அது ஏற்படுத்திய
தழும்பையும் மறந்து
நான் வீடு திரும்பினேன்
என் தம்பியர் கண்ணீர் சிந்தியபடி சொன்னார்கள்
கார்த்தவீரியனின் மக்கள் பழிவாங்கிவிட்டனர்
எங்கள் தந்தையைக் கொன்று விட்டனர்!
என்னுள் தணிந்து போய்க்கொண்டிருந்த குரோதம்
மீள எழுந்தது, பிரளயாக்கினிபோல
கோபம் தலைக்கேற
சுழற்காற்றாய்க் கிளம்பினேன்
அற்ப சித்தங்கொண்ட
க்ஷத்திரியர்களைச் சங்கரித்தேன்
இரத்தக் காட்டேரியின் நாக்குப்போல
என்கோடரி என்னை வெளிப்படுத்தியது

11

க்ஷத்திரியர்களின் குருதியால் ஈரமாகிய
ஆற்றங்கரையில்
இறந்த என் முன்னோர்க்குரிய
கடன்களைச் செய்து கொண்டிருக்கும்போது
காலங்கடந்த நிலையிலுங்கூட
ஞானவானாகிய என் தந்தையின் சொற்கள்
என் மனதில் எழுந்தன:

University of Peradeniya
13 JUN 2019
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எம் தந்தையர் ஈட்டிய ஆத்மீகச் செல்வம்
உலக நன்மைக்கேயன்றி வெற்றுப் பெருமைக்கல்ல!"
நான் செய்த இப்படுகொலை
புனிதராகிய என் தந்தையை மகிழ்வித்திருக்குமா?
காற்றிலும் கடலின் பாட்டிலும்
ஒரேயொரு சாபம் கேட்டது
"தவ வலிமையை வீணாக்கிவிட்டாய் நீ!"
புனித சாந்த குணத்தை மழுங்கடித்து
என் ஆத்மாவில் கொடிய குணம் தலைதூக்கி
இருப்பதைக் கண்டு துக்கித்தேன்
கோடரி அதர்மத்தை வெல்லாது
அதற்குத் துணைபோகும் என்பதுணர்ந்தேன்
காடுதோறும் அலைந்தேன்
தகிக்கும் என் ஆத்மாவுக்கு மருந்து தரும்படி
ரிஷிகளைக் கேட்டேன்
"நீ கைப்பற்றிய நாடுகளைக் கொடுத்துவிடு
தான் பெற்ற நலன்களைத் தியாகம் செய்வதே
பாவச் சுமையைக் குறைக்கும் வழி!"
அதையும் செய்து பார்த்தேன்
ஆனால் மகிழ்ச்சி இல்லை' ஆறுதல் இல்லை!
"கோடரியால் சபிக்கப்பட்ட நீ
தானமளித்த நிலம் பற்றிச் சிந்திக்காதே!"
எனக்குள் சொல்லிக் கொண்டேன்

12

சிருஷ்டியின் உறுமலை உற்றுக் கேட்டவனாய்
முகில்களைத் தழுவியபடி கிடந்த சமுத்திரக் கரையில்
நான் அமர்ந்தேன்
மெல்ல மெல்ல மூச்சைக் கட்டி
பரமாத்மா மீது என் புலன்களைக் குவித்தபோது
என் சிந்தனையில் பளீரிட்ட காட்சிகள்:
வைதீகத்துக்குப் பலியான என்தாய்
என் தவறினால் இறந்த என் தந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கோடரியின் தணிக்கமுடியாத இரத்த தாகத்துக்கு
ஆகுதியான எண்ணிக்கையில்லா உயிர்கள்!
தோளிலிருந்து அவ்வாயுதத்தை எடுத்து
தூர வீசினேன்
வன்முறையற்ற ஒரு நிலத்தைப் பெறுவேன்
நீதிநூலை மிருதுவாக்குவேன்
இனிமேல்
தவத்தினால் பெற்ற மேலான ஆற்றலை
ஆக்கத்துக்கேயன்றி
அழிவுக்குப் பயன்படுத்தமாட்டேன்
தியானத்தில் மூழ்கி அசைவற்றுநான் இருந்தபோது
சிருஷ்டியின் பால் என் சித்தம் குவிய
வருடங்கள் விநாடிகளாயின

13

பலப்பல வருடங்கள் கழிந்தன
ஒருநாள்
தூரத்தே
கடலின் புன்னகை போல
வெண்மணல் தீவுகள்!
பல பழிகள் புரிந்த அக்கோடரி
அதே இடத்தில் புதையுண்டுகிடந்தது
ஒன்றையொன்று தழுவிக்கிடந்த அத்தீவுகளிலிருந்து
செல்வச் செழிப்புள்ள நாடொன்று எழுந்தது
வெயிலும் மழையும் பனியும் மாறிமாறி வந்தன
மலைச்சாரல்கள் பச்சை ஆடை அணிந்தன
மலர்களைச் சூடின
இங்கே வயல்களில் நெற்பயிர்கள் கதிர் கக்கின
இங்கே கனத்த முலையுள்ள பசுக்கள் மேய்ந்தன
மாசுமறுவற்ற அழகு கொலுவிருக்கும் இப்புதிய நாட்டினுள்
மற்றைய நாட்டு மக்கள் வந்து குவிந்தனர்
பாரம்பரியம் வேரூன்றாத இக்கன்னி நிலத்தில்
என் இலட்சியங்கள் கோலம் வரைந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

அன்பில் முகிழ்த்த குடும்பங்கள் வளர்ந்தன
ஓரிடத்திலேனும்
பெண்களுக்கு சுதந்திரம் மறுக்கப்படவில்லை
சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்குமிடையே
முரண்பாடு இல்லை
கடவுளர், பேய்கள், நாகர்கள் எல்லோரும்
சமமாக, பக்தியோடு வழிபடப்பட்டனர்
மக்கள் மகிழ்ச்சியில் திளைத்தனர்
ஒருவருக்கொருவர் உதவினர்,
ஒருவரையொருவர் மதித்தனர்
என்றாலும் என் லட்சியம் ஈடேறியதாக
நான் கருதவில்லை
என்னுள் இருந்த பிராமணன் ஐயுற்றான்.
“மனிதன் புலன் இன்பங்களை அநுபவித்துவிட்டு
மண்ணுக்கு மீண்டால் போதுமா?”
அந்நிய நாடுகள் எல்லாம் அலைந்த நான்
என் நாட்டில் அறிவு விதைகளை விதைக்கும்படி
அறிஞர்களை இரந்தேன்
மண்ணுலக இன்பங்களைவிட மேலான வெற்றிப்பாதையை
இவ்வெளிய மக்களுக்கு காட்டும்படி கேட்டேன்
இந்நாட்டில் மண்ணும் விண்ணும் இணையட்டும்!
பிராமணரிலும் க்ஷத்திரியரிலும் உள்ள
சிறந்தன வெல்லாம் சங்கமிக்கட்டும்!

15

அந்தமண் என் பாதங்களைக் கட்டிவிடும் என்றஞ்சி
இம்மலை முகட்டில் ஏறித் தவஞ்செய்கிறேன்
இங்கிருந்தபடி யுகங்களின் முடிவிலா நகர்வையும்
ஆத்மாக்களின் பரிணாமத்தையும் பார்க்கிறேன்
இது அந்தப் பழைய உலகந்தான், ஐயமில்லை
ஆயினும் காலம் அதன் முகத்தை மாற்றிவிட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுகள் சுருங்கின, நகரங்கள் எழுந்தன
உயிரினங்கள் அருகின
அம்புகளின் பாய்ச்சல்
வாள்களின் வீச்சு
துப்பாக்கிகளின் வேட்டு
குண்டுகளின் வெடிப்பு
போரின் கொடுமையின் வெற்றி எக்களிப்பு
இம்மலை முகட்டை எட்டுகின்றன
நான் சென்ற தவறான பாதையில் செல்லும்
கோடானு கோடிபேரை நினைந்து
சஞ்சலம் அடைகிறேன்
மனிதனின் மனோபலம் தொடர்ந்து வளர்கிறது
ஆனால் அவன் செல்லும் பாதைமட்டும்
மாறவேயில்லை!

16

நீல வானின் கீழ் விரித்த பச்சை வாழையிலை போல்
கிடக்கும் என் நிலத்தைப் பார்த்தடி
என் கண்கள்!
வேறிடங்களிற் போலவே அங்கும்
கண்ணீர், வலி, பழிவாங்கல், குரோதம், உட்பகை
என் லட்சியத்தின் ஜ்வலிப்பை
மண்ணுலகக் காற்று மங்கச் செய்வதை உணர்கிறேன்
மனிதன் தன்னிடமுள்ள நற்பண்பையெல்லாம்
கொடுமை புரியும் ஆயுதமாக மாற்றுகிறான்
குறைகாண்பது வீண்முயற்சி
தன்தவறுகளை உணர்வதற்கு
மனிதன் எத்தனை நாள் வாழவேண்டும்!
ஈரவிழிகளுடன் என் நாட்டவரைப் பார்க்கிறேன்
அவர்கள் இருதயங்களில்
என் கோடரி முனையின் முத்திரை!
வன்முறை, கடுங்கோபம், தகராறு பண்ணுதல்,துக்கித்தல்
உணர்ச்சிகளால் அலைக்கழிக்கப்படல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் வீரம்!
இக்குற்றங்கள் என்னுடையவை
பிரம்ம, க்ஷத்திரிய ஆற்றல்களின் கலப்பால்
பகையன்றி வேறென்னதான் வரமுடியும்?

17

இந்த ஆறுதல் எனக்குண்டு
இந்நிலம் தன்னை அழகுபடுத்திக் கொள்கிறது
இம்மக்கள் மகிழ்ச்சியில் திளைக்கிறார்கள்
எனக்காக அல்ல
பழைய பழிகளின் ஞாபகங்களால்
நிம்மதி இழந்தலையும் இப்போராளிக்காக அல்ல!
பணிவில் உயர்வைக் கண்ட
பரம்பொருளைக் கண்ட
மகாபலிக்காக!

Malayalam original : N.Balamani Amma (India)
English translation : N.K.Shesan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர்களின் யாத்திரைக்குகந்த இடம்

பறவைகள் கூட்டமாகப் பறப்பது போல
வரிசையாக உருளும் முகில்கள்
வானத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு
தண்ணீர் தரும் போதையைச் சுமந்து செல்வது போல
தரியா நகர் நோக்கி
எங்கள் பயணத்தைத் தொடங்குகிறோம்
எம்மோடு சொற்களையும்
காற்புள்ளிகளையும் முற்றுப்புள்ளிகளையும் காவிக்கொண்டு
கவிதைப் பிரமிட் கட்டுவதற்காக!
நாம் தரியா நகருக்குப் போய்க்கொண்டிருக்கிறோம்
எங்களுடைய பைகளில்
சுத்தியல்கள், அலவாங்குகள், காற்புள்ளிகள் அரைப்
புள்ளிகள்,
முற்றுப் புள்ளிகள் சுமந்து கொண்டு
உலகக் கவிஞர்கள் எல்லோரும்
நிபுணத்துவம் கொண்ட சொற்சிற்பிகள் எல்லோரும்
தரியா நகர் சென்றிறங்கிய கணமே
லய வரிசைகளில் ஒழுங்கு செய்யப்பட்ட
கவிதை அடிகள் போல
எம் தலைகளுக்குமேல் கடல்வாத்துக்கள்
பறக்கக் கண்டோம்
கவிஞர்களாகிய எங்களை வரவேற்க
தூரத்தே கடலின் இரைச்சல்
ஒருமித்த சக்திமிக்க கவிதைக் குரலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகிகளின் நினைவாலயத்தின் அடியில் நின்று கொண்டு
கவிஞர்கள் சூளுரைத்தனர்
'இன்று தரியா நகரில்
கவிதை மணி மண்டபம் எழுப்பப்படும்
செங்கல்மேல் செங்கற்கள்
சொற்களையடுத்து சொற்கள்
கனவுகளின் மீது கனவுகள்
கலாபூர்வமாக வைக்கப்படும்
தரியா நகரில்
அடிக்கல் நாட்டப்படும் இவ்விடம்
நாளைய கவிஞர்களுக்கான யாத்திரைத் தலமாகும்
கடலருகே இவ்விடத்தில் நின்றபடி
எல்லா மனிதர்களுக்கும் காட்டுவார்கள்
நம்முடைய இவ்வுலகை
எவ்வாறு
ஓர் வாழும் சொர்க்கமாக
மாற்றலாம் என்ற கனவை!'

Bengali original : Bimal Guha (Bangladesh)
English translation : Kabir Chowdhury

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான்மீகி

ராம் தீர்த்தில்
அவர் ராமனைப் படைத்தார்
ராவணனைக் கொல்ல
முடிவில் தெய்வமாகக் கொண்டாடப்பட்டார்
பின் அவரே
ராம் தீர்த்தில் கொல்லப்பட்டார்
அநுமனால்*

* அமிர்தசரஸில் இருந்து வான்மீகி ராமாயணம் பாடியதாக ஐதீகம். அங்கே அவருக்கு கோயில் ஒன்றுண்டு. அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்ட அநுமன் சிலை அதை மறைத்து ஓங்கி நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆராய்ச்சி

வருங்கால சந்ததிகளின் பெயரால்
செய்யப்படும் ஆராய்ச்சிகளுக்கு
தொட்டில்களிலிருந்து பறிக்கப்படும்
குழந்தைகளின் புதைகுழிகள் மீது
நட்ட மரங்களில்
காசு காய்க்கிறது

## நாவலாசிரியன்

பயங்கரவாதியும்
நாவலாசிரியனும்
ஒரே கற்பனையையும்
ஒரே ஆக்கத் திறனையும்
பகிர்ந்து கொள்கின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஃபீலிக்ஸ் கல்பா

தந்தைக் கொலையாலும்
தகாத உறவாலும்
எங்கள் இனம்
மகிழ்ச்சிக் களங்கம் எய்துகிறது

Sinhala original and English version –
Daya Dissanayake (Sri Lanka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல்

எது எது சொல்லப்படவில்லையோ
அவற்றை ஒதுக்கிவிடுவோம்
நீண்ட காலம் மடித்து வைக்கப்பட்ட
ஜம்தானி சேலைகள் போல
என் உள்ளம் மடிப்புக்களில் நைந்து போய்விட்டது
நீண்ட காத்திருப்பால்
பானையுள் ஊறிய பழஞ்சோறு போல்
காதல் புளித்துப் போய்விட்டது
ஆசை மெழுகுவர்த்தி
இறுதி வரை எரிந்து அடங்கிவிட்டது
விரல்களின் மென்மையான
தீண்டுதலின்றி
தம்பூராத் தந்திகள் துருப்பிடித்துவிட்டன

தோட்டத்துக்கு எவ்வளவு காலம்
நீ பசளையிடவில்லை?
கோடை வந்ததும் தானாகப் பூக்க
உள்ளம் ஒன்றும் ரியூலிப் செடியல்லவே!
அன்பிலாமையிலும் புறக்கணிப்பிலும்
காதல் சாகுவதமாயிருக்கும்
பனிமூடியபோதும் அது மண்ணுள் பத்திரமாக இருக்கும்
என்ற உன் கணிப்பு தவறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் அறையை அலங்கரிக்கும்
விலையுயர்ந்த ஸ்ரீறியோ போல
நீ சுவிச் பண்ணும் வரை
காதல் காத்திருக்கும் என்றும்
நீ விரும்புவதை இசைக்கும் என்று
நீ நினைத்தாய்!

ஆனால் உண்மை அதுவல்ல
காதல் ஒரு யந்திரமல்ல
தொலைபேசியும் மின்னஞ்சலும்
அதை உயிர்ப்போடு வைத்திருக்க முடியாது
முன்னிருந்தது போலவே
எல்லாம் இருக்கும் என நினைத்தாய்
அது என் தவறு
காதல் வானவெளி சார்ந்ததல்ல
அதற்கு சேதன ரசாயனம் தேவை

Bengali original : Dilara Hashem (Bangladesh)
English translation : Carolyne Wright

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைப் படுகொலை

என் அடுத்த வீட்டார்
கணவனும் மனைவியும் பக்திமிக்கவர்கள்
தினமும் காலை தேவாலயம் செல்வர்
திருப்பலிக்கு

இன்று காலையும் தேவாலயம் செல்லுமுன்
எங்கள் சுட்டிப் பூனைகளுக்கு
பொரித்த மீன் வைத்தார்கள்
ஆம், கொடிய நஞ்சு கலந்த மீன் பொரியல்!
வீட்டில் காணிக்கை
தேவாலயத்தில் காணிக்கை
ஒன்றன்பின் ஒன்றாக
நாலு பூனைகளும்
தாகத்தினாலும் மூச்செடுக்க முடியாமலும்
செத்தன
பட்டுடல்களில் எச்சிலும் கழிவும் அப்பிக் கிடந்தன
செத்த உடல்கள் கண்டு
கண்ணீர் ஆறாய்ப் பெருகிற்று
நடுங்கும் கைகளால் ஆழக்குழிதோண்டி
அவற்றைப் புதைத்தோம்
யன்னல் திரைகளூடாக எட்டிப் பார்த்த அடுத்த வீட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிக்கையைக் கொண்டாடினர்
இவர்களால் எப்படி
இப்பாதகம் செய்யமுடிந்தது?
பூனைகள் தம் முற்றத்தில்
மலம் கழிப்பதாக
முறைப்பாடு செய்ததுண்மை
ஆனால் பூனைகள் மலத்தை
மண்ணால் மூடுவதும் உண்மை
அவற்றிடமிருந்து மனிதன் கற்றுக்கொள்ள வேண்டும்
பூனைகள் எங்கு மலம் கழிக்கவேண்டும்?
மிருகங்கள் எங்கு மலம் கழிக்கவேண்டும்?
இப்பூமி மனிதனின் ஏகபோகமா?
அயல்வீட்டு உலோகாயதர்
தினமும் தேவாலயம் செல்கிறார்கள்
தினமும் பைபிள் வாசிக்கிறார்கள்
ஆனால் மற்றைய உயிர்களை நேசிக்கும்படி
சொல்லும் பகுதிகளை வாசிப்பதில்லை
மற்றைய உயிர்கள்
தங்கள் சேவைக்கும் சுவைக்கும் உரியவை
என நம்புகிறார்கள்
ஆண்டவரே
மன்னுயிரை
மரங்களை, மிருகங்களை நேசிக்க
தங்கள் சிருஷ்டியின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள
இயற்கையோடு இசைந்து வாழ
மனிதனுக்குக் கற்பிப்பீர்!

என் அயலவர் பிராயச்சித்தம் செய்யட்டும்
என் பூனைகளின் எலும்புகளைத் தோண்டியெடுத்து
கோல்றிட்ஜ் இன் நெடும்பாவில் வரும்
அல்பட்றொஸ் பறவையைக் கொன்ற புராதன மாலுமிபோல
எலும்புக் கூடுகளைத் தம் கழுத்தில் தொங்கவிடட்டும்
ஆண்டவரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மனிதர் கண்களையும் திறவுங்கள்
பிரபஞ்சத்தின் இயக்கம்
இன்னதென்று காட்டி
அதில் அவர்கள் பங்காளிகளாக
அருள் புரியுங்கள்!

English original : K.V. Dominic (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிச்செடி

என்னை
நீ கள்ளிச் செடியாக்கினாய்
சுட்டெரிக்கும் வெய்யிலில்
நான் முட்களோடு நின்றேன்
கஷ்டங்களையும்
வெற்றிடங்களையும்
தனிமையையும்
தாங்கக் கூடிய சொற்களை
ஆதரவற்றோருக்கு
நம்பிக்கை தரும் சொற்களைப் பொழிய
துடித்துக் கொண்டிருக்கிறேன்
சொற்களின் ஆற்றலை நான் அறிவேன்
அவை பலநோய்களைத் தீர்க்கும்
அகரத்துக்கும் னகரத்துக்கும் இடையில்
அவை பிறக்கிறன
சரியான சேர்க்கைகள் அற்புதம் செய்யும்
அவை இடைவெளிகளை ஒட்டும்
அல்லது பிளவுகளை உண்டாக்கும்

அவற்றை மற்றவர்களுக்குப் பயன்படுத்த
என்னால் முடியும்
ஆனால் எனக்கு அவற்றால் பயனில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் மௌனம் என்னைக் கள்ளிச் செடியாக்கியது
ஆனாலும்
என் இருளை ஒதுக்கிவிட்டு
நான் பூத்துக் குலுங்குகிறேன்

English original : P.Gopichand (Andhra Pradesh, India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓர் ஒளிக்கீற்றுக்காக

சூரியாஸ்தமனம் போல
சந்தடியின்றிப் போய்விட்டீர்கள்
ஒரு காலத்தில்
உயிர்த்தும்பிக் கொண்டிருந்தது
உங்களிடம்
இப்பொழுது ஊமையாகிவிட்டீர்கள்
முன்போல்
இந்த அறையில் உங்கள் கீதங்கள்
எதிரொலிக்கவில்லை

உங்கள் பேரின்முன் முதல்முறையாக
'காலஞ்சென்ற' என்று சேர்த்துக்கொள்கிறேன்
இனிமேல் விண்ணப்பத்தில்
'அப்பாவுக்குச் சுகமில்லை' இரண்டுநாள் லீவுதருக'
என எழுதவேண்டியதில்லை

தனக்கு வேண்டியவர்களுடைய
இதயங்களை வென்றெடுக்க வேண்டிய ஒருவராக
நீங்கள் இல்லை
வாழும்போதோ மறைந்தபோதோ
நீங்கள் எப்பொழுதும் தனித்தே இருந்தீர்கள்
இன்று உங்களைப் பற்றிய கவலைகள்
எனக்கில்லை

University of Peradeniya
13 JUN 2019
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துகொண்டிருக்கும் அநர்த்தங்கள் பற்றி
நான் அலட்டிக்கொள்ளப் போவதில்லை
எல்லாக் கவலைகளிலிருந்தும் எங்களை
விடுவித்து விட்டீர்கள்

நீங்கள் போனபின் எல்லாமே மாறிவிட்டன
எல்லாம் சிந்திப்போகும் ஒரு விளையாட்டு நடக்கிறது
நல்லவேளை நீங்கள் இதையெல்லாம் காணமாட்டீர்கள்
உண்மையில் உங்களை வழியனுப்ப
எல்லா ஆயத்தங்களும் செய்யப்பட்டிருந்தன
அந்த விஷயத்தில் எவரும் எந்தக் குறையும்
வைக்கவில்லை

நீங்கள் இங்கே
ஓர் அழையா விருந்தாளியாய் இருந்தீர்கள்
ஆகையால், உங்கள் மனதில் உள்ளதை
யாரும் அறிய முனையவில்லை
கனத்த இதயத்துடன் சந்தடியின்றிச் சென்றுவிட்டீர்கள்

அகால நேரத்தில் கண்விழித்திருந்து
யாரும் உங்களைக் கவனிக்கவோ
ஆதரவின்றி நுளம்பு வலைக்கு வெளியே
கிடக்கின்றீர்களோ
அல்லது
பகற்பொழுதென்று நினைத்து
இரவில் குளித்துக்கொண்டிருக்கிறீர்களோ
எனப் பார்க்கவோ வேண்டியதில்லை
ஒவ்வொரு வாசலிலும் போய் நின்று
இனி உதவி கோர வேண்டியதும் இல்லை
உத்தரிப்புக் கடலில் ஊர்ந்து ஊர்ந்து
அந்நாள்களில் என்றாவது வலியால் துடித்ததுண்டா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அம்மா, அம்மா' என முனகியே உங்கள் காலம் கழிந்தது
எந்தக் குழந்தையும் தன் தாயை அந்தளவு ஏக்கத்தோடு
அழைத்திருக்க முடியாது
வாரிசின் முகத்தைக் கூடக் காணமுடியாத
ஒரு வாழ்க்கை வாய்த்ததே உங்களுக்கு!

துயர் சுமந்த பக்தனே, யாருக்காகத் தியானம் செய்கிறாய்!
வாழ்நாள் முழுவதும் யாரைத் தேடினாய்?
விழிப்புலனற்ற நீ
யாரைப் பார்க்க விழைந்தாய்? யாரை?
யாரைத் திரும்பத் திரும்ப அழைத்தாய்?
ஆண்டவனையா?
பேரழிவை நிகழ்த்திய புயலில் நீ இழந்த புனிதமான
பெண்ணையா?

உண்மையில்லைத்தான்
ஆனால் இரவு முழுவதும்
உன் புனிதமான ஊன்றுகோல் உலாவுகின்றது
உன் மந்திரம் திரும்பத் திரும்ப உச்சரிக்கப்படுகிறது
உன் தெய்விகப் பாயில்
முனிவர் ஒருவர்
தியானத்தில் அமர்ந்திருப்பதாகக் கற்பனை செய்கிறேன்

யாசகன் வெறுங்கையோடு திரும்பிப் போனான்
அவன் கண்களில் தணியாத தாகம்

Bengali original : Harashit Bala (Bangaladesh)
English translation: Abdus Selim

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதற் கீதம் – 11

காதலுக்கு எப்பொழுதும் இந்தக் கெட்ட பழக்கம்
பிறகேன் அர்த்தமில்லாமல் தயங்கியபடி நிற்கிறாய்?
போ
இந்தக் கரை இங்கேதான் இருக்கும்
தன்னைத் தொட்டதண்ணீர்
தூர
மிகத்தூர
போனபிறகும்

## காதற் கீதம் – 14

மார்பைவிட உயரமாய்
தொப்பூழைவிட ஆழமாய்
தொடைகளைவிட மர்மமாய்
இடைகளைவிட மூர்க்கமாய்
வேறென்னதான் இருக்கிறது
இந்தப் பிரபஞ்சத்தில்?
நீ ஒரு பதிலும் கூறவில்லை
உன் விழிக்கோடியில்
மர்மமான நீர்த்துளிமட்டும் மின்னியது

## காதற் கீதம் – 24

பருத்திச் செடியின்
ஒவ்வொரு
பஞ்சுக் கோதுக்குள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் முகத்தீடுக்கான
ஓர் இழை
குறைந்தது ஒன்றாவது
இருக்கும்
இந்த மரங்கொத்தி
தன் உலோகச் சொண்டால் கிழிக்கும்
சந்தனக் காட்டிலுள்ள மரத்தில் ஒருசிம்பு
குறைந்தது ஒன்றாவது
உன் சவப்பெட்டிக்காகும்
காட்டுத் தீயாகட்டும்
கடற்கீழ் நெருப்பாகட்டும்
கொழுந்துவிட்டெரியும் தீயில்
ஒருகங்கு- குறைந்தது ஒன்றாவது -
உன் ஈமத்துக்காகும்
உன் கவலையைவிடு
ஒவ்வொருமணி நேரமும் மரணத்துக்குரியதே
அதனுள் உன் பங்கு பத்திரமாயுள்ளது
இடையீடின்றி கண்ணீரைக்
கொட்டும் கண்களில்
அநந்தம் கண்கள்
இடையீடின்றி
அருவியாய்ச் சொரியும்
கண்ணீரில்
உனக்குரிய ஒருதுளி -
குறைந்தது ஒன்றாவது -
இருக்கும்
பிறகேன் கவலைப்படுகிறாய்?
உன் பங்கு பத்திரமாயிருக்கும்!

Gujarati original : Harish Meenashru (India)
English translation : Piyush Joshi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு கதை

ஜயந்த மகாபத்ர உருப்படியாக எதையும் செய்ததில்லை
அவர் என்ன செய்தார் என
இன்றைய இளைஞர்கள் அறியார்.
அவரைச் சிறிதளவு தெரிந்தவர்கள்
செத்துக் கெட்டுப் போய்விட்டனர்.
அவர் மிக மோசமான ஆள்
உண்மையைச் சொல்வதானால்,
நண்பர்களோ, உறவினரோ, எதிரிகளோ
யாரும் அவரைக் கண்டதில்லை
பின் எப்படித்தான் அவரை அறிந்திருக்கமுடியும்?
தன் கர்மத்தீயில்
அவர் இரவு பகலாய் வெந்து கொண்டிருந்தார்
மக்கள் தீயைத் தான் கவனித்தார்கள்
அத்தோடு தெளிவில்லாத சிறிது புகையையும்!

ஜயந்த மகாத்ரவின் உடல்
பல்லாண்டுகளாகத் தேய்ந்து போயிற்று
எஞ்சியிருப்பது அவருடைய வழுக்கைத் தலையில்
வீம்பு பிடித்த ஓலைத் தொப்பி மட்டுமே
அவர் லேசில் பிடிகொடாதவர்
யாராலும் அவரைத் தம்பக்கம் இழுக்க முடியவில்லை
உறக்கம் வராத கோடை கால இரவுகளில் கேட்கக்கூடிய
இனிமை சொட்டும் கதை அவருடையது
அவருக்கெதிராக விஷமத்தனமான சதிகள்
பின்னப்பட்டபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜயந்த மஹாபத்ர இடிந்து போகவில்லை.
அவருடைய உறுதியான உடற்சுவர்கள்
தகர்ந்துவிடவில்லை
நாளாக நாளாக அச்சுவர்கள் அவர்மீது கவிய
அவர் உடலில் ஏதும் எஞ்சவில்லை
ஈற்றில் எஞ்சியது அவருடையதுமில்லை
பூமியின் ஆழத்தில், கற்கேணிகளில்
சொற்களாகிய குன்றுகளில், காடுகளில், ஆறுகளில்
அது பொன்னையும் வெள்ளியையும் தேடிப்
பறந்து போய்விட்டது
பெறுமதியுள்ள ஏதும் காணப்படவில்லை

இல்லை, ஜயந்த மஹாபத்ரவைத் தேடுவதில் பயனில்லை
சில நேரங்களில் குளிர்ந்த இரவு வானத்தில்
சில நேரங்களில் உடுத்தொகுதியைச் சுற்றித்
தானே ஒரு கேள்வியாக உலாவுவார்.
சில வேளைகளில்
தான் காதலித்த பெண்ணின் வியர்வை மணத்தில்
தன்னை இழப்பார்
அவருடைய உடலின் மயிர்க்கால்கள் தோறும்
தேங்கிக் கிடக்கும்
அறியப்படாததோர் அச்சத்தில்
அவர் உழல்வதாகப் பலர் கூறுகின்றனர்
அச்சமிக்க இச்சூழலில்
ஒருவரால் மற்றொருவரை, தம்முடைமையாக்க முடியுமா?
அவருடைய இவ்வச்சம் எங்கிருந்து வந்ததென்று
யாரால் சொல்ல முடியும்?
அவருடைய தாயின் சினங்கொண்ட கண்களிலிருந்தா?
சகமாணவர்களின் மனிதத் தன்மையற்ற சீண்டல்களிலிருந்தா?
இருந்தபோதும்
அவ்வச்சம் அவர் உடலை விடாது பற்றிக்கொண்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் தான் ஜயந்த மஹாபத்ரவால்
ஒருபோதும் இருளில் நுழைய முடியாது
எங்கள் பெண்களின் குருதிதோய்ந்த தொடைகளின்
வரலாற்றில் வாழ்ந்து கொண்டிருக்கும் இருளில்
கடவுளின் கவலையற்ற கண்களில் உறையும் இருளில்
அவரால் நுழைய முடியாது
ஆனால் ஜயந்த மஹாபத்ரவை
கத்ஜோடியின் ஓய்ந்து போன கரையில்
குட்டாக்கில்
அல்லது கிறிஸ்துவ கல்லூரியின் பணியாளர் விடுதிகளில்
சிற்றூழியனின் பலாத்காரம் செய்யப்பட்ட மகளின்
விம்மலில்
தேடுவீர்களாயின் அவரைக் காண்பீர்கள்
அவரது அடிவளவில் நிற்கும் மாமரத்தின் பழுத்த
இலைகளில்
அவரைக் காண்பீர்கள்
சிறகொடிந்த பறவையின் வேதனை மிகுந்த அழைப்பில்
அல்லது சிவப்பு பலூனை உடைத்த குழந்தையின்
ஆறாத அழுகையில்
துர்க்கா பூஜையின் எட்டாம் நாளில் இடிபடும் மக்கள்
கூட்டத்தில்
இல்லை, கோயிலிலோ தேவாலயத்திலோ
அவரை ஒரு போதும் காணமாட்டீர்கள்!

மக்கள் அவரை அறியக் கூடியதாக
அவர் ஏதும் செய்ததுண்டா?
ஆம், தனது மனத்தின் வெறிச்சோடிய மரக்கிளையில்
குந்தியிருக்கும் பறவைபோல
ஒன்றன்பின் ஒன்றாய் கனவுகளை இழைக்க
அவரால் முடியும்!
தேசாந்திரியாய் அலைந்தபின்
கடைசியாக சொந்த ஊராகிய குட்டாக்கில்
நிலைகொண்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் முழுதும் தன் சைக்கிள் கடையில் இருக்கும்
மெக்கானிக் மாமாவை
அல்லது பெட்டிக்கடையில் பான் விற்கும் கலுவை
ஜயந்த மஹாபத்ர பற்றிக்கேட்டால்
அவர் எங்கே குடியிருக்கிறார் என்று சொல்வார்கள்
மார்கழி மாதத்து புகார் படரும் காலைப்பொழுதோ
பருவமழையோ அவரை எளிதில் சுட்டிக்காட்டும்
அவர்முன் கதவருகே வாலை ஆட்டியபடி
அவர் கைகளை அன்பாக நக்கும்
சொத்தி நாயும் அவரைக் காட்டும்

கவிதைகளா?
அவர் எங்கு குடியிருக்கிறார் என்று சொல்ல
அவருடைய கவிதைகளால் முடியாது
செத்தவைபோல் அவை எங்கும் சிந்திக் கிடக்கின்றன
கர்வம் பிடித்தத அவர் கவிதைகளால்
அவர் மனத்தை அடக்கியாள முடியவில்லை
அவர் உடலின் எல்லாக் கதவுகளையும் அவை அடைத்தன
லலித்கிரியில் கைவிடப்பட்ட பௌத்த குருமடத்தில்
இளைத்த முதிய பீபுல் மரம்போல
தனியே நிற்கும்
சொற்களின் ஒழுங்கின்மையில் அவர் இருக்கிறார்
அவர் குட்டாக்கில் தான் வாழ்கிறார்
ஆனால் அங்குள்ள பலருக்கு அவரைத் தெரியாது
சிலவேளைகளில் அவர்கள் சொல்வதுண்டு
ஓ, ஜயந்த மஹாபத்ரவா?
அந்த மனுஷனையா சொல்கிறீர்கள்?
அவர் கனவுகளில் வாழ்கிறவர்
ஒரு நாள் தம் கனவுகளிலே இறந்து போவார்
எவ்வளவு காலம் தான்
அவரால் பரந்த வானத்தைப் பற்றித் தொங்கமுடியும்
உண்மைதான்
ஜயந்த மஹாபத்ர ஒருபோதும் உருப்படியாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதும் செய்ததில்லை
ஆனால் அவருக்கு ஓர் இருதயம் இருந்தது
அதிலிருந்து சிறிய வெளியை
தன் நண்பர்களையும் காதலர்களையும் புதைப்பதற்கென
ஒதுக்கி வைத்திருக்கிறார்
ஈற்றில், தன்னைக் காணலாம் என்ற நம்பிக்கையில்

English original : Jayanta Mahapatra (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகளின் மிச்சம்

எலும்புகளும்....
பெண்கள் உள்ளாடைகளும்
நேற்று கைவிடப்பட்ட காவலரணிலிருந்து
மீட்டெடுக்கப்பட்டன!
'யாரம்மா நீ'
உனது பேர் ஊர் தான் என்ன?
உனது கதை யாது?
ஒற்றைப் பனையாய் உறுதிகொண்டு
தனித்து நின்றே
சந்தித்தாய் சாவை
சாவந்த வடிவமென்ன?
துப்பாக்கிக் குண்டா? ஷெல்லா?
வேறேதும் காரணமா
உனக்குக் கடைசியாகிப் போயிற்று?
இத்தனை வருடத்தின் பின் உனது கனவுகளின்
மிச்சத்தை மீட்டெடுத்தார்'
"நீ எங்கோ இருக்கின்றாய்"
என்றவாறா உன்னைப் பெற்றவைகள் காத்திருக்கும்?
ஏனோ எதனாலோ
உனை மீட்டுப் புதைப்பதற்குக் கூட முடியாதுன்
இலட்சியங்கள் சமாதியாச்சு?
பூவே.... உனைப்போல உலகம் அறியாமல்
எங்கெங்கே எத்தனைபேர் இன்றும் புதைந்துளார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டெடுக்கப்பட்ட கனவுகளின் மிச்சத்தில்
கண்ணீர் ஒருதுளியைச் சிந்துவதைத் தவிர....
வேறு என் செய்ய முடியும் எம்மால்?
இனியேனும் நின் அலையும் ஆத்மா
அமைதியுடன் நிரந்தரமாய்த் தூங்கட்டும்!

Tamil original : T. Jeyaseelan (Sri Lanka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தங்களின் வாசம்

எம் இதயங்கள் ஒன்றையொன்று தீண்டும்போது
அப்பப்பா
சிறைப்பட்ட சொற்கள் அதிரத் தொடங்குகின்றன
ஒரு பல்லியம் கேட்கிறது
ஷேக்ஸ்பியரின் பக்கங்களிலிருந்து
அன்ரனியும் கிளியோபட்றாவும்
எழுந்து வருகின்றனர்
ஒலிக்கும் முத்தங்கள் பறவை போல் சிறகை விரிக்கின்றன
மரக்கிளைகள்
மூசும் வியப்புக் காற்றில் நடனமாடுகின்றன
ஆர்வமிக்க என் தோள்கள் உன்னைச் சிறைப்பிடிக்கத்
துடிக்கின்றன
இந்தச் சடங்கு புயலாலும் இடி முழக்கத்தாலும்
புனிதமாக்கப் படுகிறது
தொன்மையான இடிபாடுகளிலிருந்து
முத்தங்களின் வாசம் முகையவிழ்கின்றது

Bengali original : Jharna Rahman (India)
English version :Faridur Rahman

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்சத்திரங்களும் நட்சத்திர விடுதிகளும்

நாற்றுக்களைத் தருகிறதோர் நிறுவனம்
பழங்களைப் பெறுகிறது இன்னொன்று,
பழங்களிலிருந்து சாற்றை எடுக்கிறது பிறிதொன்று,
எடுத்த சாற்றை நிறமூட்டிச் சுவையூட்டி
பானமாக்குகிறது மற்றொன்று
அந்தப் பானங்களை விளம்பரமாக்குகிறதொன்று,
பானங்களை விற்றுத் தீர்க்கிறது இன்னொன்று.

நிறுவனங்களின் லாபநட்டக் கணக்குகளுக்கு அப்பால்
தோட்டத்திலேயே நிற்கிறார்கள் விவசாயிகள்.

நிறுவனங்களிலிருந்து விரையும் வண்டிகள்
தோட்டங்களுக்குச் செல்கின்றன
பிறகு ஆலைகளுக்கும் கடைகளுக்கும்
கொம்பனிகளுக்கும்
இரவில் தலைவர்களின் மாளிகைகளுக்கும்
விருந்தினர் விடுதிக்கும் செல்கின்றன.
அப்படியே வீதியெங்கும் நிறைகின்றன.
நாட்களெல்லாம் வண்டிகளுக்குச் சுமையேற்றியும்
பாதையில் வழிவிட்டும்
தோட்டத்திலேயே நிற்கிறார்கள் விவசாயிகள்.

மேலே விரிந்திருக்கிறது வானம்.
வானம் பார்த்திருக்கிறது பூமி
வானத்தைப் பார்த்தபடியே விவசாயிகளும்.

Tamil original : Karunakaran (Sri Lanka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியனின் நிறம்

என் மகள்
தன் எண்ணங்களுக்கு வண்ணம் தீட்டுகிறாள்
தடித்த தாள் மீதுள்ள கோடுகளுக்கு குறுக்கே
அவள் விரல்கள் ஓயாது நகருகின்றன

'சூரியனின் நிறமென்ன?' அவள் தடுமாறுகிறாள்
மஞ்சள், ஓறேஞ்ஜ், கடுஞ்சிவப்பு?
யாரறிவார் சூரியனுடைய நிறத்தை?
ஒரு கலர்ப் பென்சிலை எடுக்கிறாள்
வண்ணங்களை நிரப்பு முன்
பென்சிலைக் கூராக்க முயல்கிறாள்
அதன் முனை முறிகிறது, மீண்டும் மீண்டும்
அவள் நரம்புகளே கூராகின்றன

எரிச்சலோடும், குழப்பத்தோடும்
தலையை நிமிர்த்தி, மெல்ல ஒரு பக்கம் சாய்ந்து
ஒரு புதிர்ப் பார்வையை என்மீது வீசுகிறாள்
என்னைப் பற்றி அவள் என்ன நினைக்கிறாள்
என்பதை அவள் கண்களே சொல்லுகின்றன
நான் சூரியனுக்கு நிறம் தீட்டியதில்லை
அதன் நிறங்களை அறியும் அளவுக்கு
நெருக்கமாய் உணர்ந்ததுமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளைகளில்
தாங்கமுடியாத அதன் வெப்பத்தை வெறுத்ததுண்டு
வெய்யிலில்லா மப்பையும் வெறுத்ததுண்டு
ஆனால் நிறங்கள்?
சூரியனுக்கு நிறமுண்டா?
சூரியன் என் சின்ன மகளோடு புன்னகைக்கிறான்
அந்தப் புன்னகை என்ன நிறமென்று சொல்லமுடியுமா?

வெளியே மழை கொட்டுகிறது
உள்ளே என் மனசாட்சி அரிப்பதால்
பயங்கரமான வெட்ட வெளியில் உருவான குளம்
சூரியனுடைய பிரதிபலிப்பை ஏற்கிறது
குளத்திலுள்ள சூரியன் என்ன நிறம்?
என் மனசின் நிறம்போலும்!

என் மகளுக்குச் சொன்னேன்:
உன் சொந்தச் சூரியனுக்கு நிறந்தீட்டு, கண்ணே!

Nepali original and English version : Keshab Sigdel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவி புகழ்ப்பா

உச்சி வகிட்டில் இருந்த
நாட்டுப்புற சிந்தூரத்தை அழித்துவிட்டு
அழகு மாடத்திலிருந்து வெளிவந்தாள்
கவர்ச்சிகரமான அவ்வழகுச் சிலை
சிலர் பகிடி விடுகிறார்கள்
சிலர் புகழ்கிறார்கள்
எல்லோரும்
உன் அழகை ஆராதிக்கிறார்கள்
கெட்ட முன்மொழிவுகளால்
உன் செவி நிறைகிறது
பழைய படிமங்களின் நினைவில்
சிலர் அடக்கமுடியாமல் அழுகிறார்கள்
எல்லாவற்றையும்
தூர இருந்தும் கிட்ட இருந்தும்
புறமிருந்தும் உள்ளிருந்தும்
அவதானிக்கும் எனக்கோ
அடக்கமுடியாத சிரிப்பு
சங்கு வளையலும்
சிந்தூரமும் தரித்த உன் பழைய படிமம்
உன் உண்மையான படிமமல்ல
இன்றைய, பரபரப்பூட்டும்
கையில்லா ரவிக்கை நாகரிகம்
உன் உண்மையான இயல்பல்ல
சிலவேளை
பிறந்தநாள் தொட்டு அடிமை ஆகவும்
சிலவேளை
போதையூட்டும் பாவையாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைப் படைத்தவன் யார்?
கடவுள் என்ற கலைஞன் அல்ல
அத்தகைய பெரிய கலைஞன்
இத்தகைய இழிசெயல் புரியான்
உன்னைப் படைத்தவன் ஆறடி மனிதன்
மீண்டும் ஒருமுறை, இறுதியாக
உன் களிமண் படிமத்தைச் சமை
உன்னுள்ளே இருக்கும் திறமைச் சுடரை ஏற்று!
அசுரமர்த்தனியே
பத்துக்கை கொண்ட உன் அழகிய உருவத்தைப்பார்
அதிகார போதை கொண்ட ஆண் வையகம்
உன் மண்பாதத்தில் விறைத்துப் போய்க் கிடக்கிறது
உன் மீது உமிழ்ந்த
உன்னைப் புகழ்ந்த
இவர்களை இன்னும் பொருட்படுத்துகிறாயா?
மற்றவர்கள் வகுத்த
குறுகிய வட்டத்தை விட்டு
வெளியே வா!
பத்துக் கைகளிலும் பத்து ஆயுதங்கள் ஏந்து!
உன் இரு பாதங்களையும்
சிங்கத்தில் ஊன்றி நிமிர்க!
எங்கே பார்ப்போம் பெண்ணே!

Bengali original : Krishna Bose (India)

English translation. Sanjukta Dasgupta

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பளிப்பு

அவளுக்கு
ஒவ்வொருவரும் ஏதாவது கொடுத்தார்கள்
சிலர்
பளபளக்கும், ஒலிக்கும் வெள்ளிக் காசு தந்தனர்
ஒருவர் விலையுயர்ந்த சவர்க்காரம் கொடுத்தார்
அவள் உயரத்தைக் கருத்திற் கொண்டு
வண்ணப்பாவாடை வாங்கித்தர
முன்வந்தனர் சிலர்
மென்மையான கறுத்த சருமம் கொண்ட
அம்முதிரா இளம்பெண்
களிப்பூட்டும் பாவையாய் தொழிற்படவா
சந்தால் குறிச்சியிலிருந்து
தனியே வந்தாள்?
விடுமுறையை
உல்லாசமாய்க் கழிக்க
காட்டுக்கு வந்த
பகட்டான இளைஞனே
உன்னோடு சரசமாடி
உறங்கி
அறியாப் பருவத்திலேயே
உப்புக்கும் அரிசிக்கும்
இளந்தசையை விற்கக் கற்றுக்கொண்டாள்
விற்றபின்
மண் சுவர் கொண்ட
தன் ஓட்டைக் குடிசை நிழலில்
ஒதுங்கலானாள்

ersity of Peradeniya
13 JUN 2019
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் ஒவ்வொருவரும், கடைசியில்,
ஏதோ கொடுத்தீர்கள்
ஆனால்
நீங்கள் மட்டும்
ஓர் அரிச்சுவடியும், ஸ்லேற்றும், பென்சிலும்
கொடுத்திருந்தால்!

Bengali original : Krishna Bose (India)
English translation : Sanjukta Dasgupta

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு இழந்தோர்

ஆண்டுகளாகிய விறகுக் கட்டுக்கள்
சடசடத்து எரிந்தன
அண்டா
மெல்லச் சிவந்தது

ஒரு நகரத்தில்
தாராளமாக தண்ணீர் கிடைத்தது
மற்றொரு நகரத்தில்
அது ஆவியாகியது
ஒரு நகரம் பாலைவனமாகியது
மற்றொரு நகரம் வளம் கொழித்தது

ஒரு நகரத்த்தை ஒளிகொண்டு நெய்தோம்
மற்றொரு நகரத்தில்
நாம் திருடராய்ப் போனோம்
ஒரு நகரத்தில் தலைகள் வெட்டப்பட்டன
மற்றொரு நகரத்தில்
அவர்களுடைய படங்களைத் தொங்கவிட்டோம்

ஒரு நகரத்தில்
கனிவை நாடினோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொன்றில்
நாம் சோர்வுற்றோம்

ஒரு நகரத்தில்
பாடல்கள் கோத்தோம்
மற்றொன்றில்
அவற்றை கண்ணீர்க் கால்வாய்களில் மூழ்கடித்தோம்

எல்லா உணர்ச்சிகளும்
அண்டாவில் கிடந்து கொதித்தன

பற்றி எரியுங்கள்
என் மக்களே
பற்றி எரியுங்கள்
எரிந்து
நெருப்பிலிருந்து
பொன்னாய் வெளியே வாருங்கள்!

Hindi original : Kshama Kaul (India)
English version : Arvind Gigoo

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலமரத்தின் கதை

சந்நிதியில்
நிலவில்
தியானத்தில் நிற்கிறாள் அவள்
அன்பின் ஊற்றைத்தேடி
தன்வேர்களை
அன்னை பூமிக்குள் ஆழப்பாய்ச்சுகிறாள்

சூரிய ஒளியில் அவள் மூழ்குகிறாள்
புழுதி ஆடையை அணிகிறாள்
தன் கொம்பர்களை நிலவில் குளிப்பாட்டுகிறாள்
அன்போடு கைநீட்டி அழைக்கிறாள்

என் மார்புச் சூட்டில் சிறகடித்த
இளம் பறவைக் குஞ்சுகளே
எங்கு போய் ஒளித்தீர்கள்?
கூடுகளில் இரத்த வெடில் அடிக்கிறதே
பிய்ந்த சிறகுகளைக் காண்கிறேன்
என் அருமைக்குஞ்சுகளே
எங்கு போய் விட்டீர்கள்?
கோடரியால்
அவர்கள் என் நெஞ்சைப் பிளப்பார்கள்
வாளால் என் அவயவங்களை அரிவார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகும் தாயன்பின் ஊற்றான
என் குருதியை உறிஞ்சுவார்கள்

என் நிழலில் தியானம் செய்ய
புத்தர்கள் வருகை தரும் நாளுக்காகக்
காத்திருக்கிறேன்
எனக்கு நடந்த அநீதியின் கதையை
அவர்களுக்குச் சொல்ல!
என் இதயக் கொம்பர்களில்
கோடானுகோடி முட்டைகளை அடைகாப்பேன்!
அன்பு மலர வேண்டி
அன்னை பூமிக்குள்
என் வேர்களை ஆழப் பாய்ச்சுவேன்

Sinhala original : Kumara Hettiarachchi (Sri Lanka)
English translation: A. T. Dharmapriya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரும்பி வா

தனித்து விடப்பட்ட யுகத்தவளாகிய என் காதலியே
சில யுகங்களாக உன்னை நான் காணவில்லை
தேன் சிந்தும் முழு நிலவு
மூங்கில் காட்டில் கீற்றுக்களாக நுழைகிறது
மின்மினியின் ஒளி தனிமையில் கூச்சப்படுகிறது
ஓயாது கீச்சிடும் இரவுப் பூச்சிகளின் சத்தம்
புல்லாங்குழலின் இசையாகப் பின் தொடர்கிறது
இருள் கவியும் இவ்விதயத்தை விட்டு
அர்த்தமற்ற மறதிக்காளாகி
எங்கே ஒளித்திருக்கிறாய் நீ?

வெட்ட வெளியாகிய நூற்றாண்டுகளுக்கப்பால்
தனித்துப் போய் எங்கே உட்கார்ந்திருக்கிறாய்?
உன் இதயத்தைப் பொசுக்கிய அக்குறைதான் என்ன?
நிலவால் ஈரமாகிய பனியில்
மூங்கில் இலைகள் சிந்திக் கிடக்கின்றன
பூச்சிகளுடைய கிறீச் ஒலிகள்
பண்டைய முரசுகளாய் முழங்குகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே என்னிடம் திரும்பி வா!
நிலவின் நிழல்களை மிதித்துக்கொண்டு
ஏங்கும் இவ்விதயத்திடம் வந்துவிடு!
நூற்றாண்டுகளின் அதிர்வுகளைச் சுமந்தபடி
நீட்டிய கைகளுடன் வேரோடிப்போய் நிற்கிறேன் நான்!

Bangla original and English version : Mahboob Saadiq (Bangladesh)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தளரா நம்பிக்கை

அந்த சங்கடமான காலங்களில்
அவள் என்னை இறுகப் பற்றியிருந்தாள்
மரங்கள் இலைகளை உதிர்த்தன
அருவிகள் நீரை வீணாக்கின
கூழாங்கற்கள் ஆருமறியா ஆழங்களை
நோக்கி உருண்டன
நாள்கள் இரவோடு இணைந்தன
நிலவின் சுவடுகள் காணப்படா இருள்
எல்லா வலிகளையும் தாங்கி
அவள் வாழ்க்கைக்கு முகம் கொடுத்தாள்
வலிகளோடும் இடுக்கணோடும்
நோய்களோடும் பிணிகளோடும்
குருதியோடும் கந்தக சுவாசம் மணக்கும் வியர்வையோடும்
பைத்தியமும் துக்கமும் பிடிக்க
எல்லாத் தொடர்புகளையும் தவிர்த்து
நானும் குழப்பமான காலங்களூடு நகர்ந்தேன்

ஒரு மரத்தின் இறுகிய நிழல்போல
பதறாது அசையாது அவள் தனியே நின்றாள்
காற்றுவீசாத, மதிய வெய்யிலில்
அவள் அங்கே நின்றாள்

இலைகள் உதிர்கின்றன,தளிர்க்கின்றன
வடிந்த நீர் திரும்பி வருகின்றது துளிகளாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரங்கள் போல மின்னிக்கொண்டு!
புயல் கடந்துவிட்டது
களங்கமில்லா மதியின் கீழ் பழைய உலகு பிரகாசிக்கிறது
அவளைத்தான் காண முடியவில்லை
நடனமிடும் நம்பிக்கையின் தாளத்துக்கமைய
சூரிய சந்திரரின் சஞ்சாரத்தை அடையாளப்படுத்தும்
என் தேடல் வியர்த்தமாகிறது

Bangla original and English version : Mahboob Saadiq (Bangladesh)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓளக்கன சிலை

என் கண்களில் நிரம்பிவழியும் கண்ணீரால்
உன் தூய பாதங்களைக் கழுவுவேன்

மென்மையான உன் திருவடிகளில்
வாடி உதிரும் என் இதயமலர்களைச் சொரிவேன்
புத்தரையோ எந்தக் கடவுளையோ வழிபடாது
ஆணவத்தில் மூழ்கியிருந்த நான்
உன்னை
ஒரு குளிர்ந்த இரக்கமற்ற கல்லெனக் கருதினேன்
கல்லாலான உன் நெஞ்சிலிருந்து ஊற்றெடுக்கும்
எல்லையிலாக் கருணையைக் காணத் தவறினேன்
கள்ளமிலா உள்ளங்களில் எழும்
மென்மையான எண்ணங்களையும் உணர்வுகளையும்
கல்லாலான உன்னால்தான் உணரமுடியும்!
இவ்வுலகில் வேறெந்த ஆதரவும் காணாது
மாசடைந்த நகரத்தைக் கைவிட்டு
காடுகளுள் ஒடுங்கித் தியானத்திலிருந்த
உன்னைத் தேடிவந்தேன்
மேலேயுள்ள நீலவான் நோக்கி எழும்
என் மனசையும் கண்களையும் கவரும்
உன் பூதாகரமான புத்த உருவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் சந்நிதியில்
நான் எத்துணை சிறியவன் என உணர்த்தும்
தேவனே உன் திருவடியில் வீழ்ந்து
பணிந்து வேண்டுகிறேன்:
இந்த வாழ்வின் அர்த்தத்தை
- அப்படி ஒன்று இருந்தால் -
எனக்கு விளக்குவாயா?

Sinhala original : Mahagam Sekara (Sri Lanka)

English translation: A. T. Dharmapriya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்தம்பிதம் அல்லது...

கடவுள் பெரியவர்
அவரால் அச்சுறுத்தல் ஏற்படுவதரிது
ஒருவரையொருவர்
கொல்லும் முனைப்போடு
ஷெல்களோடும் பீரங்கிகளோடும் விளையாடும்
தன் பிள்ளைகளை
அவர் அச்சுறுத்துவதில்லை
விலக்கப்பட்ட கனிகளை உ ண்டு
தம் எதிர்காலத்தைத் தொலைக்கிறார்கள்
தங்கள் மேலங்கிகளுக்குள்
குத்துவாள்களை ஒளித்து வைக்கத் தெரிந்தபோதும்
பல்வேறு பிரார்த்தனைகளிலும்
யாசகர் போல
சமாதானத்துக்காகக் கையேந்துகிறார்கள்

கடவுள் மூடர் அல்லர்
அவர் உண்மையில் இரக்கமுள்ளவர்
தம் பிள்ளைகளுக்கு வழங்க
அவரிடம் போதிய அளவு
பாணும் வெண்ணெயுமுண்டு
அவர் தளம்புவதில்லை
கடவுள் எல்லாவற்றையும் படைக்கிறார்
ஆனால் எதையும் தமக்கென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வைத்திருப்பதில்லை
கடவுள் மனிதரைப் படைத்தார்
ஆனால் அவர்கள் எதையும் கைவிடுவதில்லை
வெறுப்பினால் நிரம்பிய மனிதத்தலை
என்றும் நிமிர்ந்தே உள்ளது
ஒவ்வொரு கணமும்
கடவுளுடைய வெகுமதிகளுக்காக
அதே பாணுக்கும் வெண்ணெய்க்குமாக
விலங்குகள் போல சண்டையிடுகிறார்கள்
கடவுள் பெரியவர்தான்
ஆனால் இவ்வாறுதான்
அவர் இருப்பு
மனித அச்சுறுத்தலுக்குள்ளாகிறது
என்றோ -ஒரு நாள்
கடவுள் எதிர்வினை ஆற்றுவாரா?
அல்லது ஸ்தம்பித்து விடுவாரா?

Engish original : Mohammad Nurul Huda (Bangladesh)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் காண்பது

(நண்பர் கவிஞர் ர.்.பிக் நௌஷாத்துக்கு)
என் நேரக்கோட்டைத் திறந்தவுடன்
முகநூல் என்னைக் கேட்கிறது
'உன் மனதில் இருப்பது என்ன?'
சற்றுக் குழம்பியவனாய்
என் சிந்தனை ஓட்டத்தைக்
கீழ்க்கோடிட அமர்கிறேன்
அவற்றுட் பல இனித்தான் வளர வேண்டியவை
வேறு பல என் புருவம் அளவு நெருக்கமானவை
மேலும் பல பிறந்ததும் போய்விட்டன
ஆனாலும் முடிவிலாத ஓர் இரவு கூட
ஒரு வைகறையில் முடியவேண்டும்
நான் இப்பொழுது மீட்டுப்பார்ப்பது
என்னையே' வேறெதையுமல்ல
நான் மூழ்குகிறேன்
எட்டாத ஆழமே என ஆதாரம்
முடிவிலாத வானத்தில் உன் துண்டை விரித்து
நீ என் கண்களை மறைக்கையில்
நாரைகள் உயரப் பறக்கத் தொடங்குகின்றன

பிறகு ஒரு கணத்தில்
என் அன்பே
நான் எல்லாவற்றிலும் எதையும் காண்கிலேன்
எதிலும் எல்லாவற்றையும் காண்கிறேன்

English original : Mohammad Nurul Huda (Bangladesh)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம்

நிலவொளி வெள்ளமாகப் பாய்ந்து
மண்ணைத் தழுவி முத்தமிடும்
ஒருமாலைப் பொழுதில்
உன் கண்களுக்குள் எட்டிப் பார்த்து
என் உருவத்தை அங்கு தேடினேன்
உன் கண்களுள் என்னை
நீ காவிய போது பரவசமானேன்
அந்த இரவு கனவுபோல் கழிந்தது
அவ்வழகிய கணத்தில்
காதலின் மகத்துவத்தைச் சொல்லும் கவிதை
இன்னும் எழுதப்படவில்லை எனக் கருதினேன்

ஆனால் இன்று
வாழ்க்கையின் கோடையில்
துன்பத்திலும் வலியிலும் மூழ்கிய
என் கண்கள் உன் கண்களிலிருந்து விலகி
நெடுந்தூரம் வந்துவிட்டன
நீ மதுவுக்குள் நீத்தியபடி
அவ்வுருவங்களைத் தேடுகிறாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானோ
கனவுகளற்ற ஓர் இரவில்
படுக்கையில் கிடந்தபடி
காதலைவிட
காதலின் மகத்துவத்தைச் சொல்லும்
கவிதைகளே சிறந்தவை
என உணர்கிறேன்

Sinhala original : Monikka Ruwan Pathirana
English translation: A. T. Dharmapriya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹைக்கூ

காற்றே வீசாதே
பூமர நிழலில
அகதிகளின் கஞ்சிப்பானை

தொலைக்காட்சிக் 'கிறிக்கெற்'
கரவொலிச் சிறுவர்
பரணில் கிட்டிப்புள்

நாய் குரைக்கும் இரவு
திடுக்கிடும் தென்னங் குருத்துக்கள்
விடியலில் தோரணமா?

கூந்தல் அசைய
இசை அமைக்கும்
கொலுசு

பனங்கூடல் அழித்தோர்
தீப்பொறியால் திகைத்தனர்
சீவிய நுங்கில் சிவன்

இராமருக்குக் கோயில்
பாபருக்கு மசூதி
கடவுளுக்கு?

Tamil original :R. S. Muraleetharan (Sri Lanka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறவாதே

கவலைகள் அடுத்தடுத்து வரும்போது
என் ஆத்மாவில் சாய்ந்து கொள்ள மறவாதே
அவை அனைத்தையும் நான் மறக்கச் செய்வேன்

செய்வதற்குப் பலகருமங்கள் உள்ள போது
என் ஆத்மாவில் சாய்ந்து கொள்ள மறவாதே
ஒரு கணத்தில் அவற்றை முடித்துவிடுவேன்

உன்னால் பாரம் சுமக்க முடியாதபோது
என் ஆத்மாவில் சாய்ந்து கொள்ள மறவாதே
உன் சுமைக்கு நான் தோள் தருவேன்

சந்தியிலே நீ தடுமாறி நிற்கும்போது
என் ஆத்மாவில் சாய்ந்து கொள்ள மறவாதே
சிறந்ததொரு வழியை நான் காட்டுவேன்

வலிமையான காற்று உன்னைத் தாக்கும்போது
என் ஆத்மாவில் சாய்ந்து கொள்ள மறவாதே
உன் மனதுக்கு நான் நிழல் தருவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்ந்து போன உணர்வு ஏற்படும்போது
என் ஆத்மாவில் சாய்ந்து கொள்ள மறவாதே
நீ வலிமையை மீளப்பெற நான் உதவுவேன்

நீ முதுமையால் தளரும்போது
என் ஆத்மாவில் சாய்ந்து கொள்ள மறவாதே
நான் உன் ஊன்றுகோல் ஆவேன்

இறுதி மூச்சை நீ விடும் வேளையில்
என் ஆத்மாவில் சாய்ந்து கொள்ள மறவாதே
உடனடியாக உயிர் மூச்சை ஊதி
உன் உயிரை மீட்பேன்

ஆத்மாவில் சாய்ந்துகொள்,
ஆத்மாவில் சாய்ந்து கொள்
என் ஆத்மாவில் சாய்ந்து கொள்ள மறவாதே

Telugu original and English version : P.Nagasuseela (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

நான்
வீழ்ந்து கிடக்கும் ஆயிரம் ஆண்டுக்காலமதில்
சுற்றியுள்ள அகழிகளை என் மண் மூடியுள்ளது
கொஞ்ச மண் பக்கத்துக் கிராமங்களுக்கு
செங்கல் அரியவும் வீடுகட்டவும்
கொண்டு போகப்பட்டுள்ளது
நான் வீழ்ந்துகிடக்கும் மதில்
என்மீது உருவான பாதைகளைச் சுமக்கும்
நகரும் காலத்தின் யாத்திரிகன்

நீ ஒரு கோபுரம் சூழ்ந்த கோட்டை
நீ புதியவளல்ல
ஆயினும் படுதாக்கள் தொங்கவிட்ட
உன் சுவர்கள்
தூரதேசத்து மனிதர்களை வியக்க வைக்கின்றன
உன் கொலைகாரர் இன்னும் அச்சுறுத்துகின்றனர்

இவ்வறண்ட, மறக்கப்பட்ட மண்ணில்
நீயும் நானும்  கூடி வாழுகிறோம்
ஆயினும் எங்கள் மடிகளில் வளரும் மதலைகள்
எங்கள் புழுதியைப் பயன்படுத்தி
எங்கோ வெகுதூரத்தில்
நாளைய கோபுரங்களைக் கட்டக்கூடும்

Pashto original  and English version:
Nagib Manalai (Afghanistan)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

காலையில் சூரியக் கதிர்கள்
மலையின் குருதியால் சிவக்கின்றன
மதியம் குளிரால் இதயம் கல்லாகிய வெண்பனிக்குக்
காய்ச்சல்
ஆயினும் அதன் நெற்றியில் வியர்வை பெருகுகிறது

பிற்பகல்,இதயம் உருகுகிறது
விம்மல் இல்லை, அழுகை இல்லை, ஒப்பாரி இல்லை
சில, மிகச்சில கண்ணீர்த்துளிகளே சிந்துகின்றன

சூரியன் விழும்போது
நேரத்தை வீணாய்க் கழித்ததற்கு வெட்கப்பட்டு
பனிபடர்ந்த மலையின் கன்னங்கள் சிவக்கின்றன
காலமெனும் இருண்ட மூடுபனி
மேலாடையால் தன் கழிவிரக்கத்தை மறைக்கின்றாள்

இரவு கவிகிறது
மரணம் வருகிறது
எல்லாம் மங்கி மறைகின்றன

காலை மீண்டும் வருமா?

Pashto original and English version :
Nagib Manalai (Afghanistan)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நானும் என் கிழவியும்

வெள்ளையர் வெளியேறினர்
கிழவரும் இறந்தார்
“சுயராஜ்யம் வந்துவிட்டது”
அவர்கள் கூவினார்கள்
கடந்த அறுபத்தைந்து ஆண்டுகளாக
அவர்கள் சத்தமிடுகிறார்கள்
மாரித்தவளைகள் போல, கிரமமாக!
அவர்கள் கூக்குரலால் ஒன்றும் ஆகவில்லை
ஐந்து வருடம் ஆகுமுன்பே
வாக்குக்கேட்க வந்து விடுவார்கள்
மீண்டும், மீண்டும்
வலோ நமேரி இம்முறை போட்டியிடுகிறாராம்
நல்ல மனிதர்
பாபாசாஹிப் காலத்திலிருந்து
இந்தப் பேய்களிடையே
ஏழைத் தீண்டத் தகாதவர்களுக்காக
பாடுபடுகிறாராம்
இந்த அப்பாவித் தேவதைக்கு
என்ன வாய்ப்பு இருக்கப்போகிறது?
சொல்லு, கிழவி
இம்முறை நாம் என்ன செய்யலாம்?
கிழவா, நீ பிறப்பிலேயே கள்ளமில்லாதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளெல்லாம், வாழ்நாளெல்லாம்
வியர்வை சிந்தி உழைப்பவன்
கேள்விப்படவில்லையா
தலைக்குப் பத்து ரூபா கொடுக்கிறார்களாம்
அதற்குமேல் ஒரு சிற்றுண்டிப் பொதியுமாம்!
ஒரு கார் உன்னை ஏற்றிக் கொண்டுபோய்
திரும்ப எங்கள் குடிசை வாசலில் இறக்கிவிடுமாம்
வயசான காலத்தில் வாழ்க்கையை அநுபவியேன்
விரும்பினால் ஒரு மிடறு 'தேசி' மதுவும் பருகு!
வலோ நமேரியை இறைவன் ஆசீர்வதிக்கட்டும்
ஆனால் இம்முறை நாங்கள் மனுபாய்க்கு வாக்களிப்போம்!
போய்,பேரம்பேசு
எனக்கும் என் கிழவிக்குமாக
எம்மிடம் இருவாக்குகள் உண்டென்று சொல்லு!
எஜமானர்களே
தலைக்குப் பத்து ரூபா என்று கேள்வி
பன்னிரண்டு தருவீர்களாயின்
இரண்டு வாக்குகள் தருவோம்
நானும் என் கிழவியும்
அது அதிகம் இல்லை
எம் இருவருக்கும் ஒரு நாள் உழைப்பு
இந்தப் பெருநாளில் எங்களுக்கு ஓய்வு கிடைக்கும்
இல்லாவிட்டால்
காசிவாடில் எலும்பு பொறுக்கப் போய்விடுவோம்
ஒரு பைக்கு பாகோ மேஹ்தார் அஞ்சு ரூபா தருவான்
நாள் முடிவில்
பாணும் பருப்பும் கிடைக்கும்
எஜமானர்களே
உங்களுக்குப் புண்ணியம் உண்டாகட்டும்
எங்களுக்கு இந்தச் சுற்றுலா ஆகட்டும்!
சொல்லுங்கோ வெயில் ஏறுகிறது
தோளில் சாக்குப் பைகளுடன்
கிழவி கனநேரமாக காத்திருக்கிறாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பாவம் எனத் தெரியும்
ஆனால் சொன்ன சொல்லைக் காக்கவேண்டும்
எங்கள் வாக்கு உங்கள் மனுபாய்க்குத்தான்
சொல்லுங்கோ, தலைக்கு பன்னிரண்டு தருவீர்களா?
பெறுமதி மிக்க இரண்டு வாக்குகள் வைத்திருக்கிறோம்
நானும் என் கிழவியும்!

Gujarati original : Neerav Patel (India)
English version : G.K.Vangar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவும் முடிவிலியும்

தற்போது
முடிவில்லாப் பிறப்பை மேற்கொள்ளும்
அத் தனித்த பறவை நான்
அறியாத் தொலைவிலிருந்து
இறங்கிவரும் பருந்து நான்
அச்சமூட்டும் இருண்ட இரவில்
மங்கிவரும் ஒளி நான்
அமைதியான நீல வானத்தால்
நான் சலனமடையவில்லை
காற்றுத் தீண்டினாலும்
என் உடல் பொருட்படுத்தவில்லை
என் பெறுமானத்தை உணராத
இவ்வுலகுக்கு உரியவளல்ல நான்
எந்தத் தீயும் என்னைப் பொசுக்கவில்லை
எந்த ஆசைத்தீயும் என்னுள் எரியவில்லை
என்னை நோக்கி விரைந்து வருகிறது நீர்
ஆனால் எனக்கோ தாகமில்லை
நான் சுதந்திரமான காவலாளி
தனிப்பயணம் போகிறவள்
ஆனால் ஒரு நாள்
முடிவிலாப் பறப்பை மேற்கொள்ளும்
ஒற்றைப் பறவையும் ஓயும்
தாழப்பறக்கும் பருந்தும் விழும் - ஐயமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பூதங்களும் வழிவிட்டு
மங்கும் ஒளி மிகவிரைவில் மறையும்
என் கால்கள் நிலத்தில் பாவ
நான் தீயால் எரிக்கப்படுவேன்
நீரால் குளிரடைவேன்
சாம்பலாய் மாறுவேன்
நீல வெளியை நோக்கி
காற்றால் காவிச் செல்லப்படுவேன்

English original : Padmaja Iyengar (India)

University of Peradeniya
13 JUN 2019
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றுப் பெறாத பாடம்

வற்றிய இலைகள் எல்லாம்
ஒவ்வொன்றாய் உதிர்ந்து
முற்றத்தை நிரப்புகின்றன
ஒரு மேட்டில் குந்தியுள்ள கரிக்குருவி
'ருவீக்' என சன்னமாகக் கத்துகிறது

கரிக்குருவியே
என்னை ஓர் ஆசிரியன் என அறிந்து
நீ கேட்கும் கேள்வியா அது?
என் வாழ்க்கையின் பாதி நாளும்
கேள்விகளுக்குப் பதிலளித்தே
கழிந்தன
இப்பொழுதோ என் நரைத்த தலையில்
வலுவில்லை

என்னை அப்பொழுது கேள்வி கேட்டவர்கள்
இப்பொழுது எங்கு போய்விட்டார்கள்?
அவர்களை நோக்கி எழுப்பப்படும் கேள்விகளுக்கு
என்ன விடைகள் தருகிறார்கள்?

பிள்ளைகளே, பூமலர்ந்த காட்டு வழிகளில் நடந்த நீங்கள்
மலைச் சரிவுகளிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகில்களைக் கூட்டி வந்த நீங்கள்
குளிர்ந்த நீரோடைகளில் கால்களைக் கழுவ
இறங்கி நடந்த நீங்கள்
எங்கே இருக்கிறீர்கள் இப்போ?
சொல்லுங்கள்,எந்தத் தொலைவில் இருக்கிறீர்கள்?

பாடசாலைக்கு விளையாட்டுத் திடல் இல்லை
பஸ் தடத்தில் பயிற்சி பெற்றீர்கள்
நூறு மீற்றர் ஓட்டத்தை, கொதிக்கும் வீதியில்
வெறுங்காலோடு ஓடினீர்கள்
வாகனங்களைப் பார்த்தபடி
வளைவில் நான் நின்றேன்
எங்கே இருக்கிறீர்கள் எல்லோரும்
கிட்டவா தூரத்திலா?
நான் பார்க்கக் கூடியதாக
கையை உயர்த்தி 'இங்கே'
என்று சொல்லுங்கள், தெளிவாக!

இப்பொழுதும், முன்புபோல
கொட்டும் மழையில் நனைகிறீர்களா?
வெருட்டும் புயலில் அகப்படுகிறீர்களா?
அடித்துவரும் ஆற்றினூடு நடக்கிறீர்களா?
சூரியனில் சிரிப்பைக் காண்கிறீர்களா?
வீதியில் 'ரேஸ்' ஓடுகிறீர்களா?
முன்னே வெற்றி இலக்குத் தெரிகிறதா?

என் வாழ் நாளில் பாதியை
பதிலளித்தே கழித்துவிட்டேன்
என் நரைத்த தலையில்
இனியும் வலு இல்லை!

Sinhala original : Parakrama Kodituwakku (Sri Lanka)
English translation : Ranjini Obeyasekere

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னளவில் பெண்ணியம்

"சொன்னாக் கேளுங்கோ
உவளை அணைக்காதையுங்கோ!"
மனைவி குறிப்பிட்டது
நான் உணவு கொடுத்துக் கொண்டிருந்த
கறுப்புப் பெட்டைப் பூனையை!

பெட்டை நாய், பெட்டைப் பூனை எல்லாம்
என் மனைவிக்கு அலர்ஜி
குட்டிபோடுமாம், காவிக் கொண்டு திரிய ஏலாதாம்!
"நீயே பெண்ணினத்தை ஒதுக்கலாமா?"
என்றவாதமெல்லாம் அவளிடம் எடுபடுவதில்லை!

நான் என் சுயதர்மத்தை ஏன் விடவேண்டும்?
தொடர்ந்து பெட்டைப் பூனையை
ஆதரித்துக் கொண்டிருந்தேன்
அதுக்கு மனுஷ நடத்தை விளங்கும் போல!
மனைவிமுகத்தில் விழிப்பதில்லை!

"எங்கையிருந்து சொல்றன் எண்டு பாருங்கோ
அலையப் போறியள்!"
மனைவியின் சாபம் பலித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டைப் பூனை
மூன்று பெட்டைக் குட்டிகள் போட்டுது
தாய்ப் பூனை
செத்தையிலும் சீலிங்குக்குள்ளும்
பொத்தி வைச்சுப் பாலூட்டி வளர்க்குது!

இரண்டு கிழமை கழிய
ஒவ்வொன்றாய்த் தலை நீட்டுகினம்
வீட்டு மூலையெல்லாம்
ஓடிஓடி ஆராயினம்
வெருண்டோடாமல் அவையை வைச்சிருக்க
நான் பட்டபாடு!
பாலை, பாண் துண்டை வைக்கப்போய்
மனைவியிடம் மாட்டிக் கொள்ளுவன்
"ஏனப்பா பெட்டைக் குட்டிகளை ஆதரிக்கிறியள்?
கொண்டு போய் வழி தெருவிலை விடுங்கோ!"
'பொறு பார்ப்பம்!'

மரம் தறிக்கவந்த ஸ்ரீ கேட்டான்:
"ஒரு பூனைக்குட்டி தருவியளோ?"
மனைவியின் முகம் மும்மடங்கு பொலிந்தது
முதல் முறையாகப் பூனையைத் தொடப்போய்
நகக்கீறல் வாங்கி
ஒரு குட்டியைப் பொதி செய்து அனுப்பினா!
எனக்குப் பூனை அல்லது நாய்க்குட்டிகளை
கடத்தும் திறமையில்லை என்பது
அயலட்டையெல்லாம் பிரசித்தமாயிற்று!

அடுத்தவாரம்
மருமகள் மாலதி வீட்டை போயிருந்தன்
"மாமா, எலி பெருகிப் போச்சு
வீட்டிலை ஒண்டையும் விடுகுதில்லை!"
"யாமிருக்கப் பயமேன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கொரு பூனைக் குட்டிதாறன்!"

அடுத்த நாள் இரண்டாவது குட்டியைப் பொதிசெய்து
மாலதிவீட்டில் கொண்டுபோய் விட்டன்
இப்ப வீட்டிலை அமைதி
ஆணும் பெண்ணும் சமம்
பூனை கடத்துற விஷயத்தில் என்றாலும்!

மூன்றாவது குட்டியிலை எனக்கொரு கண்
மஞ்சள் நிறம், நல்லவடிவு!
இப்ப தனியே தாய்ப்பால் குடிச்சு
மினுமினு எண்டு வருகுது
எனக்கு நெருக்கமாகுது
நாய் வெருட்டினால் எதிர்த்து நிற்குது
நாய்க்கெட்டா உயரத்தில்
அம்மிக்கு அருகில்
அதற்கென ஓர் உண்கலம்!
ஏற்பாடுகளைப் பார்த்து மனையாள் பொருமுகிறாள்
"நீங்கள் இதைத் தொலைக்க மாட்டியள்!"
"விளங்கினால் சரி!"

நாளாக நாளாக குட்டிப் பூனைமேல்
பற்று மிகுந்து வரல் பார்க்கின்றேன்.
போக்குவரத்துக்காக
கதவில்
தாய்ப்பூனைக்கு ஒரு பெரிய ஓட்டை
குட்டிக்கு ஒரு சிறிய ஓட்டை
வைத்த ஐன்ஸ்ரைன்
பூனைகள் மேல் கவிதை புனைந்த எலியற்
ஆகியோர் மேல் மதிப்பு ஏறுமுகம்!
"அந்தரிக்கு வந்தனமு!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனைக்கும் எனக்கும் நெருக்கம் அதிகரிக்க
மனைவிக்கும் எனக்கும் இடையே மௌனப்போர்!
"பூனையா நானா என்பதை முடிவு செய்யுங்கள்!"
என அவள் கேட்டுவிட்டால்?
விட்டுக் கொடுக்கக்கூடாது
மார்ச் எட்டில் எழுந்து சந்நதமாடிவிட்டு
ஓய்ந்துவிடும் பெண்ணியவாதிகள் போல் அல்லாமல்
என்னளவில் தினமும் போராடிக் கொண்டிருக்கிறேன்
இரண்டு பெண்களுக்காக
இன்னொரு பெண்ணுடன்!

Tamil original and English version :S.Pathmanathan ('Sopa'), Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் வாழ்க்கையில் நான் எவ்விடத்தில் வருகிறேன், அன்பே?

உன் வாழ்க்கையில் நான் எவ்விடத்தில்
வருகிறேன், அன்பே?
உன் வாழ்க்கையில் நான் எவ்விடத்தில் வருகிறேன்,
அன்பே?
காலைத் தென்றலின் தூய்மையிலா?
மாலை காலிக்கும் வெள்ளியின் பிரகாசத்திலா?
மனமின்றி வரும் தூறலிலா?
அல்லது சிரித்தபடி பொழியும் மழையிலா?
குளிர் நிலவு எறிக்கும் இரவிலா?
அல்லது அக்கறையற்ற பிற்பகல்களிலா?
ஆழ்ந்த சிந்தனையிலா
அல்லது தற்செயலாக முணுமுணுக்கப்படும் இசையிலா?
எப்படி என்னை ஏற்கிறாய்
ஊதும் சிகறெற் புகையாகவா?
காலநிலைக்கேற்ற நொறுக்குத் தீனியாகவா?

ஒரு காதல் மரித்து
மற்றது இன்னும் பிறவாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்பெற்ற அவல நாடகத்தின்
ஒரு கட்டமாகவா?
நான் உன் கோடைகால வாசஸ்தலமா?
அல்லது வெறும் நீண்ட வார இறுதியா?
உன் வாழ்க்கையில் நான் எவ்விடத்தில் வருகிறேன்,
அன்பே?

Urdu original : Perveen Shakir (Pakistan)

English translation : Lesilie Lavigne and Baidar Bakht

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டத்தைப்போல

பட்டத்தைப்போல
என் நெஞ்சம்
விண்ணுக்குள் ஏறுகிறது
அலைகிறது
சுற்றுகிறது
கனன்று பொங்குகிறது
கட்டுக்கடங்காத ஆனந்தம்
சுதந்திரப் பறப்பு
துணிச்சல்
தென்றலோடு சல்லாபம்
பறவைகளோடு கலகலப்பு
முகில்களிடையே படகோட்டம்
நூல் உன்னி இழுக்கிறது
நெஞ்சறியும்
அதனால்
அறுத்துக்கொண்டு பறக்க முடியாதென்று
ஆனால் பட்டத்தைப் போல
அது அக்கணத்தைக் கொண்டாடி
காற்றோடு நடனமாடுகிறது

English original : Preeta Chandran (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரையும் நையாண்டிப் பறவையும்

ஒவ்வொரு தரமும் அலைகள் மணற்கரையை
மோதும்போது
மணலின் சில பருக்கைகளை வாரிச் செல்கிறது
மீண்டும் தோலின் ஒரு படை உரிய அம்மணமான மணல்
ஒரு துளி இரத்தம் சிந்துகிறது;
சமவெளி மறுபடி பசுமை போர்க்கிறது

நீல நையாண்டிப் பறவை ஒன்று, கூவியபடி
தன் புருவங்களைக் குனித்து நடனமாடுகிறது
சதா புண்ணாகிக் கிடக்கும் கரையைப் பார்த்து
கண்ணிமைத்தபடி அது கூவுகிறது
"மரணமே, வாழ்வின் வளமெல்லாம் உனக்கு
வாய்த்திருக்கவும்
ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வேளையும்
அலைகள் ஓங்கி அடிக்கும் போது
காயப்படுகிறாய்
மூடப் பறவையைப் பார்த்துக் கரை சிரித்தது
காதலைப் புரிந்து கொள்வது கஷ்டம் தான்
தினமும் நான் காதலில் மூழ்குகிறேன்,
தினமும் நான் கரையை நோக்கி எழுகிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் சிற்றறிவை நான் குறைகூறவில்லை
இதுபோன்ற உரையாடலைப் புரிந்து கொள்ள
ஒரு தரிசனம் வேண்டும்"
பறவை வெடித்துச் சிரித்தது
"மறைக்கப்பட்ட எல்லாப் பொருள்களையும் நோக்கி
நான் பறந்து செல்கிறேன்
எனக்குக் காதல் என்பது சுதந்திரம்
உனக்கோ அது கரையோடு கட்டுண்டு கிடத்தல்"

English original : Dr. Prerna Singla (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்பட்ட இதயம்

உன் கனிந்த புன்னகையால்
காயப்பட்ட கள்ளமில்லாத இதயத்தோடு
வாழ்க்கையின் சந்தியில் நெடுநாள் நிற்கிறேன்
என்னை இன்றிரவு சந்திப்பதாக
காலத்தால் மஞ்சளாகிய மங்கிய விளக்குகளின் கீழ்
நீ அளித்த வாக்குறுதி நிறைவேறுமென்று!
பல முகங்கள் என்னைக் கடந்து செல்கின்றன
ஆனால் நான் உன்முகத்தைத் தேடுகிறேன்
நீ வருவதாயில்லை
இப்பொழுதும், எப்பொழுதும்
நித்தியத்துவம் என்னை ஏற்கும்வரை
வாழ்க்கைப் பள்ளத்தைத் தாண்டும் பயணத்தில்
என் இருப்பை முரட்டுக் கற்கள் அடையாளமிடும் வரை
என் நம்பிக்கைகளோடு காத்திருப்பேன்
நீ வரும் போது நான் இருக்கமாட்டேன்
என் கல்லறையை நானாகப் பாவித்து அணைத்து
ஓரிரு துளி கண்ணீர் சிந்து
ஏனெனில்
அறிய வொண்ணா அப்பாலுக்கப்பால்
கடைசி அடியை எடுத்து வைக்குமுன்
இருளிலும் அமைதியிலும்
நான் நெடுநாள் காத்திருந்தேன்

English original :Saad Ashraf (Pakistan)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்பத்தியாகமம்

ஆசைமரத்தின் கீழ்
ஆணும் பெண்ணும்
கனி கொய்கின்றனர்
நள்ளிரவு
பாம்பு படமெடுக்கிறது
போர்வைக்குள்
குளிர்கிறது குருதி
கால்கள் துவண்டு
கழுத்தை இறுக்குகின்றன
கீழ்நோக்கி இறாஞ்சி
அவன் நெருப்பை விழுங்குகின்றான்
அவளோ
மூச்சுப் பனியுள் மறைகிறாள்
நித்திய உற்பத்தியாகிய
சாதாரண மாயையில்
மீள எழுவதற்காய்
அவர்கள் வீழ்கின்றனர்

Urdu original : Sarmad Sehbai (Pakistan)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் ஐம்பது வயதுப் பெண்

தெருவோரம் ஆலமரத்தின்கீழ்
முகத்தில் புழுதி, கறை, சுருக்கங்களோடு
குறுகிப்போய்க் குந்தியிருந்தாள் அவள்
அரை நூற்றாண்டின் தழும்புகளாலும்
அவளது தீவிரமான கண்களை மழுங்கடிக்க முடியவில்லை
சடையாய்க் குறுகிய கூந்தலும்
கரடுமுரடான கைகளும்
வெடித்த பாதங்களும்
வீசியெறிந்த ஆடைகளும்
அவள் மானத்தை மறைத்தன
அவளுக்கு வயது அதிகமில்லை
ஒரு கார் கடந்து போகிறது
புழுதியும், சருகுகளும், கரும்புகைகளும் அவளை மறைக்க
மௌனத்தில் மூழ்கியிருந்தாள் அவள்
கண்கள் தூரத்தை நோக்கின
தாய் நாற்று நட்டுக்கொண்டிருந்தாள்
தந்தை வயலை உழுது கொண்டிருந்தான்

பிறகு வந்தது இடப்பெயர்வு
அவள் அடம்பிடித்த, சீறிச்சினந்த போதெல்லாம்
தாய் திரும்பத் திரும்ப சொன்ன கதை
நள்ளிரவில் எவ்வாறு முழுக் கிராமமும்
வீடு வாசல் மண்ணை எல்லாம் விட்டுவந்தகதை
வேலைக்காகவும் உணவுக்காகவும் உயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வதற்காகவும்
நண்பர்கள் பகைவர்களாகிய கதை
தாய் கைகளில் பாதுகாப்பாக இருக்கையில்
ஏற்ற இறக்கங்களோடு அமைந்த மெல்லிய, இனிய
தாயின் பாட்டுக் கேட்கும்
ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் ஆண்டும்
ஒரே பாட்டு
தாயோடு சேர்ந்து பாடப்பழகினாள்
ஒரு நாள்
தாய் உறக்கத்திலிருந்து எழவேயில்லை
பிறகு தந்தையும் போய்விட
அவள் தனித்துப்போனாள்
விகாரமான வக்கிரமான
அழுக்கில் உழலும் விலங்குகள்
அவளை மொய்த்தன
தாவின, பற்றி இழுத்தன
பழித்தன கிழித்தன
ஐம்பது ஆண்டுகள்
தான் நம்பிய எல்லோராலும் கற்பழிக்கப்பட்டு
திருந்த முடியாத பெண்ணாக
அவள் வாழ்ந்தாள்
ஒரு புதிய விடியலுக்காக!

English original : Sanjukta Dasgupta (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தச்சன்

இன்று கொஞ்சம் பரவாயில்லை
ஆனால்
எவ்வளவு காலந்தான் சுருண்டு கிடப்பது?
என் எலும்பு மச்சை உறிஞ்சப்பட்டு
பேய் போல நான்
மூச்சு மட்டும் விடுகிறேன்
இது சித்திரை மாதம்
உளி பட்டதும்
பிளந்த தங்கப் பாளமாய் மின்னும்
பலா மரம்
தன் அடிப்பாகத்தில்
ஒரு தோணிப் பொம்மையை
செதுக்கும்படி என்னைத்தூண்டும்
தேன் மாமரம்
இப்போ
பூவும் பிஞ்சுமாய்க் குலுங்கும்
யன்னல் பக்கம் ஊர்ந்துபோய்
அவற்றைப் பார்க்க மட்டும் முடிந்தால்!
என்வளவில் ஒரு வாழைக்குத்தி கூட இல்லை
ஒரு மரத்தைக் கண்டால் என் இதயம் துடிக்கிறது வலிந
எங்காவது, எந்த மரத்தையாவது!

உளியனூர்க் கோயில் அருகில்
ஓங்கி நிற்கும் ஒற்றைச் சண்பக மரம்
எவ்வளவு நேரியது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது பேர் கைகளைக் கோத்தாலும்
கட்டிப் பிடிக்க முடியாது

ஒரு வளைவு, ஒரு வெடிப்பு, ஒரு துளை
ம்ஹும், கிடையாது!
என் கண்ணால் அளந்து சொல்லுவேன்
எட்டுக்கோலுக்கு மேல் இருக்கும்!
அதைத் தறித்தால்
கிராமத்தில் உள்ள
மூங்கில் குடிசைகளை மாற்றிவிடலாம்!
அல்லது
நிலக்கிழார்கள் பொறாமைப்படும்படி
வீடுகளுக்குக் கைமரங்கள் செய்யலாம்
ஆனால் உளுத்துப்போன இந்தக்கட்டை
ஆசைப்பட்டு என்ன பயன்
உளியின் நுனியைக் கூட
எந்த மரத்திலும் பாய்ச்ச
என்னால் இனி முடியாது!

நாணி வாசற்படியில் இருக்கிறாள்
வயிறு எக்கி, கூனி,
காய்ந்த வெற்றிலையும், பாக்கும்
பொயிலைச் சுருளும் தேடிக்கொண்டு!
காதுக்குள் பீரங்கி சுட்டாலும்
அவளுக்குக் கேளாது
கிழடு தட்டிவிட்டது
பூத்துக்குலுங்கும் நேரிய சண்பக மரம்போல
உளியால் அப்பொழுது தான் செதுக்கிய சிலையாக
புன்னகை வெள்ளிபோல பளபளக்க
என்னருகே அவள் நின்றது இன்றும் நினைவிருக்கிறது
நரைத்த புருவப் பற்றைக்குள்ளிருந்து
முதிய கண்கள் வெளியே வந்து
கறையான் அரித்த பின்கதவு வழியாகப் போய்
அங்கு கொஞ்சநேரம் உலாவின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னால் எழும்ப முடிந்தால்?
ஒரு கிழவனைத் தாங்கிப் பிடிக்கக் கூடிய அந்தக்கை...!"
முதிய தச்சன் விம்மிக் குலுங்கினான்
தன் ஞாபகத்தைத் துடைத்தெறிபவன் போல்
நெற்றிச் சுருக்கங்களை விரல்களால் தடவினான்
பட்டறை வரை தவழ்ந்து போகமுடிந்தால்
அங்கே சற்றுக் குந்தியிருந்து
உளி கொண்டு செதுக்கும் ஆனந்தத்தை அநுபவிக்கலாம்!

அதோ,
வான விதானத்தின் கீழ்
பெரிய கிண்ணத்தை கவிழ்த்தது போல
கருங்காலியில் கடைந்த அந்த ஒளிவீசும் கோயில்
இந்தக் கைகள் எழுப்பியதுதான்
தகதகக்கும் வெண்கலக் கொடிமரத்தின் மீது
சிறகசைக்கும் பாவனையில் நிற்கிறதே
அந்தப் புனிதக்கழுகு,
நான் தந்த உளிகொண்டு
என் பிள்ளை செதுக்கியது!

எனக்குப் பொறாமை என்கிறார்கள்
ஒரு மகன் பெறும் புகழ்கண்டு
எந்தத் தந்தை தான் பெருமையடையான்!
ஆயிரம் மணிகளை அடிப்போரை நிறுத்தலாம்
சிலாவிச் சுடும் ஒரு நாக்கை நிறுத்தமுடியாது!
நாம் இருவரும்
எட்டுத்திக்கின் காவலர்களின் உருவங்களை
தேக்க மரத்தில் செய்து
இரட்டைக் கோபுரங்களில் வைத்தோம்
ஒன்று இந்தக்கை செய்தது
மற்றது அவன்கை செய்தது
அவன் செய்த உருவங்களுக்கு
உயிர்த்துடிப்பு அதிகம் என்றார்கள்
என்மகன் வென்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்மகனிடம் தோற்பதால் என்ன நேர்ந்துவிட்டது?
அவன் புகழ் என்புகழ் அல்லவா?
"பார்த்தீர்களா,
பையனைப் பாராட்ட
இவன் முகம் கறுப்பதை?"
என் காதுபடப் பேசினார்கள்
நான் தச்சனாய் இருக்கலாம்
தந்தையாய் இருக்கமுடியாதா?
"கிழவனுக்குக் கைவினை தெரியும்!
ஆனால் மகனுக்கோ சிற்பக்கலை தெரியும்!"
கிராமத்து மூடர்கள் வாய் அவலை மென்றது
பட்டறையில் இருவரும்
அருகருகே இருந்தோம்
எம்மிடையே மௌனம்
தூற்றுவோர் என்னைத் தூற்றட்டும்
இதுவரை யாரும் இந்த வார்த்தை சொன்னதில்லை
பொறாமை போலத்தான் இருக்கும்
ஆனால் ஒரு மகனுடைய புகழ்
அவன் அப்பன் புகழல்லவா?
தச்சன் மரத்தோடு பயில்பவன் தான்
ஆனால் அவன் மரமல்லவே!
பந்தல் எழுந்தது.
உனக்குத்தான் தெரியுமே
பந்தலின் முகப்புக்குத்தான்
அலங்கார வேலைப்பாடு தேவை
அவன் சொன்னான்,
"அதை நான் பார்த்துக்கொள்கிறேன்
அப்பர் மஞ்சடைப்பை நிறுத்தட்டும்"
மஞ்சடைப்பு நிறுத்தும்படி
எனக்கு என் மகன் சொல்ல வேணுமாக்கும்!
ஓ, அவர் என்னை ஏவ வேணுமாக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கை லஷ்மிதேவியின் தாமரையை
சந்தன மரத்தில் செதுக்கிக் கொண்டிருந்தது
வாள்போலப் பளபளக்கும்
அகலமான உளியால்
ஒரு மர ஆணி செய்து கொண்டிருந்தேன்
அப்போ
என்னையறியாமல்....
என்னையறியாமல்
கையிலிருந்து
உளி நழுவியது
கடவுளே என் மகன் மீது அது விழுந்துவிடக்கூடாது
என்று பிரார்தனை செய்தேன்
இமைப்பொழுதில்
என் மகன் நிலத்தில் துடிப்பதைக் கண்டேன்
தலை துண்டாடப்பட்டு!
சுற்றிவரப் பெருங்கூட்டம்
கூரிய ஊசிகளாய்
என்னைத் துளைக்கும் கண்கள்!
ஏணியால் எப்படி இறங்கினேனோ,
ஒருவாறு குதித்தேன்
"என்னை மன்னியுங்கள்"
என்று மகன் சொன்னது போலிருந்தது
எனக்குக் கேட்கவில்லை
சுருண்ட குஞ்சி கழுத்தோடு ஒட்டுப்பட
குருதியில் கிடந்தான் அவன்!
வலி முழுவதையும் விழுங்கிய
அகலத் திறந்த கண்கள்
-அந்தக் காட்சி-
என்னை விடுகுதில்லை
இன்றும்
என்னோடிருக்கிறது
அவனுடைய தந்தையாகிய நான்
இந்த அவல முடிவை விரும்பியிருப்பேனா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டிக்காரனாகட்டும், மேதையாகட்டும்,
எல்லாம் தகப்பனிடமிருந்து பெற்றதுதானே!
கிழவன் நாயர் சொன்னான்
"நிலவு காலிக்கும்போது
சூரியன் மங்கத்தான் வேண்டும்"
என்ன பேச்சுப் பேசுகிறான் அவன்!

வேடிக்கைக்காக
ஒருமுறை
அசையும் பொம்மை ஒன்று செய்து
பாலத்தின் கீழ் பொருத்திவிட்டேன்
யாராவது முதலடி எடுத்து வைத்தால்
நீர்த்தேவதை போல நடனமாடத் தொடங்குவாள்
அவன் பாலத்தின் நடுவுக்கு வந்தால்
அவள் அங்குலம் அங்குலமாக
நீரிலிருந்து எழும்பி
வாயைத் திறந்து
அந்த மனிதன் மீது துப்புவாள்
இந்த அதிசயத்தை பார்க்க
பாலத்தில் திரண்ட கூட்டம்!
இளம் சந்தன மரங்கள் உராய்ந்தால்
வாசம் வீசும்
சத்தியமா சொல்லுறன்
என்பிள்ளை
இகழ்ச்சியோ குரோதமோ அற்று
என் திறனோடு தன் திறனை உரசிப்பார்த்தான்,
நாலே நாளில்
அவன் ஒரு பொம்மை செய்தான்
எல்லோர் நாவினிலும் தன்பேர் உலவும்படியாக!

என் பொம்மை துப்ப வாய்திறந்தால்
அவன் பொம்மை அதன் கன்னத்தில் அடிக்கும்!
அந்த அடியை நான் உணர்ந்தேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தில் கூட
இரண்டு சந்திரன்களுக்கு இடமில்லை
அவன் வீட்டைவிட்டுப் போனான்
நாணி கண்ணீர் பெருக்கினாள்
என்னுள்ளே
உமிக்குவியலுள் கனலும் நெருப்பாக
நெஞ்சு வெந்தது
ஆனால் நான் வாய்திறக்கவில்லை
பிறகுதான்
கோயிலுக்கு
யானைப்பந்தல் இடும்வேலை வந்தது
அதற்கு நான்
இந்த மேதாவி மகனை அழைக்கவேண்டுமாம்!
எஜமான் சொன்னார்
"உன் மகனைக் கலந்தாலோசித்து
பந்தலை அழகுபடுத்திவிடு"
திரும்பிவிடலாம் என்றெண்ணினேன்
செய்யவில்லை
"கலந்தாலோசி!"

அதன்பிறகு
நாணி சிரித்து யாரும் கண்டதில்லை
அவள் கண்கள்
ஊற்று வற்றும் வரை
கண்ணீர் உகுத்தன
கைபிழை பட்டதை யார் தான் நம்புவர்!
என்னதான் நம்புவர்!
நாணி, நீ நம்பவில்லை அல்லவா?
ஒரு தந்தை இது செய்வானா?
இது மட்டும் நடக்காதிருந்தால்
என்மகன் எனக்கு ஊன்றுகோலாய் இருப்பானே!
"நடப்பதாவது?, நடத்தப்பட்டது!"

University of Peradeniya
13 JUN 2019
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே சன்னமாய் ஒரு குரல்
என்னை மீண்டும் மீண்டும் திருத்துகிறது
ஒரு தந்தை இது செய்வானா?
என் நெஞ்சின் மீது மரச்சம்மட்டி அடி!
ஆழப்புதைந்த அந்த ஆணியை
ஏதோ பிடுங்க முயல்கிறது
நாணி பாக்கு வெற்றிலை இடிக்கும் சத்தம்
கிழவனின் நினைவுச் சங்கிலியை அறுக்கிறது
கூரையெல்லாம் சிலந்தி வலை
தட்டித் துடைக்க வேணும்!
ஏதும் கண்ணுக்கை விழுந்திட்டுதே?
ஏன் கலங்கியிருக்கு?

Malayalam original : Sankara Kurup

English version : K.M. George, A.K. Ramanujan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸிதஸி*

காதற் பேரலை பொங்கும் போது
விலையுயர்ந்த ஆடையைக் களைகையில்
களங்கமின்மை கூட எதிரியாகலாம்
உதேனி நகரத்துப் பேரழகியின்
நாணத்தோடு கூடிய மென்மையைத் தீண்ட
காத்திருக்கிறேன் பொறுமையிழந்து
எனினும் எங்களுக்கிடையில்
ஓர் ஊடுருவ முடியாத கனத்த சுவர்

நள்ளிரவில்
அவளுடைய மெல்லுடலைச் சுவைக்க
அச்சுவரை உடைக்க அவாவி
என் கைகள் துடிக்கின்றன
ஆனால் அது அசைக்க முடியாததாய்
வெண்மையாய் - தூய்மையாய்க் கிடக்கிறது

பித்தம் தலைக்கேற
இடைக்கிடை
மின்னல் வெட்டுப் போல
சுவரூடாக அப்பெண்ணைப் பார்க்கிறேன்
ஆயினும், சுவர் அசையவில்லை
நகரத்துச் சுற்றுமதில் போல
கல்லாய் இருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாக் காலத்து இரவில்
நகரில் அலைந்துதிரியும் -
தங்க நாணயத்துக்காக ஆடையைக் களையும் -
விலைமாது கூட
அழகில் இவளுக்கு அருகில்வரமாட்டாள்
விலைமாதோடு கூட
காதலால் என்கைகள் மயங்கின
வீணை நரம்புகளைத் தடவும் குடிலனின் கைகள் போல
உடலைச் சிலிர்க்கவைக்கும்
ஓர் ராகத்தை என்னால் இசைக்க முடிந்தது

உதேனி நகரத்தில் அவளே ஒழுக்கம் மிக்கவள்
உதேனி நகரத்தில் அவளே அழகுமிக்கவள்
அதனால் தான்
பஞ்சத்தில் அடியுண்டபிச்சைக்காரிபோல்
வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டாள்

* இது தேரி–கதாவில் வரும் ஒரு பிக்குணியின் கதை. பூர்வாசிரமத்தில் அளவுக்கு மிஞ்சிய நாணம் கொண்டவளாய் இருந்தபடியால் அவள் கணவனால் துரத்தப்பட்டாள்.

Sinhala original : Sarath Amunugama (Sri Lanka)

English translation: A. T. Dharmapriya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயம்

ஒருநாள்
வெண்பனி சூடியமலையின் முன் நின்றபடி
ஆற்றாது அழுது அரற்றினேன்
எங்கிருந்தோ ஒரு நாய் வந்து
என் பின்னே அமைதியாக, உறுதியாக நின்றது
காலசக்கரம் போல
சத்தமின்றிப் பறந்த
நித்தியவரம் பெற்ற மலைக் கழுகு கேட்டது
மூலத்துக்கும் முந்தியது எது?
காலத்துக்குப் பிந்தியது எது?
நான் மகாபாரத பாத்திரமாக இருந்ததில்லையாயினும்
அக்கணத்தில்
நான் கலப்பேதுமின்றி அசலாக மாறிவிட்டதை
உணர்ந்தேன்

Bengali original and English version:
Sumanta Mukhopadhyay (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவும் என் கவிதையும்

என் தாய் மொழியில் எழுதப்பட்டிருந்தபோதும்
அம்மாவால் என் கவிதையைப் புரிந்து
கொள்ள முடியவில்லை
தன் மகன் மனதில்
ஏதோ ஒரு கவலையுண்டு
என்று மட்டும் விளங்கிக் கொண்டாள்
நான் இருக்கும்போது
இவன் ஏன் கவலைப்படுகிறான்?
படிப்பறிவில்லாத என் தாய்
கவனமாக என் கவிதையை அளந்தாள்
தனக்குள் சொல்லிக் கொண்டாள்:
பாருங்கள், மக்களே, பாருங்கள்
கருப்பைகளில் சுமந்து நாம் பெற்ற பிள்ளைகள்
தம் கவலைகளை
கடதாசிக்குச் சொல்கிறார்களே தவிர
எமக்குச் சொல்வதில்லை
தன் மகனுக்கு நெருக்கமாகும் ஒரே வழி
அதுதான் என நம்பியோ என்னவோ
கவிதை எழுதிய தாளை
தன்மார்போடு அணைத்துக்கொண்டாள்

Punjabi original and English version: Surjit Patar (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைமாது தன் மகளுக்குச் சொன்னது

அன்பு மகளே
நான் உன் தாய் என்றும்
இந்நகரம் உன் தந்தை என்றும்
வெட்கமின்றிச் சொல்லு

கற்புள்ள மனைவியரிடம் போய்ச் சொல்லு
அவர்களுடைய கணவர்களுக்கு
நான் காதலிக்கக் கற்பிக்கிறேன் என்று
ஆயிரம் பெண்களுக்குப் பதிலாக
நான் என்னை அர்ப்பணித்து
ஞானி ஆனேன் என்று
என் மகளே
மனிதன், ஆசை வடிவானவன்
நான் என் உடலைத் தாண்டி எழுந்தது போல
அக்கடலை நீயும் கடக்க வேண்டும்
தலை நிமிர்ந்து கொள்
நான் இறந்தபின்
வளர்ந்து பெருமை அடைவாய்
எதிர்காலத்தோடு உனக்கோர் சந்திப்பு உண்டு
என்னால் பார்க்கமுடியாத சூரியனை
நீ பார்க்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவின் முன் நான் அழுவதில்லை
அல்லது எனக்காக
உபகுப்தன் அழுவதை நான் விருப்பவில்லை
ஒவ்வோர் இரவும் நான் செந்தணல் ஆகிறேன்
ஒவ்வொரு காலையும் பொன்னாகிறேன்

நான் காமத்தை வென்றேன்
நீ ஆசையை வெல்லவேண்டும்
நாம் தாராள குணமுள்ள பூமி
நாம் வாரிவழங்கும் இயற்கை

Malayalam original and English version :
K.Satchithanandan (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்மாறி வைக்கப்பட்ட பொருள்கள்

என் வாழ்க்கையில் இடம்மாறி வைக்கப்பட்ட பொருள்கள்
பளீரென நினைவு வருகின்றன
மாமரத்தின் கீழ்  சருகுகளிடையே வைத்து மறந்த
பத்து லம்பென்ற் போளைகள்
மழைவராததால் அப்புவின் சலூனில் விடப்பட்ட குடை
கிராமத்துப் பள்ளியிலிருந்து திரும்புகையில்
கஜு மரத்தில் ஏறும்போது
பொக்கெற்றிலிருந்து விழுந்த பேனை
ரீணாவில் ஹோட்டல் அலுமாரியில் எஞ்சியிருந்த நீல ஷேர்ட்
திரும்பிவராத புத்தகங்களின் நீளப்பட்டியல்
மீட்கப்படாத சிலகடன்கள், நிறைவேறாத சில காதல்கள்

மறதி மட்டும் என்னை மறந்ததில்லை
நான் காதல் வயப்பட்டபோது
இதயத்தை இடம்மாறி வைக்கத் தொடங்கினேன்
கவிதை கிறுக்கத் தொடங்கியபோது
உருவகங்களை இடம்மாற்றினேன்

பிறகு, குன்றுகளைப் பார்த்து
வானம் அவற்றை இடம் மாற்றி விட்டதாகவும்
முகில்கள் வானவில்லை இடம் மாற்றியதாகவும்
உணர்ந்தேன்
அண்மைக் காலமாக எனக்கொரு சந்தேகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் வாழும் இவ்வுலகம்
கடவுளால் இடம் மாற்றிவைக்கப்பட்டுள்ளதா என்று!
அவருக்கு ஞாபகம் வரும் ஒழுங்கில்
அவர் மீள அழைக்கிறார்
காடுகள், மலைகள், நாங்கள்

Malayalam original and English version :
K.Satchithanandan (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைத்தியங்கள்

பைத்தியங்களுக்கு சாதியில்லை, சமயமில்லை
அவர்கள் பால் நிலையைக் கடக்கின்றனர்
கருத்தியல்களுக்கு வெளியே வாழ்கின்றனர்
கள்ளமில்லா அவர்கள் இயல்புக்கு நாம் அருகர் அல்லர்

அவர்கள் மொழி கனவுகள் பற்றியதல்ல
அது இன்னொரு யதார்த்தம்
அவர்கள் காதல் நிலவின் ஒளி
பூரணையில் அது பொங்கிப் பெருகுகிறது

அண்ணாந்து பார்க்கும்போது
நாம் கேள்விப்பட்டிராத கடவுளரை
அவர்கள் காண்கிறார்கள்
அவர்கள் தோள்களைக் குலுக்குவதாக
நாம் நினைக்கும்போது
அவர்கள் தம் சிறகை விரிக்கிறார்கள்
ஈக்களுக்கும் ஆன்மா இருப்பதாகவும்
தத்துக்கிளிகளின் பச்சைக் கடவுள்
மெல்லிய கால்களில் தாவுவதாகவும்
அவர்கள் நம்புகிறார்கள்

சிலவேளைகளில்
மரங்கள் குருதி சிந்துவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் காண்கிறார்கள்
தெருக்களில் சிங்கங்கள் கர்ச்சிப்பதை
அவர்கள் கேட்கிறார்கள்
எங்களைப் போலவே
பூனைக் குட்டியின் கண்களில்
விண்ணகம் ஒளிவீசுவதை
அவர்கள் காண்கிறார்கள்
ஆனால் எறும்புகளின் குழுப்பாடலை
அவர்களால் மட்டுமே கேட்கமுடியும்
காற்றைத் தடவிக் கொடுத்துக் கொண்டு
மத்தியதரைக் கடல் மீதெழும்
சூறாவளியை வசப்படுத்துகிறார்கள்
அவர்கள் அடிபெயர்த்தால்
எரிமலை வெடிக்காது அடங்கும்

அவர்கள் காலக்கணக்கே வேறு
எங்கள் நூற்றாண்டு அவர்களுக்கு ஒரு கணம்
இருபது நொடிகளில் கிறிஸ்துவை அடைவர்
மேலும் ஆறு எனில் புத்தரோடு ஒன்றுவர்
ஒரு நாளில்
பேரோசையின் ஆரம்பத்தை அடைவர்
அவர்கள் உலகம் கொதித்துக் கொண்டிருப்பதால்
பதற்றத்தோடு உலாவிக் கொண்டிருப்பர்

பைத்தியங்கள்
எங்களைப்போல் பைத்தியக்காரர் அல்லர்.

Malayalam and English version :

K.Satchithanandan (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகத்துக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் துருக்கி தடை விதித்தபோது 2013ஜூன் 17ஆம் நாள், இஸ்தான்புல் இன் கேஸிப் பூங்காவில் ஏர்டெம் குண்டூஜ் என்ற நடன அமைப்பாளர் ஆடாது அசையாது எட்டு மணி நேரம் நின்றார். அந்த சத்தியாக்கிரகத்தில் நூற்றுக் கணக்கானோர் அவரோடு இணைந்து கொண்டனர். துருக்கியின் ரக்ஸின் சதுக்கத்தில் நூற்றுக்கணக்கான ஜோடிகள் பகிரங்கமாக மணிக்கணக்காக முத்தமிட்டு, தம் எதிர்ப்பை வெளியிட்டனர்.

## நிற்கும் மனிதன்

ஆர்ப்பாட்டங்கள் தடை செய்யப்பட்ட பூங்காவில்
ஒரு மனிதன் ஆடாது அசையாது
அமைதியாக நிற்கிறான்

அவன் எங்கிருந்தும் வரவில்லை
அவன் எங்கும் போவதாக இல்லை
உலகம் அவனைக் கடந்து போகிறது
காலம் அவன் பின்னே தொடர்கிறது
இடையே,
கொடிகளின்றி, சுலோகங்களின்றி
அவன் நிற்கிறான்
அசையாது
அமைதியாக
உலகம் சூரியனோடு நகர்கிறது
அவன் பெருக்கம் அடைகிறான்
நூறாகிறான்
ஆயிரமாகிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள்
பொக்கெற்றுக்களில் கைகளை வைத்தபடி
சும்மா நிற்கிறார்கள்
அசையாது
அமைதியாக

இது போராடும் நாடு
இது நிற்போர் நாடு
அநீதிக்கெதிராக
எழுந்து நிற்போர் நாடு
ஆம்
எதிர்காலம்
மின்னற் கீற்றாகத் தெரிகிறது

பூங்காவில்
ஒரு மனிதன் நிற்கிறான்
அசையாது
அமைதியாக
சூரியன் அவனை வலம் வருகிறது

கவிதை என்பது
தடை செய்யப்பட்ட வெளியில்
ஒரு மனிதன்
தனித்து நிற்பது!

Malayalam original and English version:
K. Satchithanandan (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தம்

இருவர் முத்தமிடும் போது
உலகமே மாறுகிறது
என்று கவிஞன் சொன்னதை
நீ நம்பவில்லை

பார் அவர்களை
ஓர் ஆணும் ஒரு பெண்ணும்
முத்தமிடுவதை
ஓர் ஆணும் பெண்ணுமல்ல
பல ஆண்களும் பல பெண்களும்

கைகோத்து நடப்பவர்களைக் கண்டு
சட்டத்தின், ஒழுக்கத்தின் காவலர்கள்
முகம் சுழிக்கும் இச்சதுக்கத்தில்
அவர்கள் முத்தமிடுகிறார்கள்

ஓர் ஆண், ஒரு பெண்
பல ஆண்கள். பல பெண்கள்
முன்னொரு காலத்தில்
ஒவ்வொரு முத்தத்துக்கும்
சிறை விதிக்கப்பட்ட
இதே சதுக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண தண்டனை விதிக்கும்
நிகழ்கால சட்டத்தை
அவர்கள் மீறுகிறார்கள்
வாழ்வைத் தரும்
எதிர்கால சட்டத்தை
அவர்கள் ஆக்குகிறார்கள்

கவிதை என்பது
பொது வெளியில்
கிளர்ந்து பரிமாறப்படும்
அந்தரங்க முத்தம்!

Malayalam original and English version :
K.Satchithanandan (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலை

நான்
மெல்ல மெல்லத் தேய்ந்துபோகும்
அடுக்களைப் பாத்திரம்
சுவாசிப்பதால் உலாவும்
ஓர் எளிய யந்திரம்
சொற்களையும் சோற்றையும் பரிமாறிக்கொண்டு
உலாவுவதால் உறங்குபவள்
என் பிள்ளைகளுக்கோ
நான்
விதம் விதமான பலகாரங்கள் செய்யும் ஒரு சாதனம்
சிலவேளைகளில்
கடிக்க மறந்த, குரைக்கும் நாய்
நான் அவர்களுக்கு!
"எறும்பும் தேனீயும்" கதை சொல்லியிருக்கிறேன்
அதன் நீதி அவர்களுக்குத் தெரியும்
சிறியது பெரியதுக்குக் கட்டளை இடலாம்
எனவே தாய் சொற்கேட்பதில்லை அவர்கள்
தம் அன்புப் பொம்மைக்குக் கட்டளை இடுகிறார்கள்
சிறு கோயிலின் ஒற்றைக் கல் மேடையில் ஏறுவது போல
பாடுவதற்கும் துக்கிப்பதற்கும் ஏற்ற
இந்த மண்ணாங்கட்டியில் தாவுகிறார்கள்

அடுக்களையை விட்டு
பொது மேடைக்கு வந்த பாத்திரம் நான்
ஒவ்வொரு நாளும் தலைக்கு மேலே
நற்செய்தியாளர்கள் இன்னும் பதிவு செய்யாத
பத்துக்கும் மேற்பட்ட கற்பனைகளைக் காண்கிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்து வீட்டு மனிதன் பார்வையிலும்
பெண்ணின் புன்னகையிலும்
காலைப் பத்திரிகை கொணரும் செய்தியிலும்
பிள்ளைகளின் பாடநூல்களிலும்
சூழ வரும் விளம்பரங்களிலும்
ஏன் கைக்குழந்தைகளின் மழலை மொழியிலும்
இக்கட்டளைகளை உணர்கிறேன்
மிருகக் காட்சிச்சாலையிலிருக்கும்
காட்டு விலங்குக்குக் கட்டளையிடுவது போல
கம்பிகளுக்கு வெளியே நின்றபடி
காவலர்களும் பார்வையாளர்களும்
எனக்கும் கட்டளையிடுகிறார்கள்
ஊஞ்சலில் தொங்கும் பறவைகள் மிருகங்கள் போல
நான் எது செய்தாலும் அவர்கள் மகிழ்கிறார்கள்

சிலவேளைகளில் நெற்றியில் சந்தனப் பொட்டிட்டு
கூந்தலில் துளசியிலை சூடிய
பெண் தெய்வம் நான்
சில வேளைகளில் நான் கிருஷ்ணனின்
நாணம் மிக்க காதலி
அல்லது இறைகுமாரனின் தாய்

கவிதையில்
நான் தென்றலில் ஆடும் வெண்டாமரை
கீதங்களில்
அசுரனின் குருதிபெருகும் தலையை ஏந்திய
உக்கிர காளி
ஆனால் எனக்கு ஓர் உண்மை தெரியும்
கோயிலின் விக்கிரமாக மாற்றப்பட்ட
தேய்ந்துபோன
வெறும் அடுக்களைப் பாத்திரம் நான் என்று

Malayalam original : Savithri Rajeevan (India)

English translation : K.Satchithanandan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாருடைய பெண் நான்?

யாருடைய பெண் நான்?
யார் என்னுடைய தெய்வம்?
யார் கால்களை நான் பிடித்துவிட வேண்டும்?
யார் எனக்கு உணவு தருபவர்?
யாருடைய அடிகளை நான் ஏற்றுக்கொள்கிறேன்?
ரயிலில் என் எதிர் இருக்கையில் அமர்ந்து
என்னோடு பயணிக்கும்
அவளுடைய கேள்விகள் இவை

அவள் வயது எழுபது அல்லது
எழுபத்தைந்து இருக்கலாம்
கண்கள் குழிவிழுந்து தசை தொங்கும்
அவள் முகத்தில் துயரத்தின் பீடபூமிகள்
துஷ்பிரயோகங்களின் அகழிகள்
நீண்ட சிந்தனைக்குப் பின் நான் சொன்னேன்
"நான் யாருடைய பெண்ணுமல்ல
நான் என்னுடைய பெண்
நான் என் உணவையே உண்கிறேன்
சாப்பிடத் தோன்றும்போது சாப்பிடுவேன்
யாரிடமும் நான் அடி வாங்குவதில்லை
எனக்கு யாரும் தெய்வமில்லை!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பில்லாத அமைதியில் அவள் கண்கள்
ஓ, இப்பெண் எப்படித் தாக்குப் பிடிக்கப் போகிறாள்?
எல்லாம் புரிந்த தர்ம சங்கடத்தில் அவள்
அவள் கண்களை தனிமையின் பெருமையால் நிரப்ப
விரும்பினேன்
சிரித்துக்கொண்டே சொன்னேன்'
"என் வாழ்க்கையே உங்கள் வாழ்க்கை
என் பயணமே உங்கள் பயணம்
ஆனால் நடந்த விஷயமொன்று
உங்களுக்குத் தெரியாது'
எங்கள் எல்லோருக்கும் இப்பொழுது தெரியும்
யாரும் எவருக்கும் உரியவரல்லர்
எல்லாரும் தத்தமக்கே உரியவர்
வாழும் உரிமையுடன் பிரகாசித்தபடி
தத்தமக்குள்ளே மூழ்கிப் போயுள்ளனர்!
ஆனால் இன்னும் பயணம் முடியவில்லை
பலப்பல துஷ்பிரயோக அகழிகளைத்
தாண்ட வேண்டியுள்ளது
இரண்டொரு துக்க சமுத்திரங்களையும்
மேலும் சில வாதைப் பீடபூமிகளையும்
ஈற்றில் அப்பெண் போய்ச்சேரும்பொழுது
நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்
சில வேளை அச்சம் கொள்வீர்கள்
அவள் வாழ்க்கை நிச்சயமற்றுவிடுமே என்று
அழவும் செய்வீர்கள்

மீண்டும் நீங்கள் மலைப்பீர்கள்
ஐயோ இவள் எப்படித் தாக்குப் பிடிப்பாள் என்று
ஆனால் அவள் என்னைப் போலவே சிரிப்பாள்
சொல்வாள்'
"பாருங்கள், நான் சுதந்திரமாய் இருப்பதை
இந்த வானமும் சமுத்திரமும் அலைகளும்
இவ்விளங்காற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள்ளிருக்கும் இயற்கையின் வாசனையும்
இவையாவும் என்னுடையவை
என் முன்னோர்களின் சாபங்கள்
நம்பிக்கைகளை விட்டு
நான் நெடுந்தூரம் வந்துவிட்டேன்
பூரணமாக நான் என்னுடையவள்!"

Hindi original :Savita Singh (India)
English translation : Sukritha Paul Kumar

University of Peradeniya
13 JUN 2019
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயப்பட்ட பறவை

என் சிறகுகள் முறிந்த போதும் நான் பறப்பேன்
நான் பாமிர் மற்றும் ஹிந்துகுஷ் மலைகளின்
தொடுவானத்தை அணுகும் கழுகு
நான் பறப்பேன்

வேட்டைக்காரரால் என் கூடு சிதைந்துவிட்டது
எனினும் நான் பறப்பேன்

பகைவரின் அம்புகளாலும் வாள்களாலும்
எங்கள் இதயங்களும் முகங்களும் காயப்பட்டுள்ளன
எனினும் முயற்சியைக் கைவிடோம் பறப்போம்;

எங்களுக்கு விரைவில் சிறகு முளைக்கும்
நாம் ஒன்றுகூடுவோம்
வான முகடு வரை பறப்போம்

எம் இரத்தத் துளிகளால்
பாலைவனத்தை ரியூலிப் தோட்டம் ஆக்குவோம்

அதிகாரப் பசியாலும் பண ஆசையாலும்
போதைப் பொருளாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்துப் போனாய்
அவற்றைத் தாண்டினால் நீ வெற்றி பெறுவாய்
முறிந்த சிறகுகளை உடைய
ஒரு காயப்பட்ட பறவை நான்
எனினும் பறப்பேன்.... பறப்பேன்... பறப்பேன்

Pashto original : Dr Shakeela Wajadi (Afghanistan)
English translation : Prof. Najibullah Azad

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதிரை வண்டிக்காரன் ஒருவனின் மகன் சொன்னது

பாரிய வானக்கதவில் தொங்குகிறது நிலவு
ஒரு குதிரை லாடன் போல
ஒரு வைக்கோற் பட்டறைமீது தனியே படுத்துக் கிடந்தபடி
மெலிந்து வற்றலாகிய முதிய உடல்
படுக்கையோடு பிசின் போல் ஒட்ட
சாகக் கிடக்கும் என் தந்தையை நினைக்கிறேன்
தன் குதிரையை ஓர் அன்பு மனைவியைப் போல
வாழ் நாளெல்லாம் நேசித்த அவர்
நாளையோ மறுநாளோ வருட முடிவுக்குள்ளோ
போய்ச் சேர்ந்துவிடுவார்

இளங் குதிரையின் பிடர்மயிர் போன்ற ஒருமுகில்
இப்பொழுது அவர் கண்களைச் சூழ்கிறது
எவ்வளவு முயன்றும்
ஒருசொல்லைக் கூட விளங்கிக் கொள்ளமுடியாத
புத்தகம் போலத் தோன்றுகிறார் அவர்

"ஒருகாலத்தில்,என் நாள்களும் குதிரை வீரன் ஷேர்ட் போல
குதிரைப் பந்தயத் திடலுக்குரிய சாகஸங்கள்
என் விரல் நுனிகளில்
எங்கள் ஒழுங்கையிலுள்ள தேநீர்ச்சாலையில்
ஆவி பறக்கும் தேநீரை மகிழ்ச்சியாக உறிஞ்சியபடி
என் சகாக்களோடு வம்பளந்தேன்
எனது மலிவான சிகறெற் புகையில் தேவதைகள்
நடனமாடின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரங்கெட்ட நேரங்களில்
ஒழுங்கைகளூடும் குச்சொழுங்கைகளூடும் விரைந்தேன்
ஏதோ ஒரு கனவை வாடகைக்குப் பெற.
இரவுக் காற்றில் என் கைக்குட்டையை அசைத்து
எல்லாத் தோல்விகளையும் பகையையும்
உச்சி முதல் உள்ளங்கால் வரை
ஒரு சவப்பெட்டிக்குள் மூடியபடி உரத்துக் கூவினேன்:
"ஏ, யாராவது ஒரு கனவை எனக்கு
வாடகைக்குத் தருவீர்களா?"
ஆனால், அந்தோ, யாரும் பதில் தரவில்லை.
பிரபுக்கள், அரசர்களுடைய காலம் போய்விட்டது
இந்நாள்களில் பல செய்திகள் கேள்விப்படுகிறேன்
எதிர்கால தொழில்சாரா நாடகத்தில்
எல்லோரும் சமம் என அவர்கள் சொல்கிறார்கள்
எனக்கு விளங்கவில்லை
திடீரென இந்நாட்டு ஆண்களும் பெண்களும்
அவர்களுடைய வாணாள்கள் கட்டுக்கடங்கா
ஹிஸ்ரீறியாவின் பிடியில் அகப்பட்டதுபோல
மூர்க்கர்களாகமாறிவிட்டனர்.

சிலவேளைகளில் என் தந்தை
தன் கடந்தகாலத்தை
தன் குதிரையின் பளபளக்கும் முதுகென
தவறாகக் கருதிக்கொண்டு
அதன் அகண்ட சள்ளையைப் பரிவோடு தடவுவார்
சிலவேளை இரவு நீளும்போது
ஒரு விசித்திரக் கனவு காண்பார்.
பிடரிமயிர் காற்றிலசைய வரும்
கரிய குதிரையில் யாரோ ஒருவன்
அவரைக் கொண்டுபோக
தீச்சுவாலை வண்ணச் சமவெளியில்
சவாரி செய்து வருவதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த போதும்
என் கனவுகளில் குதிரைகளில்லை
சில புகைபோக்கிகளும்
ஓடுகளும்
கூரையும்
சில கருவிகளும்
தொழிற்சாலைப் புகைபோக்கியினூடாகத் தெரியும்
ஒரு கூட்டம் புறாக்களும்
அமைதியாக மேலே வரும் ஒரு முகமும்
என் உடலோடு இணையும்
ஒளிரும் முகில் போன்ற ஓர் உடலும்
நான் ஒரு கனவோடு கலக்கிறேன்
வெள்ளி அருவி போன்ற ஒரு கொத்துக் கனவுகள்
என்னோடு கலக்கின்றன
நான் இணைகிறேன்
கனவுகள் இணைகின்றன
கொஞ்சம் கொஞ்சமாக
கனவுகள் என்னை விழுங்குகின்றன.

Bengali original : Shamsur Rahman (Bangladesh)
English translation : Kabir Chowdhury

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

ஓராயிரம் வீட்டுப் பணிகளில் மூழ்கியவளாய்
அமைதியான தன் குக்கிராமத்தில்
வாழ்ந்தாள் அவள்
சூரியன் வானத்தில் தகித்துக் கொண்டிருப்பதையோ
முகிற் கீற்றுக்கள் மிதந்து போவதையோ
அவள் கவனித்ததில்லை
அவள் கவனத்தில் படாதபோதும்
காலம் விரைந்து சென்றது
வழமையான காட்சிதான்:
அடுப்பில் வெந்து கொண்டிருக்கும் சோறு
இரண்டொரு மீன், பசளிக்கீரை
ஏழைப்பள்ளி ஆசிரியரான கணவனுக்கான உணவு
இடையிடையே
வேலியில் படரும் சுரைக்கொடியைப் பார்ப்பாள்
பலாமரக் கிளையில் குந்தியிருக்கும் மஞ்சட்குருவி
தன் வாலை ஓயாது ஆட்டிக்கொள்ளும்
மணித்தியாலங்கள் உருண்டன

கிணற்றில் அள்ளிய நீரில் குளித்தபின்
நரைத்த தலையை வாருவாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூர்ப் பள்ளியில் படிக்கும்
பெருக்கல் வாய்பாடு பாடமாக்கும்
இளைய மகனை நினைத்தாள்
பிறகு
அழகிய வடிவங்களில்
வீட்டில் செய்யப்பட்ட பலகாரங்களை
பட்டினத்துப் பாடசாலையில் படிக்கும்
பளபளக்கும் கண்கள் கொண்ட
தன் மூத்த மகனுக்காக
ஒரு பேழையுள் அடுக்கிக் கொண்டாள்

அவள் தன் சிறிய வீட்டுக்கு வெளியே
என்றும் போனதில்லை
தானுண்டு, தன் குடும்பமுண்டு என்ற
எளிமையான வாழ்க்கை
நெடுநாளைக்கு முன் செத்துப்போன
தன் பெற்றோர் பற்றிய நினைவு
நெஞ்சில் ஒருவலியை உண்டாக்கும்

பிறகு தான்
கோபாவேசங் கொண்ட கடவுள் போல
முழுநாடும் தலையைச் சிலுப்பி நிமிர்ந்தது
தாய் மண் பலிகளால் சிவந்தது
மகனின் குருதி தோய்ந்த ஆடைகள்
அந்தக் கிராமத்துத் தாயை அதிரவைத்தன
பச்சைச் சுரைக்காய்கள், ஆறு, புற்றரை, வயல்
அவளுக்குப் பழக்கமான பழைய குளம்
எல்லாம் பின்தள்ளிப் போயின

இன்று அவளுடைய பாதச்சுவடுகள்
அகண்ட நகரத்து வீதிகளிலும்
ஒடுங்கிய கிளை வீதிகளிலும்
எல்லாப் பெருந் தெருக்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கைகளிலும் காணப்படுகின்றன
மகனை இழந்த தாய்
தன் நொடிந்த இதயத்தின் கண்ணீரை
அதிரும் சுலோகங்களுடன் கலந்துவிட்டாள்

Bengali original : Shamsur Rahman (Bangladesh)
English translation : Kabir Chowdhury

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் போகமாட்டேன்

மற்றவர்களைப் போலத்தான்
நானும் என்னை நேசிப்பவன்
காலை இளவெய்யிலில் கண்விழிப்பது
காலை உணவின்பின்
நண்பர்களோடு உரையாடுவது
பழகிய வீதிகளில் உலாவுவது
பின்னிரவுவரை நூல்கள் படிப்பது
இவை எனக்கும் உவப்பானவை

மற்றவர்களைப் போலத்தான்
நானும் என்னை நேசிப்பவன்
கொலையாளியின் கொடுவாளை
தவிர்க்கவே நானும் விரும்புகிறேன்
ஆனால் இந்நாள்களில்
நான் தெருவில் காணும் ஒவ்வொருவனும்
ரகசிய கொலையாளியாகவே
எனக்குத் தோன்றுகிறான்
ஒவ்வொரு வழிப் போக்கனிடமும்
குத்து வாளோ கைத்துப்பாக்கியோ இருப்பதாக
எனக்குத் தோன்றுகிறது
ஒவ்வொருவரும்
ரகசியமாகக் கொலை புரியும் கலையில்
நிபுணத்துவம் பெற்றுள்ளதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தோன்றும்
வேவு பார்ப்பவன் ஒருவன்
எந்நேரமும் என்னைப் பின்தொடர்வதை
நான் அறிவேன்
சிலவேளைகளில்
என் நிழலைக்கண்டு நான் திடுக்கிடுவேன்
ஒரு ரஸாக்கனோ பொலிஸ்காரனோ ஜவானோ
நள்ளிரவிலோ நண்பகலிலோ
என்னைக் காவிச் செல்லக்கூடும்
பூரிகங்கா என் பிணத்தை
தன் மார்பில் ஏந்திக் கொண்டு
ஊழிவரை அமைதியாக ஓடலாம்
இருந்தபோதும்
நான் வேறெங்கும் போகமாட்டேன்
வேறெந்த வானத்தின் கீழும்
பாதுகாப்புத் தேடமாட்டேன்

இந்நாள்களில்
ஒரு பழகிய முகத்தை
நான் எங்கும் காண்பதில்லை
சிலவேளைகளில்
சனநடமாட்டமில்லாத பஸ்தரிப்பில்
யாரையாவது கண்டால் திடுக்கிடுவேன்
தெரிந்தவர் போலத்தோன்றும்
கிட்டப் போனால் என்தவறை உணர்வேன்
தலை குனிந்தபடி
அமைதியாக மீண்டும் என்வழியே போவேன்
என் நண்பர்கள் பலர் நாட்டைவிட்டுப் போய்விட்டனர்
அச்சத்தால் ஆயிரக்கணக்கான
ஆண்களும் பெண்களும்
தினமும் வீடுகளைவிட்டு ஓடுகிறார்கள்
எண்ணிறந்த குடியானவர்கள்

Peradeniya
13 JUN 2019
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தம் நில புலன்களைக் கைவிட்டு
பரதேசம் போகிறார்கள்
நிழல் தேடி

இருந்தபோதும்
நான் வேறெங்கும் போகமாட்டேன்
இரவுகளையும் பகல்களையும்
பறிகொடுத்த இவர்களோடு
துப்பாக்கிதாரிகளால்
நிச்சயமான மரணத்துக்காக
ஒவ்வொரு வேதனைமிக்க கணமும்
காத்திருப்பதே விதியாகிப் போன
இம்மனிதர்களோடு
இங்கேயே கூட இருப்பேன்

Bengali original : Shamsur Rahman (Bangladesh)
English translation : Kabir Chowdhury

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்கம்

எங்கள் விறாந்தையிலும் வாசற்படியிலும்
எங்கள் வீட்டுப் பாவு பலகையிலும்
கதிரைகளிலும், மேசைகளிலும், கட்டிலிலும்
துக்கம் தன் பெயரைக் கிறுக்குகிறாள்
கூரையின் கொடுங்கையிலும் யன்னல் தட்டியிலும்
சட்டத்தின் பூச்சிலும்
தளத்தில் படிந்த புழுதியிலும்
துக்கம் சுண்ணக்கட்டிக் கீறல்களை விட்டுச் செல்கிறாள்
எங்கள் இசைமேடையை அவள் தூரிகையால் பூசுகிறாள்

எங்கள் முற்றத்தின் சின்னஞ்சிறு துண்டில்
கோடைக் காற்றால் அடிபட்டுதிர்ந்த இலையில்
ஏட்டுப் பிரதிகளில், புத்தகங்களில்,
அழுக்கேறிய அப்பியாசக் கொப்பிகளில்
எங்கள் வாளிகளில், கண்ணாடிகளில்
கோடை நண்பகலில் சிறகடிக்கும் தூக்கணாங்
குருவிகளில்
நடுநடுங்கும் குளிரில்
இரவுப் பொழுதின் இதமான கம்பளியினுள்
துக்கம் ஓயாது இழைத்துக் கொண்டிருக்கிறாள்
தேநீர்க் கிண்ணத்தினுள்,தாம்பாளத்தில்,கரண்டியில்
சூரியக் கதிர்களால் கோலமிடப்பட்ட
உங்கள் முற்றத்துப் புழுதியில்
துக்கம் தன்பெயரைஎழுதுகிறாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டில் சட்டத்தில், தாழ்ந்த முக்காலியில், கம்பளத்தில்,
படுக்கையில், நுளம்பு வலையில்
ேர்ட்டில், துவாயில்,
அகலச் சிவப்புக் கரைபோட்ட சேலையில்
கதகதப்பான கம்பளியில், மெத்தையில், தலையணையில்
கூந்தல் தைலப் போத்தலில், பற்தூரிகையில்
தசைப்பிடிப்புக்குப் பூசும் களிம்பில்
துக்கம் தன் பெயரை எழுதுகிறாள்

என் சின்னமகளின் பாவையில்
என் மகன் வளர்க்கும் குருவியின் சிறகுகளில்
அமைதியாக உத்தரிப்புகளைத் தாங்கும்
என் மனைவியின் வெள்ளைச் சேலையில்
துக்கம் தன் கொடியைப் பறக்கவிடுகிறாள்

என் காலோடு உரசிக்கொள்ளும்
பூனையின் மென்மையான தோலில்
கனவுகளின் மின்மினிக் கூட்டத்தில்
மழையில் நனைந்து நூர்ந்த அடுப்பில்
பழைய வீட்டில் நிரம்பிய இரவின் மணத்தில்
ஏதும் இன்றி வெறுமையாய்க் கிடக்கும் கறிச்சட்டிகளில்
துக்கம் தன் பெயரைஎழுதுகிறாள்

உள்ளத்தில் ஊற்றெடுக்கும் ஆழ்ந்த ரகசியப் பாடலில்
இனிய உறக்கத்தில் அல்லது விழிப்பில்
கனவுப் பூங்காவில்
மோக முத்தத்தில் அல்லது நண்பகலின் நெருக்கத்தில்
என் அமைதியான அல்லது ஆரவார உரையாடலில்
ஆரோக்கியச் செல்வத்தில்
அல்லது வதைபடும் வலியால் வந்த ஜன்னியில்
நம்பிக்கைக்குரிய நிர்மலத்தில்
முரட்டுத்தனம் என்ற கூரிய குத்துவாளில்
கட்டுப்பாடற்ற வேட்கைகளின் சிறகுகளில் ததும்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகவெறியில்
துறவியின் குங்குமவண்ண ஆடையில்
துக்கம் தன்பெயரை எழுதுகிறாள்
உடைந்து, தூசிபடிந்து வெய்யிலில் கிடக்கும்
கண்ணாடியில்
புத்தாண்டில் என் சின்னமகள்
இடைவிடாது விடுக்கும் வேண்டுகோளில்
என் வெய்யிலில், என் நிழலில்
துக்கம் தன் பெயரைக் கிறுக்குகிறாள்

பிந்திப் பரிமாறப்படும் குளிர்ந்த உணவில்
அரிச்சுவடி நூலில், இலக்கண நூலில்,
அடிப்படைக் கணிதத்தில்
பூச்சாடிகளில்,
கோணற் கற்பலகையின் மங்கிய முகத்தில்
மஞ்சட் புத்தகங்களின் உறையிட்ட அட்டைகளில்
தலைவாரியிலும் சீப்பின் மென்மையான பற்களிலும்
துக்கம் தன் பெயரைஎழுதுகிறாள்

நெற்றியிலுள்ளமறுவில்
சப்பாத்தின் குகையில்
பாற்கிண்ணத்தின் குளத்தில்
பறவைகளின் தேனினுமினிய பாடல்கள் நிரம்பி வழியும்
ஆசைப் பள்ளத்தாக்கில்
துக்கம் தன் பெயரைஎழுதுகிறாள்

என் விலா எலும்புகளில்
என் நுரை ஈரல்களில், என் வயிற்றில்,
என் ஈரலில், என் மண்ணீரலில்,
என் குடற்பாதைகளில்
துக்கம் தன் பெயரை எழுதுகிறாள்

என் இருதயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கம் வாசிக்கும் நேர்த்தியான முரசொலி கேட்கிறது
பழைய கிழட்டுச் சுவர்மணிக் கூட்டின் கைகளில்
முதுமையைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் கைத்தடியில்
வெற்றிலைப் பெட்டியின் மேலும்
சுருட்டிவிடப்பட்ட ஷேர்ட் கைகள் மேலும்
கசங்கிய காற்சட்டையின் மேலும்
காகிதத் தோணியிலும் வண்ண பலூன்கள் மேலும்
துக்கம் தன் பெயரை எழுதுகிறாள்

ஒருகாலமும் பார்த்தேயிராத
நீலவானின் அழகிய பறவை போன்ற
என் நம்பிக்கைகள் மீதும்
மென்பட்டுக் காற்றின் மீதும்
மறைந்திருக்கும் என் நெஞ்சின் மென்மொழியிலும்
துக்கம் தன் பெயரை எழுதுகிறாள்

Bengali original : Shamsur Rahman (Bangladesh)

English translation : Kabir Chowdhury

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறை முகாமிலிருந்து

பொறாமைப்படுவது என் இயல்பல்ல
நிச்சயமாக!
இருந்தபோதும் உங்கள் எல்லோர் மீதும்
இன்று சற்று அதிகமாகவே பொறாமைப் படுகிறேன்
நீங்கள் அழகிய ஆடைகள் அணிவதாலோ
பூங்காவின் வாங்கிலிருந்து வம்பளப்பதாலோ
நண்பர்களோடு கூடியிருந்து நல்ல உணவருந்துவதாலோ
அல்ல!

சுதந்திரமான நாட்டில்
கவிஞர்களாயிருக்கும் அருமை நண்பர்களே
உங்கள் மீது அதிக பொறாமை எனக்கு
விரும்பியபடி சொற்களை
பயன்படுத்தும் சுதந்திரம் உண்டு உங்களுக்கு
சொற்கள் வரும்போது யாப்பொழுங்கிலோ
சிலவேளை புதுக்கவிதையாகவோ
மறுவேளைகளில் துரித இசைக் கணக்குக்கோ
கோக்கிறீர்கள்

உங்கள் கவிதைகள் அன்னங்கள் போலவும்
ராஜநடை நடந்து
மனிதர்களின் ஆராதனையை நாடும்
எக்காளம் ஊதுவோர் போலவும் உள்ளன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், இந்த நாட்டில்
இந்தச் சிறைமுகாமில்
நான்
திக்குமுக்காடி மூச்சுத் திணறுகிறேன்
இம்முயற்சியில் இறந்து போனாலும்
நான் விரும்பும் ஒரு சொல்லையேனும்
என்னால் சொல்ல முடியாது
விரும்பியபடி கவிதை எழுதும் உரிமையை
எங்களிடமிருந்து பறித்துவிட்டார்கள்

பட்டப்பகலில்
திறந்த தெருவில்
'நிலா', 'மலர்', 'பறவை', 'பெண்'
என்ற சொற்களை நான் கூவினால்
தடை செய்வோர் யாருமில்லை
ஆனால் அவர்களைப் பொறுத்தவரை
சில சொற்கள் வெடிபொருள்கள்
அவற்றைத் தடை செய்துள்ளார்கள்
என் திருப்திக்காக
ஒவ்வொரு மூலை முடுக்கிலும்
ஒவ்வொரு தெருவிலும்
பறவையின் இறக்கைகளிலும்
பெண்களின் கண்களிலும்
நகரத்தின் ஒவ்வோர் ஒழுங்கையிலும்
வண்ணக் குவியல்கள் மீதும்
பென்னம் பெரிய எழுத்தில்
'விடுதலை'
என்ற ஒற்றைச்
சொல்லை எழுத விரும்புகிறேன்
இந்தச் சொல்லை இந்த அளவு காதலித்தேன்
என நான் உணர்ந்திருக்கவில்லை
ஆனால் நீட்டிய துப்பாக்கிகள் கொண்டு
'விடுதலை', 'வங்கதேசம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய சொற்களிலிருந்து
என்னைப் பிரித்துவிட்டார்கள்
ஆனால் அவர்கள் அறியார்
மரத்தின் இலைகள் மீது
ஒற்றையடிப் பாதைகளில்
பறவைகளின் இறக்கைகளில்
பெண்களின் கண்களில்
தெருப் புழுதியில்
எங்கள் முகாம்களிலுள்ள
அடங்க மறுக்கும் குழந்தையின்
மடக்கிய அங்கையில்
நான் எப்பொழுதும்
ஒரு தீக்கொழுந்தைக் காண்கிறேன்
அதுதான் 'விடுதலை' என்ற சொல்

Bengali original : Shamsur Rahman (Bangladesh)

English translation : Kazi Arif

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *தங்டாவின் காதற்கீதம்

மலைச்சாரலில்
புகையிலையைக் கையுறையாகத் தந்து
உன் காதலை, உன் கனவுகளை
உன் தொடுகையைக் கோரினேன்
சுற்றிவர அரிவி வெட்டுவோர் பலர்
இங்கே வேண்டாம் என்றாய்
கிராமத்துத் தெருவில்
மகிழம்பூக்களின் வாசம் மயக்கும் கருக்கலில்
உன் காதலை, உன் உடலைக் கேட்டேன்
உன் மறுமொழியையாவது கூறு என்றேன்
“மின்மினிப் பூக்களுக்கும் தனித்த
நட்சத்திரத்துக்கும் பயம்
இவ்விடத்தை விட்டுப் போவோம்” என்றாய்

என் இதயத்துடிப்பு எனக்கே கேட்கும்
அடர்ந்த காட்டில் உன் காதலை
உன் தொடுகையைக் கோரினேன்
“ஐயோ வேண்டாம்”
இங்கே மண் சாம்பல் நிறமாயிருக்கிறது
மலர் போன்ற இவ்வுடம்பும்
பொன் போன்ற ஆத்மாவும்
வெளிறி அழுக்காகிவிடாவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வேண்டாம், இங்கு வேண்டாம் என்றாய்
பாடும் ஒற்றைப் பறவை தவிர
ஆற்றோரம், ஆருமில்லா வேளை
உன்தொடுகையை, உன் ஈரத்தைத் கோரினேன்
கண்ணாடி போன்ற ஆற்றுநீரில்
எல்லாமே தெரியும்
இங்கு வேண்டாம் என்றாய்

என்நடுங்கும் ஆத்மாவுக்கு
உன் ஸ்பரிசத்தை, உன் உயிரைக் கோரினேன்
உன் உடலின் ஓர் இருப்பிடத்தில்
ஒரு சிறிய வெளிகேட்டேன்
உலகமே உறங்குகிறது,
சந்திரனும் விண்மீன்களும் கூட!
"எங்கும் இருள் மூடியிருந்தாலும்
உன் கண்ணாகிய கண்ணாடியில்
எல்லாம் தெரிகிறது" என்றாய்
இப்பொழுது வேண்டாம் என்றாய்
என் கண்களைப் பிடுங்கி
தாமரைப் பூக்கள் போல
உனக்குப் பரிசளிப்பேன், பெற்றுக்கொள்
உன் தொடுகையையும்
உன் ஈரத்தையும் தந்து
என் தனித்த ஆத்மாவுக்குத் தேவைப்படும்
நிழல் தருவாய்

* மணமாகாத பழங்குடி இளைஞன்

Odiya original : Sitakant Mahapatra (India)
English translation:Sura Prasad Rath and
Mark Halpering

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டி

தீக்குச்சிகள் போன்ற
பயணிகளால் நிரம்பிய
தீப்பெட்டி பஸ்
மேடும் பள்ளமுமான தெரு
மழைத் தூற்றல்
ஆறுகளைக் கடத்தல்
வயல்களுக்கிடையில் ஒற்றையடிப் பாதையில்
நண்டுகளும் செத்த நத்தைகளும்
எல்லாவற்றையும் தாண்டி
நாங்கள் போய்ச் சேர்ந்தபோது
பொழுதுபட்டுவிட்டது
'எங்கள் கிராமத்துக்கு
யமன்கூட தாமதமாகவே வருவான்'
அவ சொல்வது வழக்கம்.

எல்லாம் முடிந்துவிட்டது
நல்லாப் பிந்திப்போனம்
பாடைகாவுவோர் எல்லா ஒழுங்கும் செய்துவிட்டார்கள்
அவவுடைய இரண்டாவது நெடும் பயணம்
தொடங்கப் போகிறது
முன்பொருமுறை பயணித்திருக்கிறா மாட்டுவண்டியில்
நாணம் கொண்ட புளியம்பூ நிற மணப்பெண்ணாக
தன் தந்தை வீட்டிலிருந்து எங்கள் வீட்டுக்கு
'கடல் அரித்தகரையாய்ப் போனேன்
இடையிடை வந்துபோ, மகனே
உன்னைக் காண்பேனோ என்னவோ, ஆரறிவார்!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றங்கரையின் மரம் பாறுகிறது
கண்ணைப் பறிக்கும் சுழியில்
ஆதரவின்றி அள்ளுண்டு போகிறது
சத்தம் சந்தடிக்கு என்ன அவசியம்?

உள் அறையில் வெள்ளைத் துணியை விலக்கி
வரலாற்றின் முகத்தை ஊடுருவிப் பார்க்கிறேன்:
வானம் போல் விரிந்து பூமிபோல் மௌனமாய்
மீண்டும் அமைதி பெருமூச்சுவிட்டது

இரவு
சிள்வண்டுகள் பாடுகின்றன
மூங்கிற் காட்டில் மின்மினிகள் கண்சிமிட்டுகின்றன
ஒருசில விண்மீன்கள் மின்னுகின்றன
கசப்பான பாரம்பரிய வேப்பம் உணவை உண்டபின்
எல்லோரும் போய் விட்டார்கள்
சாணத்தால் மெழுகிய சுவர்களில்
நடனமாடும் நிழல்கள்

சுவரைப் பார்த்தபடி
எங்களுக்கு முதுகு காட்டி
அப்பா அழுதார்
அவர் அழுததை அன்றுதான்
முதன்முதலாக் கண்டேன்
நான் அவருக்கு என்ன ஆறுதல் வார்த்தை
சொல்லியிருக்கக் கூடும்?
வீட்டுக்கு வெளியேவந்து
வானத்தை நோக்கினேன்
பாட்டி ஒரு நட்சத்திரமாய் மாறியிருந்தா
அன்றுதான் முதன்முதலாக உணர்ந்தேன்
இந்த வாழ்வின் ஒவ்வோர் அழுகையும்
மறைவில், ரகசியமாக நிகழ்த்தப்படுகிறது என

Odiya original and Engliah version :
Sitakant Mahapatra (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணனின் மரணம்

விதிவழி நிர்ணயிக்கப்பட்ட அம்பு
ஈற்றில் இலக்கை அடைந்தது
ஆதிக் காதலனும்
சூழ்ச்சிக்காரத் தூதுவனும்
மோகனச் சக்கரவர்த்தியும்
அர்ச்சுனன் சாரதியுமாகிய
இடைச்சிறுவனின் ஓய்ந்த பாதத்தை
அது தாக்கியது
வைகுந்தம் மீளக் காத்திருந்த நெடுங்காலம்
முடிவுக்கு வந்தது
கர்மத்தின் தொழிற்பாடும்

துரோகமும் பழிக்குப் பழியும்
நெஞ்சு வெடிக்கும் அமைதியும்
குருஷேத்திரத்தின் காரிருளின் பின் வந்த வைகறையும்
எல்லாம் முடிவுக்குவந்தன
துவாரகையிலிருந்து
கடல்கடந்து வீசிய பெருங்காற்று
மாம்பூக்களோடும் குயிலின் கீதத்தோடும் பெய்த
மழையின் ஈரத்தில் சுவறிய
வேடன் ஜரனுடைய ஓலத்தைச் சுமந்து வந்தது
குற்றத்தின் பாரத்தால் கூனிப்போய்
சிறைக்கோட்டங்களின் கருவறைகளிலும்
நேற்றைய குதூகலங்களிலும் ரஸங்களிலும்
கைவிடப்பட்ட நிலவெறிக்கும் ஆற்றங்கரைகளிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மினுங்கும் அத்தாணி மண்டபங்களிலும்
படையினர் அணிவகுக்கும் வீதிகளிலும்
பழைய சடங்குகளின் இருண்ட குரல்கள் அழுதன

மழிக்கப்படாத, வற்றிய,
ஏமாற்றமடைந்த, துக்கித்து வெளிறியமுகம்
கசங்கிய மஞ்சட் பட்டாடை
களவாடியுண்ட மண்ணும் வெண்ணெயும் மணக்கும் -
ஒரு காலத்தில் கோபியருடைய நெஞ்சைச் சுண்டியிழுத்த-
உதடுகள்
யமுனை ஆற்றங்கரையில்
நிலவில் நிகழ்த்திய காதல் லீலைகள்

பத்திரிகைகளில் மரண அறிவித்தல்கள்
"விபத்துமரணம்"
"நிரப்பமுடியாத இடைவெளி"
எனினும், இனி கணவர்கள் நிம்மதியாக உறங்குவர்
சகோதர யுத்தங்கள் இனி இரா
இதயங்களில் இருள் இராது
ஆத்மாவில் புற்றுநோய் இராது
இனம் புரியாத ஆனந்தம்
வானில் சோதியாய் எழுந்தது
"குற்றயுகம் முடிவுக்கு வந்தது"
எனக் காகம் கரைந்தது
சூரியன் மறைகையில்
ஜரனுடைய நெஞ்சில் இருள் திரண்டது
கண்ணீர் ஆறாய்ப் பெருகியது
அன்றுமாலை
அவசரக் கூட்டத்தில்
அகாலமரணத்துக்கு அநுதாபத் தீர்மானம்
இன்னொரு பொது விடுமுறை அறிவிப்பு

Odiya original and English version :
Sitakant Mahapatra (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டு

ஊரின் முகத்தில் பால் வழிந்து கிடக்கிறது
நிலவு
வருவாயா, கடற்கரைப் பக்கம் போய்வருவோம்
என்கின்றேன்
எப்படி வருவதாம்?

நேற்று ஊரில் மீன் மலிந்து
தெருவுக்குத் தெருநிறைய
வாங்கிப் பொரித்து
உங்களுக்காய் அதற்குள்
பெரிய வெங்காயமும் வெட்டிப்போட்டு
வைத்திருக்க

வருவீர்கள் பசியாற என்று
தலைவாசல் முன் தென்னைமர அடிக்கு
நீரூற்றி புழுதி அடக்கி
மாமரத்தின் சருகு கூட்டி
வாசலெல்லாம் மினுக்கி

மனம் வைத்துச் சாப்பிடணும்
கோழி வந்து வாசலுக்குத் திரியாமல்
கூட்டுக்குள் போட்டு அடைத்து

எடுபிடியாய் நானிருக்க
வந்த உங்களுக்கு பரிமாறப் போனால்
இந்த மணம் குடிச்சான் பூனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈன்ற குட்டியைக் கொண்டுவந்தே
நாம் படுக்கும் கட்டிலுக்கு அடியில் வைத்தது

பூட்டுப் பழுதாக
பூட்டாமல் நான்
சாத்தி வைத்த கதவாலே போய்
பொரியலுக்கு வேலை பார்த்து
போனதன் பிறகும்
இதனை நம்பலாமா
கோழி முட்டை உண்டு
ஏறி உடைத்துவிடும்

உடைந்த முட்டைக்குள்
எண்ணெய் ஊற்றிப் பொரித்துவிடும்

பிட்டுக் குழலில் மாவை யள்ளிப் போடும்
தள்ளத் தெரியாமல் தன் தலையை ஓட்டி நாசமாக்கும்

நான் வேலை செய்யும்போது
பார்த்திருந்தே பழகியது
கறிமணக்க வாய் ஊறித் துப்பியது
பூட்டைத் திருத்துங்கள்
என்று நீ ஒரு படலத்தை விரிக்க
நிலவைக் காணவில்லை

அதன் வீட்டு நினைப்பு வந்ததோ
எந்தச் சட்டிக்குள் எதை வைத்து மூடாமல்
மனுசி புறப்பட்டாள் ஊர் பார்க்க
வானமெல்லாம்
ஆக்கிய மீன் துள்ள
நமது பூட்டும் இன்று பழுதாகிப் போச்சு

Tamil original : Solaikili (Sri Lanka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருந்தகையே, உமது ஆக்ஞை!

உமது உத்தரவுப்படியே
எல்லாம் நிறைவேற்றியானது பிரபோ,
நாவை அறுத்தோம்
மொழி மறைந்தது
பாதங்களைத் துண்டித்தோம்
நிலம் தொலைந்தது
விழிகளைப் பறித்தோம்
ஆகாயம் காணாமலானது
குறிகளை வெட்டினோம்
யோனிகளைக் குதறினோம்
தலைமுறை ஒழிந்தது.
பேரழிவிலிருந்தும் தப்பிய
ஒற்றை யொற்றை உதிரத் துளிகள்
மண்ணில் தெறித்து
தெறித்த மண்ணெங்கும் புதிதாய்ப் பிறந்தனர்
நம் கணக்குப் பிழைத்தது அங்கே
எனவே பிரபோ,
உமது ஆணையை
புதுப்பித்துப் பூர்த்தியாக்கினோம்.
பசித்தழும் பிஞ்சு உதடுகளுக்கும்
வற்றிய முலையின் காம்பில் துளிர்த்த
செவ்வெள்ளைப் பாற்சொட்டுக்கும் இடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தின் வன்கரங்களை ஊடுருவவிட்டோம்
கொங்கைகள் திருகி எறியப்பட்டன
பூவிதழ்கள் கசக்கிப் பிடுங்கப்பட்டன
துயர் மறக்க இணைதேடி விறைத்த குறிக்கும்
கருணையுடன் கசிந்த அல்குலுக்குமிடையில்
சீருடைப் பிசாசுகளைக் கூத்தாடவிட்டோம்
புணரத் தடைவிதித்தும் புணர நிர்ப்பந்தித்தும்
உடலின் சங்கீதம் சிதைக்கப்பட்டது

மழலைகளை முதுமையடைந்த சிங்கங்களுக்கும்
கிழங்களை இளம் புலிகளுக்கும் இரையாக்கினோம்
ஊர் துப்புரவானது
அவ்வாறாக
உமது ஆக்ஞைப்படியே
நாமன்றி யாருமில்லாத ஒரு பூமியை
வென்றெடுத்திருக்கிறோம் பிரபுவே,
ஒரு பிடி மண்ணும்
ஒரு துளிரத்தமும்
எடையிலும் நிறையிலும் விலையிலும் சமம்
அதுதானே பெருந்தகையீர் வரலாறு?

Tamil original : Sukumaran (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறக்கு முன்பே மரணத்தைத் தழுவிவிட்டேன்

(2016 ஜுலை 1ஆந் திகதி நிகழ்ந்த குல்ஷான் படுகொலையிற் கொல்லப்பட்ட சிமோனா மொன்ரி என்ற இத்தாலிய கர்ப்பிணியின் பிறக்காத குழந்தை நினைவாக)

என் பிறப்புக்கு முன்பே நான் மரணத்தைத்
தழுவிக்கொண்டேன்
எனக்கென்று சொல்ல நிலமில்லை, மொழியில்லை,
நாடில்லை
நன்மை தீமை, சமயம் சமயமின்மை என்ற பேதமில்லை
எனக்கு!
வாழ்க்கையின் பயங்கர சித்திரத்தைக் கண்டு
பிறக்குமுன்பே என் அழுகையை விழுங்கிவிட்டேன் நான்
என் முதற்பெருமூச்சு இவ்வுலகின் சூழலை
நஞ்சாக்கவில்லை
என் தாய் மண் தந்த முதல் வெகுமதி என் கடைசி மூச்சு!

தாயே நீ மட்டுமே என் ஆடு களம், என் கல்விக்கூடம்,
என் சவப்பெட்டி
நான் கண்திறக்கு முன்பே
கொலையாளியின் நகங்கள்
என் கொப்பூழைக் கிழிப்பதைக் கண்டேன்
என் செவிகள் உருவாகு முன்பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பாடசாலை மூடும் மணியோசையைக் கேட்டேன்
பள்ளிவாசலின் மினாரத்துக்கள் மீதும்,
கோயிற் கோபுரங்கள் மீதும்,
தேவாலய விமானங்கள் மீதும் எதிரொலித்து
அவ்விசித்திர ஒலி மெல்ல ஓய்ந்தது
எனக்கு வாய்த்த முதற் படுக்கையே
என் இறுதிப் படுக்கையாயிற்று
என் அன்னையின் கருப்பையே என் சிறு வீடாயிருந்தது
அங்கு கூட இருள் இறங்கியது
அன்னையின் கொப்பூழ் கொடியைப் பற்றியபடி
குருதியாற்றில் மிதக்க முயன்றேன்
என் சின்னஞ்சிறிய கையும் அதன் விரல்களும்
ஆதாரம் எதையும் பற்றவில்லை
இன்னும் திறக்காத என் கண்கள்
குர்ஆனும், பைபிளும், கீதையும், திரிபிடகமும்
மரண சங்கார குருதிப் பெருக்கில் மிதக்கக் கண்டன!

எந்த மொழியின் புனித அரிச்சுவடியையும்
என்னால் வாசிக்க முடியவில்லை
பிறக்குமுன்பே மரணத்தைத் தழுவிக்கொண்டேன் நான்
என் தாயின் கருவறையே என் கல்லறையாய்
என் முதற்சவப்பெட்டியாய், என் முதல் ஈமமும் ஆயிற்று
மனித இனத்தின் இப்பூமி பற்றி எரிந்தது
என் இரத்தத் துளிகளால்
அதன் தாகத்தைத் தீர்க்க முடியவில்லை!

Bengali original : Tarik Sujat (Bangladesh)
English translation : Mohammad Nurul Huda

University of Peradeniya
13 JUN 2019
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதன் பின்பு

என் சகோதரி
அற்புதமான தாகூர் கீதங்கள் பாடுவாள்
சீமோன் த புவாரை வாசிப்பது அவளுக்கு மிகவும் பிடிக்கும்
தன் நண்பகல் குளிப்பையம் மறந்து
கார்ல் மாக்ஸ், கோர்க்கி, ரோல்ஸ்ரோய்,
மானிக் நாவல்களில் மூழ்குவாள்

பழைய நினைவுகளை மீட்ட விரும்பினால்
லோறா என்கோல்ஸ் வைல்டரைக் கைவிடாள்
போர் பற்றிய நாடகம் ஒன்றைப் பார்த்து
அவள் பாதியிரவு அழுது கொண்டிருந்தது ஞாபகம்

என் சகோதரி
அற்புதமான கவிதை வாசிப்பது வழக்கம்
அவளைக் கவர்ந்தவை ஷங்கா, நிரேன்,
நெரூடா, யெவ்துஷென்கோ
என் சகோதரிக்குக் காடு பிடிக்கும்,
பூங்காவல்ல
சிற்பத்தில் அவளுக்கிருந்த ஈடுபாட்டால்
ஒரு முறை பாரிஸுக்கு ரிக்கெற் வாங்கிவிட்டாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது என் சகோதரி தன் குறிப்புப் புத்தகத்தில்
நுணுக்கமான காய்கறிக் கணக்கு எழுதுகிறாள்
இப்பொழுதெல்லாம் நகைகள் அணிந்து
பெருமையாக உலாவுகிறாள்
தான் இப்பொழுது அரசியல் பற்றிச் சிந்திப்பதில்லை
என்று பெருமையாகச் சொல்கிறாள்
பண்பாடாவது மண்ணாங் கட்டியாவது!
அவையெல்லாம் பொருட்டல்ல, அவளுக்கு
அவளுடைய சித்தாரில் தூசி படிகிறது
அவளுடைய தம்பூராவில் சுண்டெலிகள் வாழ்கின்றன
இப்பொழுது புத்திசாலித்தனமாக
பொருள்கள் வாங்கி வருகிறாள்
பீங்கான் சாமான், உடன் கயல் மீன்
விலையுயர்ந்த விரிப்புக்கள்!

Bengali original : Taslima Nasrin (Bangladesh)
English translation : Carolyne Wright

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மாவிடம் சேகரமாகிய முத்தங்கள்

நேற்றுக் கூட
அம்மா
எனக்காக ஒருபிடி திரளைச்சோறு
குழைத்து வைத்திருந்தாள்
நான் வருவேனென்று.

அவளிடம் சேகரமாயிருக்கும்
எண்ணங்களுக்கு வார்த்தைகளேயில்லை.
எல்லாப் பாரத்துக்கும்
அவளே சுமைதாங்கி
அவர்கள்
எங்கள் வீடு உடைத்து
போத்தலால் அப்பாவைக் காயப்படுத்தி
அம்மாவும் நாரியில் அடிவாங்கி அலறியபோது
வேலிப்பொட்டால்
எங்களை இழுத்துக் காத்த
பெரிய மாமி சொல்லக் கேட்டிருக்கிறேன்
பெற்றெடுத்த கணத்திலும் முன்பு
எங்களுக்காய் சேகரித்து வைத்திருந்த
முத்தங்கள் பற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் சொல்வது பொய்யெனத் தெரிந்தும்
ஆயிரம் வார்த்தைகள் கூறியும் காத்திடுவர்
எங்கள் தாயர்.
ஊரானுக்கு ஊதாரியென்றாலும்
அவளுக்கு உயிர்க்கொடி.
நள்ளிருளிலும் தனித்திருந்து கலங்குவாள்.
தாய்மைக்கு வார்த்தைகளேது?

என் அம்மாவின் புன்னகை அழகு
அவளின் அழுக்கு அழகு
அவளின் மனசு அழகு

எனக்காகவும்
என் சகோதரர்களுக்காகவும்
தன் பேரப்பிள்ளைகளுக்காகவும்
அம்மாவிடம் இன்னமும் சேகரமாயிருக்கின்றன
அன்பு ததும்பும் முத்தங்கள்.

Tamil original :Thuvarakan (Sri Lanka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திபெத்

திபெத்திலிருந்து வந்துள்ள லாமாக்கள்
மந்திரங்களை முணுமுணுத்தபடி
சுற்றித் திரிகிறார்கள்
அவர்களுடைய கோவேறு கழுதைகள்
தோட்டங்களுக்குள் நுழைகின்றன
அவை மறிகோல்ட் மலர்களை உண்பதில்லை
ஒரு மறிகோல்ட் பூவில்
எத்தனை பூக்கள் அப்பா?
திபெத்தில் மழைக்காலமாயின்
இங்கே, எமக்கு என்ன காலம்?
திபெத்தில் மூன்று மணியாகும்போது
இங்கே எத்தனை மணி?
திபெத்தில் மறிகோல்ட் மலர்கள் உண்டா, அப்பா?
லாமாக்கள் சங்கு ஊதுவதுண்டா, அப்பா?
அப்பா,
கம்பளி போர்த்த லாமாக்கள்
இருளில் ஓடித் திரிவதை
என்றாவது கண்டிருக்கின்றீர்களா?
மக்கள் செத்தால்
புதை குழிகளின் நாற்புறமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாமாக்கள் தலைவணங்கி நிற்பர்
அவர்கள் மந்திரம் சொல்வதில்லை
திபுற்
திபுற் திபுற்
திபுற் திபுற்
திபுற் திபுற்
என ரகசியமாகச் சொல்வர்
இரவெல்லாம் அழுவர்
அப்பா, எங்களைப் போலவே
லாமாக்கள் அழுவதுண்டா?

Hindi original : Uday Prakash (India)
English transaltion : Robert A.Hueckstedt

University ... Vavuniya
13 JUN 2019
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன சபலம்?

1
விடியற்காலை
என் முன்னே
முற்றம் பாரிஜாத மலர்களால்
போர்த்தப்பட்டிருக்கிறது
வெண்மையான லேசான
பூ ஒவ்வொன்றும்
நிலத்தில் உதிர்கிறது
அமைதியாக, மெதுவாக
தன் பற்றுக்களை எல்லாம் துறந்து!
ஆனால் அடுத்தநாள் காலை
மீண்டும் பூக்கின்றன
தம் இளஞ்சிவப்புக் காம்புகளைக் காட்டி
போதையேற்றும் வாசனையுடன்
அவற்றுக்கு என்ன சபலம்?

2
இரவு முழுவதும் தம் கூடுகளில்
கதகதப்பாக இருந்த பறவைகள்
விடியற்காலை
வானைக் கிழித்து மேல் எழுந்து
நாள் முழுவதும் பூமியை அளக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு, மாலையில்
அதே கூட்டுக்குத் திரும்புகின்றன
அவற்றுக்கு என்ன சபலம்?

3

சவச்சாலைக்கு வெளியிலிருந்து
பெயர் அழைக்கப்படுகிறது
வண்டி ஒரு பிணத்தை உருட்டி வருகிறது
தீயில் முழுகும் முன்
பெயரால் அடையாளம் காணப்படுகின்ற
கடைசிச் சந்தர்ப்பம் இது.

நிலைமை அதுவாக
பகட்டிலும் பாட்டிலும்
மனிதன் ஏன் ஆசைப்படுகிறான்?
அது என்ன சபலம்?

Bengali original and English version :
Dr. Varsha Das (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் நடந்து கொண்டிருக்கும்வரை

யாரோ ஒருவர் என்னைத் தொட்டார் இங்கு
யாரோ ஒருவர் என்னைத் தொட்டார் அங்கு
இருந்தாலும்
அத்தீண்டல்கள்
எனக்கு இன்பம் தருகின்றன
இன்று கூட
புல்லின் இதழ்களின் மீதுள்ள
காலைப் பனித்துளிகள் போல
அவை பசுமையாய் உள்ளன

ஆனால் ஒவ்வொருவராக
அவர்கள் ஒவ்வொருவராக
சிலர் இவ்வுலகின் தூர இடங்களுக்கு
வேறுசிலர் இவ்வுலகுக்கும் அப்பால்

ஒருவர் கதை சொன்னார்
ஒருவர் கவிதை படித்தார்
ஒருவர் மண்வாசனையைப் பூசினார்
திறமைசாலி ஒருவர்
தொடுவானத்தின் வண்ணக் கோலங்களைத் தீட்டினார்

நானோ
என் இதயத் தறியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடுகளிலும் பாவுகளிலும்
கனவுகளை நெய்தேன்
அவை அனைத்தையம் காதலித்தேன்
ஒரு நாள் திடீரென
புயல் அடித்தது....
என் தறியும்
என் துணியும்
என் வண்ண நூல்களும்
சுள்ளிக் குவியல் போல மேலே பறந்தன
அவை எங்கும் சிந்திக் கிடந்தன
சில என் புயங்களைக் குத்தின
சில என் மார்பை உரசின
வேறுசில என் கன்னங்களைக் கீறின

Bengali original and English version :
Dr. Varsha Das (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய வீடு

வெறலு, அறலியா மற்றும் ஆனைக்கொய்யா மரங்களுக்கு
நடுவே
பழைய வீடு நிற்கிறது
அழுகின்ற சுவர்கள்
உரிகின்ற வர்ணப் பூச்சுக்களிடையே
அமைதியாய்
பாவு பலகையற்ற கூரையின் கீழ்
என் பிள்ளைப் பருவத்துக்கு கருக்குகளாகிய
சிலந்தி வலைகளையும்
நாய் மயிரையும்
மண்புகட்டு அடுப்பில்
உணவு வேகும் மணத்தையும்
இடையிடையே வீசும்
நா மலர்களின் வாசனையையும் சுமந்தபடி

பழைய வீடு இப்பொழுது மௌனம் பூண்டுள்ளது
நாய்களோடும் பூனைகளோடும்
எப்போதாவது
பியானோவை விரல்களால் தடவி
பீதோவனுடன் மல்லுக்கட்டும்
தன் மாணவியோடும் மட்டுமே உரையாடும்
என் அம்மா முதுமை அடைவதைப் பார்த்தபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா அண்மையில் கொள்வனவு செய்தது
ஒரு குயில் மணிக்கூடு
வீடு அமைதியாகத்தான் இருக்கிறது
மணித்தியாலத்துக்கு ஒருமுறை
கண்ணைப் பறிக்கும் அவ்வண்ணப் பறவை
வெளியே வருகிறது
ஒவ்வொரு முறையும் ஒரு வித்தியாசமான இசையுடன்

பழையவீட்டில்
உறக்க ஒலித்தபடி
நகர்கிறது காலம்

English original :
Vivimarie V. Medawattegedara (Sri Lanka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் பரப்பும் வீடியோ

ஒவ்வொரு தடவையும்
ஒரு காயத்தைச் சொறியும்போது
'சுள்' என்று வலிக்கிறது
பல பளபளக்கும் காயங்கள் கொண்ட
தாய் நாட்டை நெருங்க
ஒரு திறமை வேண்டும்
நாம் எட்டிப் பார்க்கும் ஒவ்வொரு காயமும்
தெருவோரம் வைத்திருக்கும் பயஸ்கோப் பெட்டிபோல
ஒவ்வொரு தடவையும் நாம் பார்க்கும்போது
எமக்கு ஊறு, நோ உண்டாகிறது,
குருடாக வாய்ப்புண்டு
என் தாய் நாட்டின் வெண்மையான, வெளிறிய
மேடு பள்ளமான வீதி
துடிதுடிக்கும் அதன் குடல்போல
சன்னங்களைத் துப்புகிறது

அச்சம்
இருளும், மூடுபனியும் உண்டாக்கும் நடுக்கம்
உள்ளே அதிரும் நாடு
என் தாய் நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் காயங்களிலிருந்து
நீரும் குருதியும் பொசியும்
தோலால் ஆன தண்ணீர் மொந்தைபோல

அன்னை இந்தியா ஒவ்வொரு தடவையும்
ஆடை களையப்படும்போது
பிள்ளைகளாகிய நாங்கள்
பரவசமடைகிறோம், விம்முகிறோம், ஆர்ப்பரிக்கிறோம்!

Bengali original and English version –
Yashodhara Ray Chaudhuri (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகங்கள்

காகங்கள்
கண்டதுக்குள் எல்லாம் - தம்
சொண்டுகளைச் செருகும்
காகங்கள்,
அவலட்சணமே கவசமாக உலாவரும்
காகங்களைக்
குழந்தைகள் கொஞ்சுவதில்லை
அவை
மரத்தில் அமர்கையில்
கழுகுகள் அமைதிதேடி
ஒதுங்கிப் போய் விடும்

உப்பரிகையில் அமர்ந்தபடி
போக்குவரத்தை விமர்சிக்கும்
காகங்கள்
அவர்களுடைய கூட்டத்தின் ஆயுதம்
பேச்சு, பேச்சு, சதா பேச்சு
அதை
அவர்களுடைய கறுத்த மேலங்கியாலும்
மறைக்க முடிவதில்லை

விண்ணிலிருந்த விழும் - ஒரு
நட்சத்திரம் பற்றிய விவாதத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவேசமுற்றவை போல்
திடீரென்று உரத்துக் கரைந்து
இரவின் அமைதியை
அவை குலைக்கக் கேட்டிருக்கிறேன்

ஆதாரம் கிடைக்கும்போது
விஞ்ஞானிகள் போல
ஆய்வில் மூழ்கினாலும்
அவர்களுடைய விஜயங்கள்
பூஜ்யத்தில் முடிவதைக் காண்கையில்
அவை
தீவிர அர்ப்பணிப்புள்ள
அரசியல்வாதிகளாகத் தென்படுகின்றன!

English original : Zulfikar Ghosh (British India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர்கள்

1. **அபேசிங்ஹா.W.A-** கவிஞர், விமர்சகர், புனைகதையாளர், இசைப் பாவாணர், இலக்கிய, சமூகப் பிரச்சினைகள் இவர் பாடுபொருள்.

2. **அபி.N.சுபேதி-** ஆங்கிலத்திலும் நேபாளியிலும் எழுதுபவர். 13 கவிதை நூல்களும் கலை, விமர்சனக் கட்டுரைகளும் வெளியிட்டவர். நாடகாசிரியர், இயக்குநர். காத்மாண்டுவின் திரிபுவன் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்துறைத் தலைவராயிருந்தவர்.

3. **அத்தியாஷா தாஸ்** - ஒறிய, ஆங்கில மொழிகளில் கவிதையும், சிறுகதையும் எழுதுபவர். ஒறியாவின் இளைய தலைமுறை எழுத்தாளர்.

4. **அஜந்தா** - (1929 - 1998) இயற்பெயர் பெருமார்த்தி விஸ்வநாத சாஸ்திரி. மேலைக் கோதாவரி மாவட்டத்தில் கேஸன்குர்ரு என்ற ஊரில் பிறந்தவர். ஆந்திரப் பிரதேஷ் தினசரி ஒன்றின் ஆசிரியராய் இருந்தவர். 1947இல் சாகித்திய அக்காதெமி பரிசு பெற்றவர்.

5. **அஜந்தகுமார்.த-** ஈழத்தின் கரவெட்டியைச் சேர்ந்த இவர் யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ் முதுதத்துவமாணிப் பட்டதாரி. கரவெட்டி பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி அலுவலராகப் பணியாற்றுகிறார். "ஒரு சோம்பேறியின் கடல்", "நான் அவளுக்கு ஒரு கடலைப் பரிசளித்தேன்" ஆகிய கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

6. **அத்தியா தாவூத்** - முன்னணி ஹிந்திக் கவிஞர். பாகிஸ்தானிய சமூகத்தில் எவ்வாறு பெண்கள் ஒடுக்கப்படுகின்றனர் என்பதை உரத்துச் சொல்பவர். ஆறு நூல்கள் வெளியிட்டுள்ளார். இவர் ஆக்கங்கள் ஜேர்மன், ஆங்கில மற்றும் உருது மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. அத்தியா சிந் ஆதீப் விருது பெற்றவர்.

7. **அனார்** - இயற்பெயர் இஸ்ஸாத் ரிஹானா முகம்மது அஸீம். கிழக்கிலங்கையின் சாய்ந்தமருது இவர் சொந்த ஊர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓவியம் வரையாத தூரிகை', 'எனக்குக் கவிதை முகம்', 'உடல் பச்சை வானம்', 'பெருங்கடல் போடுகிறேன்', ஆகிய கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். பல விருதுகள் பெற்றவர்.

8. **அநாமிகா** - பிரபல ஹிந்திக் கவிஞர்,புனைகதையாளர், மொழிபெயர்ப்பாளர், ஐந்து கவிதைத் தொகுதிகள், இரு நாவல்கள், ஒரு சிறுகதைத் தொகுதி படைத்தவர். பல விருதுகள் பெற்றவர். தில்லிப் பல்கலைக்கழகத்தின் சத்தியவதி கல்லூரி ஆங்கிலப் பேராசிரியராய் விளங்குகிறார்.

9. **அனூப்குமார்** - ஹிந்திக் கவிஞர். 'Hari kai vali Jheel', 'Vasant khojti chidiya'ஆகியவை இவர் கவிதைத் தொகுதிகள். சிறிது காலமாக மராத்தி மொழியிலும் கவிதை புனைந்து வருகிறார் அனூப்.

10. **அனுபம் றோஷி** - நேபாளத்தின் இலக்கிய வானில் ஒரு முக்கிய பெண் குரல். பெரும் வரவேற்புப் பெற்ற மூன்று நாவல்களும் ஒரு கவிதைத் தொகுதியும் படைத்தவர். 'சப்தாதீப்' என்ற இலக்கிய ஏட்டின் ஆசிரியர். பல விருதுகள் பெற்றவர்.

11. **ஆரியவன்ஸ** றணவீர- கவிஞர், மொழிபெயர்ப்பாளர், சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் விமர்சனங்கள் எழுதுபவர். பதினைந்து கவிதைத் தொகுதிகள் உட்பட 40 நூல்களுக்கு மேல் வெளியிட்டுள்ளார். ஸ்ரீலங்காவின் சப்றகமுவ பல்கலைக் கழகம் அண்மையில் இவருக்கு கௌரவ இலக்கிய கலாநிதி (D.Litt) வழங்கியது.

12. **பனிரா கிரி** - ஆங்கிலத்திலும் நேபாலியிலும் எழுதுபவர். காத்மாண்டுவின் திரிபுவன் பல்கலைக்கழத்தில் நேபாலி இலக்கியம் கற்பிக்கிறார்.

13. **பாலாமணி அம்மா** - கேரளத்தின் கொச்சியிலுள்ள புன்னையூர்க் குளத்தில் 1909இல் பிறந்த இவர் 2004 இல் காலமானார். மலையாளக் கவிதையின் பாட்டி என்று கொண்டாடப்படும் இவர் கேரளத்தின் பழமையான ராஜவம்சத்தில் வந்தவர். 1959 - 1980 வரை இவர் எழுதிய கவிதைகளின் தொகுப்பு 'நைவேத்தியம்'.

14. **பிமல் குஹா** - வங்க தேசத்தின் முன்னணிக் கவிஞர். இளம் வயதிலேயே வங்கதேசத்தின் பரிஷத் இலக்கிய விருது பெற்றவர். 14 கவிதைத் தொகுதிகள் உட்பட 23 நூல்களின் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. **தயா திஸ்ஸநாயக்க** - இலங்கையின் இரு மொழி எழுத்தாளர். ஒன்பது ஆங்கில நாவல்களும் 6 சிங்கள நாவல்களும் ஓர் ஆங்கிலக் கவிதைத் தொகுதியும் வெளியிட்டுள்ளார். சிங்கள நாவலுக்காக 'சுவர்ண புஸ்தக' விருதும் மும்முறை அரச இலக்கிய விருதும் பெற்றவர். e-நாவல் வெளியிட்ட முதல் ஆசியர்.

16. **டிலாறா ஹர்ஷெம்** - வங்கதேசக் கவிஞர். VOA இன் பங்ளா சேவையில் நீண்ட காலம் கடமையாற்றியவர். கவிதை நூல்கள் தவிர, 30 நாவல்களும் எழுதியவர்.

17. **டொமினிக் K.V**- கேரளத்தின் தோடுப்புழாவைச் சேர்ந்தவர். ஆங்கிலப் பேராசிரியர். Indian Journal of Post-Colonial Literatures என்ற ஆய்வேட்டின் ஆசிரியர்.

18. **கோபிசந்த்.P** - ஆந்திர பிரதேசத்தின் குண்டூரில் J.K.C கல்லூரியில் ஆங்கில இணைப் பேராசிரியராக இருக்கிறார். இரு மொழிப் புலமை உடையவர். சர்வதேசக் கவிதை விழாக்களை ஏற்பாடு செய்கிறவர்; விருதுகள் பெற்றவர்.

19. **ஹரஷித்** பாலா- வங்க தேசத்தின் சிட்டகொங் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்தில் B.A மற்றும் M.A பட்டங்கள் பெற்றவர். வங்க விடுதலைப் போரில் பங்குபற்றியவர். 25 நூல்களின் ஆசிரியர். வங்கதேச தொலைக்காட்சியின் ஆயுள் அங்கத்தவர்.

20. **ஹரிஷ் மீனாஷ்று** - குஜராத்தி எழுத்தாளர், மொழி பெயர்ப்பாளர். பின் நவீனத்துவக் கவிஞர் என அறியப்பட்டவர். இவர் படைப்புக்கள் ஹிந்தி, மராத்தி, மலையாள, கன்னட மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. 'பிரதிப்பதா' என்ற கவிதைத் திருவிழாவின் முக்கிய ஒழுங்கமைப்பாளர்.

21. **ஜயந்த மஹாபத்ர** - இலக்கிய உலகில் மிக்க மதிப்புப் பெற்ற கவிஞர். இவர் கவிதைகள் புகழ்பெற்ற உலக இலக்கிய ஏடுகளில் வெளிவந்துள்ளன. 2009 இல் SAARC இலக்கிய விருதளித்துக் கௌரவிக்கப்பட்டவர்.

22. **ஜெயசீலன். த** - ஈழத்து நல்லூரைச் சேர்ந்தவர். விஞ்ஞானப் பட்டதாரி. இலங்கை நிர்வாக சேவையில் பணிபுரிகிறார். 'கனவுகளின் எல்லை', 'கைகளுக்குள் சிக்காத காற்று', 'எழுதாத ஒரு கவிதை', 'புயல் மழைக்குப் பின்னான பொழுது' ஆகியவை இவருடைய கவிதைத் தொகுதிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. **ஜர்னா ரஹ்மான்** - முப்பது ஆண்டுகளாக எழுத்துலகில் நிலைத்து நிற்பவர். 19 நூல்கள் வெளியிட்டிருக்கிறார்.

24. **கருணாகரன்** - 1963இல் இலங்கையின் வடக்கே இயக்கச்சியில் பிறந்தார். இதுவரையில் 'ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்', 'ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புக்கள்', 'பலி ஆடு', 'எதுவுமல்ல எதுவும்', 'ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள்' ஆகிய ஐந்து கவிதைத் தொகுதிகள் வெளியாகியிருக்கின்றன. ஊடகவியலாளர், கவிஞர், பத்தி எழுத்தாளர் எனப் பல நிலைகளில் இயங்கி வருகிறார்.

25. **கேஷப் சிக்தெல்** - ஆங்கிலத்திலும் நேபாலி மொழியிலும் கவிதை கட்டுரைகள் எழுதுபவர். மூன்று நூல்களின் ஆசிரியர். திரிபுவன் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறையில் துணைப் பேராசிரியராய் இருக்கிறார். நேபாளி எழுத்தாளர் சங்கத்தின் உபதலைவர். பல விருதுகள் பெற்றவர்.

26. **கிருஷ்ணா போஸ்** - மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கவிதை படைத்துவரும் வங்காளக் கவிஞர். ஆணாதிக்க சமூகத்தில் எவ்வாறு பெண்கள் ஒடுக்கப்படுகின்றனர் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுவதோடு அவர்கள் மேம்பாட்டுக்கான வழிவகைகளையும் முன்வைப்பார். மேற்கு வங்கத்தின் கஞ்ரப்பாரக் கல்லூரியில் வங்காள இலக்கியம் கற்பித்தவர்.

27. **க்ஷாமா கௌல்** - காஷ்மீரக் கவிஞர்

28. **குமார ஹெற்றியாராச்சி** - எட்டு கவிதைத் தொகுதிகள் வெளியிட்டுள்ள ஈழத்துக் கவிஞர். எண்பதுகளில் கவிதை உலகில் நுழைந்தவர். மனித உறவுகளுக்குரிய கவிதை மொழி ஒன்றுக்கான தேடலில் ஈடுபட்டிருப்பவர்.

29. **மஹ்பூப் சாதிக்** - வங்கதேசத்தின் முன்னணிக் கவிஞர். அறுபதுக்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். சமூக, பொருளாதாரக் காரணிகளால் ஒடுக்கப்பட்ட மக்களின் நிலையைக் கலாபூர்வமாக வெளியிட்டவர் சாதிக். இது தவிர, விமர்சகராகவும் அறியப்பட்ட இக்கவிஞர் பல விருதுகள் பெற்றவர்.

30. **மஹகம சேகர** - சிங்களக் கவிஞர், ஓவியர், அரச நுண்கலைக் கல்லூரியில் அதிபராய் இருந்தவர். இசைப் பாடல்கள் எழுதிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ் பெற்றவர். 'துன்மன் ஹந்திய' என்ற இவர் நாவல் திரைப்படமாக்கப்பட்டது.

31. **முகம்மது நூறுல் ஹுடா**- சர்வதேச புகழ்பெற்ற வங்கதேசக் கவிஞர், நாவலாசிரியர், மொழிபெயர்ப்பாளர். நாட்டாரியல் ஆய்வாளர், விமர்சகர், நாட்டின் அதியுயர் விருதான 'எக்குஷே பதக்' பெற்றவர். பங்ளாவிலும் ஆங்கிலத்திலும் எழுதுபவர்.

32. **மொனிக்கா றுவன் பத்திரான** - இளந்தலைமுறையின் சிங்கள முன்னணிப் பெண்கவி. மரபு யாப்பிலும் புதுக்கவிதையிலும் பரிசோதனை செய்தவர். ஆரம்பத்தில் சுய அநுபவங்களின் அடிப்படையில் எழுதியவர். பின் பரந்த சமூக, மற்றும் பெண்ணியப் பிரச்சினைகள் பற்றி எழுதலானார்.

33. **முரளிதரன் இ.சு** - இலங்கையின் வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்த கவிஞர். பட்டதாரி ஆசிரியர். நள-தமயந்தி கதையை நவீன கவிதை வடிவில் எழுதியவர். 'நுங்கு விழிகள்' என்பது இவருடைய 'ஹைக்கூ' தொகுதி.

34. **நாகசுசீலா** - இரு மொழிப் புலமையுடையவர். கவிஞர், பத்திரிகாசிரியர், மொழிபெயர்ப்பாளர். ஆசிரியர், பணியாளர், இல்லத்தரசிகளுக்காக, பட்டறைகள் நடத்துபவர். சுவரொட்டிகள், அஞ்சலட்டைகள் வடிவமைப்பதில் நிபுணர். ஆந்திரப் பிரதேசத்தின் குண்டூரில் J.K.C கல்லூரியில் இணை ஆங்கிலப் பேராசிரியராகப் பணி புரிகிறார்.

35. **நஜிப் மணலாய்** - ஆப்கானிஸ்தானின் காபூலில் பிறந்தவர். ஃப்ரெஞ்ச் தேசிய மொழிகள் நிறுவனத்தில் பஷ்ரோ மொழி ஆசிரியராகவும், மென்பொருள் பொறியியலாளராகவும் கடமையாற்றியவர். தற்பொழுது தேசியப் பாதுகாப்புக் கவுன்ஸிலில் கலாசார விவகாரப் பணிப்பாளராக விளக்குகிறார். கவிதை, புனைகதை, அரசியல் கட்டுரைகளை பஷ்ரோ, பாரசீகம், ஃப்ரெஞ்ச், ஆங்கில மொழிகளில் எழுதுகிறார்.

36. **நீரவ் பட்டேல்** - குஜராத்தி தலித் இலக்கிய முன்னோடி. முதலாவது குஜராத்தி தலித் சஞ்சிகையாகிய 'ஆக்ரோஷ்' இன் ஆசிரியர். பல தலித் அமைப்புக்களில் அங்கம் வகிக்கிறார். குஜராத்தி தலித் சாகித்திய பிரதிஷ்தான் இன் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. **பத்மஜா ஐயங்கார்** - வங்கியாளராக, நகர நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிய பத்மஜா தற்போது விஜயவாடா மற்றும் அமராவதி கலாசார மையத்தின் இலக்கிய ஆலோசகராக விளங்குகிறார். 2015 தொடக்கம் ஆண்டு தோறும் Poetic Prism என்ற பாரிய பன்மொழிக் கவிதைத் தொகுதியை வெளியிட்டு வருகிறார்.

38. **பராக்கிரம கொடித்துவக்கு** - எழுபதுகளில் முன்னணிக்கு வந்த சிங்களக் கவிஞர். சமூக அமைப்புப் பற்றிக் காரசாரமான விமர்சனங்களை முன் வைத்தவர்.

39. **சோ.பத்மநாதன்** - 'சோ.ப' என எழுத்துலகில் அறியப்பட்ட தமிழ்க் கவிஞர். மொழிபெயர்ப்பாளர். சொந்தக் கவிதைத் தொகுதிகள் 3, மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுதிகள் 3, குழந்தை சண்முகலிங்கத்தின் நாடகங்கள் 3, பர்மிய பிக்கு சொன்ன கதைகள், Sri Lankan Tamil Poetry, Tamil Short Stories from Sri Lanka முதலியவை இவர் ஆக்கங்கள். பல தேசிய விருதுகளும், மாகாண விருதுகளும் பெற்றவர்.

40. **பர்வீன் ஷக்கீர்** : பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் சமமாகப் புகழ்பெற்ற பெண் கவிஞர். இளவயதில் காலமானவர்.

41. **ப்ரீதா சந்திரன்** - இவர் கவிதைகள் தேசிய மற்றும் சர்வதேசக் கவிதைத் தொகுதிகளிலும் இந்திய கவிதைச் சங்கம் வெளியிட்ட பெண் கவிஞர்கள் தொகுதியாகிய 'சுவர்ண ரேகா' விலும் இடம் பிடித்துள்ளன.

42. **ப்ரேர்னா சிங்லா**- இவர் ஒரு பல் மருத்துவர். Roses & Rhymes என்ற Amazon கவிதைத் தொகுதியின் பிரதம ஆசிரியர் Poetry Champion of India (2015) போட்டியில் பரிசு பெற்றவர். போட்டிக்கென அவர் எழுதிய 'A scavenger waits' என்ற கவிதை இத்தாலிய மற்றும் கிரேக்க மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது.

43. **சாஅத் அஷ்ரப்** - முன்னணிக் கவிஞர். பாகிஸ்தான் அரசின் மூத்த இணைச் செயலாளராகப் பணியாற்றியவர்.

44. **சர்மத் சே.'.பாய்** - பாகிஸ்தானின் புகழ்பூத்த கவிஞர்' நாடகாசிரியர், பாகிஸ்தான் தொலைக்காட்சியோடு இணைந்து நாடகங்கள் எழுதித் தயாரித்தவர். Mughals of the Road என்ற ஆவணப்படமும் Fankar Gali என்ற வீடியோப்படமும் இவர் அளிக்கைகள். உப கண்டத்தில் மிக உயர்வாக மதிக்கப்படுபவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. **சங்ஜுக்தா தாஸ்குப்தா-** கவிஞர், விமர்சகர், மொழிபெயர்ப்பாளர். Dilemma, First Language என்பன இவர் கவிதைத் தொகுதிகள். வங்காளப் பெண்களின் சிறுகதைகளை மொழிபெயர்த்து Her Stories என வெளியிட்டவர். கல்கத்தா பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் கற்பிக்கிறார்.

46. **சங்கர குருப்பு-** ஆசிரியர், கட்டுரையாளர், கவிஞர், மொழி பெயர்ப்பாளர், 25 கவிதைத் தொகுதிகளும், மேகதூதம்,உமர்க்கயாம், கீதாஞ்சலி மொழிபெயர்ப்புக்களும் தந்தவர். சோவியத் நாட்டின் நேரு விருதும் (1967), ஞானபீட விருதும் பத்மவிபூ'ன் விருதும் (1968), கேரள சாகித்திய விருதும் (1961) பெற்றவர். 1968-1978காலப்பகுதியில் ராஜ்ய சபை உறுப்பினராக இருந்தவர்.

47. **சரத் அமுனுகம-** புதுக்கவிதை இயக்கத்தின் தீவிர விசுவாசி சமூகவியலாளர், ஸ்ரீலங்காவின் மூத்த அரச சேவையாளராக இருந்து அரசியலில் நுழைந்து மந்திரிப் பதவிகள் வகித்தவர் / வகிப்பவர்.

48. **சுமந்த மூகோபாத்யாய-** வங்காளிக் கவிஞர். வங்காளி இலக்கியத்தில் அழகியலும் அரசியலும் என்பது பற்றி ஆய்வு செய்யும் ஆசிரியர். இந்தியக் கவிதையில் நவீனத்துவத்தின் செல்வாக்கு இவர் அக்கறை செலுத்தும் துறை. மூன்று கவிதைத் தொகுதிகள் வெளியிட்டுள்ள சுமந்த வங்காள அக்காதெமி விருது பெற்றவர்.

49. **ஸுர்ஜித் பதார் -** பஞ்சாபிக் கவிதையின் பேர் சொல்லும் படைப்பாளி. பஞ்சாப்பின் வேதனைகளில் ஊறியது இவர் கவிதை. குருநானக் மற்றும் சூ.ஃபிக் கவிஞர்கள் எவ்வாறு நாட்டாரியலைப் பயன்படுத்தியுள்ளனர் என ஆய்வு செய்தவர். பஞ்சாபிக் கவிதை வரலாறு பற்றி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அளிக்கை செய்தவர். பல விருதுகள் பெற்றவர்.

50. **சச்சிதானந்தன்.K -** சாகித்திய அக்காதெமியின் முன்னாள் செயலாளர். மலையாளத்திலும் ஆங்கிலத்திலும் எழுதுபவர். கவிஞர், விமர்சகர், மொழிபெயர்ப்பாளர், FOSWAL வெளியிட்ட பல தொகுப்புக்களின் இணை ஆசிரியர். 'சச்சி' 22 கவிதைத் தொகுதிகளும், 16 கவிதை மொழிபெயர்ப்புத் தொகுதிகளும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18 இலக்கிய விமர்சன நூல்களும் 4 நாடகங்களும் 3 பயண நூல்களும் வெளியிட்டவர்.

51. **சாவித்திரி ரஜீவன்** - மலையாள முன்னணிக் கவிஞர். 'சரிவு', 'தேகாந்தரம்' உள்ளிட்ட கவிதைத் தொகுதிகள் வெளியிட்டவர். அண்மையில் பெருந்தொகுப்பு ஒன்று வந்துள்ளது. குஞ்சுப் பிள்ளா ஸ்மாரக விருது, உதயபாரதி தேசிய விருது, கேரள சாகித்திய அக்காதெமி விருது ஆகியவை பெற்றனர்.

52. **சவித்தா சிங்** - பீஹாரில் பிறந்தவர். ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் எழுதுகிறார். இவர் படைப்புக்கள் இந்திய மொழிகளிலும் ஃப்ரெஞ்ச், ஜேர்மன், ஸ்பானிய மற்றும் டச் மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. இந்திராகாந்தி தேசிய திறந்த பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருக்கிறார்.

53. **ஷகீலா வஜாடி**- காபுலில் 1969 இல் பிறந்தவர். உக்ரெயினில் மருத்துவப் பட்டம் பெற்றவர். பல்கேறியாவில் பட்டப்பின் படிப்பைத் தொடர்ந்து அம்ஸ்ரடமில் M.D. பெற்றார். நெதர்லாந்தில் மருத்துவராகப் பணியாற்றுகிறார். இக்கவிஞர் தாரி மொழியில் கவிதை எழுதுகிறார்.

54. **ஷம்ஸுர் ரஹ்மான்** - வங்கதேசத்தின் தேசியக் கவி. 8 கவிதைத் தொகுதிகளின் ஆசிரியர். ஷேக் ஃபரீத் இன் சூஃபி கீதங்களையும், ஷேக்ஸ்பியரின் ஹம்லெற் ஐயும் வங்காளியில் மொழிபெயர்த்தவர். ஆதம்ஜி விருது, பங்ளா அக்காதெமி விருது, எக்குஷே பதக், ஸ்வாதி நாத விருது என்பன இவர் பெற்ற கௌரவங்கள்.

55. **சீதாகந்த் மஹாபத்ர**- 'ஒறிய மகாகவி'. சர்வதேசப் புகழ் பெற்றவர். இவர் நூல்கள், இந்திய மற்றும் அந்நிய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. வாய் மொழிக் கவிதைகள் மற்றும் கதைகள் எனப் பத்து இனக் குழுத் தொகுதிகள் வெளியிட்டுள்ளார். இனக்குழு (tribal) இலக்கியம் மற்றும் பண்பாடு பற்றி 26 நூல்கள் மற்றும் சொந்தக் கவிதைத் தொகுதிகள் 28 படைத்த இம்மகாகவி இந்திய சாகித்திய விருது குமரன் ஆசான் கவிதை விருது, சோவியத் நாட்டு நேரு விருது, பாரதீய ஞான பீட விருது, பத்ம விபூஷன் என எண்ணிறந்த கௌரவங்கள் பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. **சுகுமாரன்** - தமிழ்க் கவிஞர். ஆங்கிலத்திலும் மலையாளத்திலும் இருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்புச் செய்பவர். கப்றியேல் கார்ஸியா மார்க்குவெஸ் இன் 'One hundred years of Solitude' உம் பப்லோ நெருடாவின் 'One hundred Selected Poems' உம் இவர் முக்கிய மொழிபெயர்ப்புக்கள். சுகுமாரன் 'காலச்சுவடு' சஞ்சிகையின் நிறைவேற்றுப் பணிப்பாளர்.

57. **சோலைக்கிளி** - இயற்பெயர் உதுமாவெவ்வை முஹம்மது அதீக். இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் கல்முனையைச் சேர்ந்தவர். பத்துக் கவிதைத் தொகுதிகள் வெளியிட்ட சோலைக்கிளி நவீன கவிதையின் ஒரு திருப்பு முனையாகக் கருதப்படுகிறார். ஜப்பான் அரசின் வுங்கா விருது உட்பட பல விருதுகள் பெற்றவர்.

58. **தாரிக் சுஜத்** - விருது பெற்ற வரைகலை நிபுணர். முயற்சியாளர். எண்பதுகளில் கவிதைத் துறையில் நுழைந்த சுஜத் 'கிருத்தி பாஷ' உட்பட பல விருதுகள் பெற்றவர். சமகால சமூக - அரசியல் பிரச்சினைகளை மையப்படுத்தி எழுதும் இவர் ஐந்து நூல்களை ஆக்கியுள்ளார்.

59. **தஸ்லிமா நஸ்றின்** - வங்கதேச நாவலாசிரியர், சிறுகதையாசிரியர், கவிஞர், தீவிர பெண்ணியவாதி' பிரசாரகர், இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் '.'.பற்வா' விதிக்கப்படவே, இந்தியாவிலும், மேற்கிலும் கரந்து வாழ்கிறார்.

60. **துவாரகன்** - இயற்பெயர் சுப்பிரமணியம் குணேஸ்வரன். யாழ்ப்பாணத்துத் தொண்டைமானாறு இவர் சொந்த ஊர். ஆசிரியராகப் பணியாற்றுகிறார். 'மூச்சுக் காற்றால் நிறையும் வெளிகள்', 'அம்மாவிடம் சேகரமாகிய முத்தங்கள்' என்பன இவருடைய கவிதைத் தொகுதிகள்.

61. **உதய பிரகாஷ்** - ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் ஈராண்டுகள் கற்பித்தபின், இதழியல் மற்றும் திரைப்படத்துறைக்குத் தாவினார். இவர் படைப்புக்கள் இந்திய மொழிகளிலும் அந்நிய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. 8 நூல்களின் ஆசிரியர். 2009 இல் சார்க் விருது பெற்றவர்.

62. **வர்ஷா தாஸ்** - சம்ஸ்கிருதம், ஹிந்தி இரண்டிலும் முதுகலைமாணியும், கல்வியியலில் முனைவர் பட்டமும் பெற்றவர். பல ஒடிய இலக்கிய வடிவங்களை குஜராத்திக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்த்தவர். 'ஒடிய சாகித்திய தர்ஷன்' இவருடைய அண்மைய வெளியீடு. ஹிந்தியில் இவர் எழுதிய வானொலி நாடகத் தொகுப்பு 'சௌரஹ'.

63. **விவிமாறி V. மெதவத்தகெதற** - ஸ்ரீலங்காவின் திறந்த பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளர். இவருடைய கன்னிப் படைப்பான Nothing Prepares You ஆங்கில இலக்கியத்துக்கான மதிப்புமிக்க கிறேஷியன் விருது (2008) பெற்றது.

64. **யசோதரா ராய் சௌத்துரி** - மேற்கு வங்கத்தின் கொல்கத்தாவில் வாழ்கிறார். மெய்யியல் பட்டதாரி. வங்காளிக் கவிதைத் தொகுதிகள் பல வெளியிட்டுள்ளார். காதல், அந்நியமாதல், அரசியல் பற்றி அவர் கவிதை பேசும். ஃப்ரெஞ்சிலிருந்து வங்காளிக்கும் மொழிபெயர்க்கிறார். பல விருதுகள் பெற்றவர்.

65. **ஸுல்ஃபிகார் கோஸ்** - பிரிக்கப்படாத பிரித்தானிய இந்தியா (தற்பொழுது பாகிஸ்தான்) வில் சியால்கோட்டில் (1935இல்) பிறந்தவர்' ஹிந்து பம்பாயில் வளர்ந்தவர். தற்போது அமெரிக்கப் பிரஜை. கலாசார அந்நியமாதல் பற்றி நாவல், கவிதை, விமர்சனம் எழுதியுள்ளார்.

...radeniya
13 JUN 2019
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

699717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென்னாசியக் கவிதைகள்

சோ.பத்மநாதன் மொழிபெயர்ப்பு

இத் தொகுதியில் அடங்கியுள்ள 86 கவிதைகளும் சார்க் நாடுகளைச் சேர்ந்த 65 கவிஞர்களால் ஆக்கப்பட்டவை. இப் பிராந்தியத்து நவீன கவிதை முயற்சிகள் 'கொமன்வெல்த்' கவிதை எனத் தொடங்கி, 'பின் காலனியக் கவிதை' என வளர்ந்து, இன்று 'உலகக்கவிதை' என மலர்ந்துள்ளன.

அந்நியர் ஆட்சியுள் அகப்பட்டு அடையாளமிழந்த சார்க் நாடுகள் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மெல்ல மெல்ல விடுதலை பெற்று நிமிர்ந்த போதும், சாதி-சமய மோதல்களுக்கும் ஏழ்மை, அறியாமை, சுரண்டல், பெண்ணடிமை எனப் புதிய சவால்களுக்கும் எவ்வாறு முகம் கொடுத்து வந்துள்ளன என்பதை இக்கவிதைகள் பேசுகின்றன. எல்லைகள் தாண்டி இக்கவிக் குரல்கள் ஒளிப்பதுகாலத்தின் தேவை.

எழுத்துலகில் 'சோ.ப' என அறியப்பட்ட சோ.பத்மநாதன் கவிஞராக, பேச்சாளராக, மொழிபெயர்ப்பாளராக் தம்பெயர் நிறுவியவர். சொந்தக் கவிதைகள் மூன்று தொகுதிகளும், இசைப்பாக்களாக் ஐந்து இறுவட்டுக்களும் வெளியிட்டவர்.

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு இரண்டு கவிதைத் தொகுதிகளும் ஃப்ரெஞ்சிலிருந்து தமிழுக்கு ஒரு நெடும்பாவும் இவர் மொழிபெயர்ப்புக்கள்.

பர்மியபிக்குசொன்னகதைகள்' சாகித்திய விருது பெற்ற மொழிபெயர்ப்பு.

Sri Lankan Tamil Poetry, Tamil Short Stories from Sri Lanka என்பனவும் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் நாடகங்களும் சோ.ப ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவை.

SAARC இலக்கியவிழாக்களில் நான்குமுறை கலந்து கொண்ட சோ.ப, Goethe Institut என்ற ஜேர்மன் கலாசாரமையத்தினால் 51 தென்னாசியக் கவிஞர்களில் ஒருவராக இனங்காணப்பட்டு Poets Translating Poets விழாவுக்கு அழைக்கப்பட்டவர்.

750/-

ISBN 978-955-30-8568-9

எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவட் லிமிடட்

661, 665, 675, மருதானை வீதி, கொழும்பு 10.

தொலைபேசி: (011) 2685369, 2686925, 4-614904

godageem@slt.lk www.godage.com

9789553085689

NICE CREATIONS

Thennasia Kavithaikal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org